விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆனி 06 ஞாயிற்றுக்கிழமை (20.06.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 183

20 JUN 2010

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாந்தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

## புதிய பெற்றோலியக் களஞ்சியம் நாவற்குழியில் அமைக்கப்படும்

### யாழ்.வந்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புதிய பெற்றோலியக் களஞ்சியசாலை ஒன்று விரைவில் நாவற்குழியில் அமைக்கப்படவுள்ளதாகப் பெற்றோலிய வளங்கள் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, யாழ்.பிராந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் விசேட கூட்டம் ஒன்றை நடத்தினார்.

இதில் நாடாளுமன்ற பிரதிக் குழுக்களின் தலைவர் முருகேசு சந்திரகுமாரும் கலந்து கொண்டார். இதன்போது யாழ்ப்பாணத்தில் எரிபொருள்களின் விநியோகம் குறித்துப் பெற்றோலியக் கூட்டுத்தாபன யாழ்.பிராந்திய முகாமையாளர் சண்முகநாதன் அமைச்சருக்கு எடுத்துக் (20 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை விடவும் இந்தியாவில் அதிக சீனர்

### ஜெயலலிதாவுக்கு இலங்கை அரசு பதில்

(கொழும்பு)

இலங்கையை விடவும் இந்தியாவில் அதிகளவான சீனர்கள் தங்கியிருப்பதாக இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

வடக்குக் கிழக்கில் சீனர்களின் பிரசன்னம் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடும் என அனைத்து இந்திய திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளரும் தமிழகத்தின் முன்னாள் முதல்வ ருமான செல்வி ஜெயலலிதா விடுத்துள்ள அறிக்கைக்குப் பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் இதனைக் குறிப்பிட்டுள்ளது.


இலங்கையில் தங்கியிருக்கும் சீனர்களின் எண்ணிக்கையை விடவும் இந்தியாவில் அதிகளவானோர் தங்கியிருப்பதாகவும் இதனை ஜெயலலிதா நன்கு அறிவார் எனவும் ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித் (20 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கான தீர்வை ஜனாதிபதி விரைவுபடுத்த வேண்டும்

### நேற்றைய சந்திப்பில் அகாசி வலியுறுத்து

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை விரைவில் முன்வைக்குமாறு யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்திக் கூறினார். (20 ஆம் பக்கம் பார்க்க)



## வடக்கை அபிவிருத்தி செய்யாவிட்டால் அந்த மக்கள் வெறுப்படைவார்கள்

### ஐ.நாவின் தொழில்துறைப் பணிப்பாளர் எடுத்துரைப்பு

(கொழும்பு)

இலங்கையில் பல தசாப்தங்களாகப் போர் நடைபெற்ற வடக்குக் கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்தி நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் தொழில்துறை அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் கன்டே யுகெலா தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட யுகெலா இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

போரினால் பாதிக்கப்பட்ட பல ஆயிரம் மக்கள் தற்போதும் அடிப்படை வசதிகளின்றி துன்பத்தில் வாழ்கின்றனர். போரினால் பாதிக்கப்பட்ட வட பகுதியின் பொருளாதாரத்தில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லை.

உள்ளூர்ப் பொருளாதார வளர்ச்சிக்கும் தொழில்துறைகளின் அபிவிருத்திகளுக்கு மான பணிகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்கு எல்லா அமைப்புகளும் அரச நிறுவனங்களும் உதவிகளை மேற்கொள்ள வேண்டும்.

அது எவ்வளவு அவசியமானது என்பதை அவர்கள் உணர வேண்டும். இது நடைபெறும் என நான் நம்புகின்றேன்.

எமக்குள்ள (20 ஆம் பக்கம் பார்க்க)

## பால்மா விலை அதிகரித்தது

(கொழும்பு)

நேற்று நள்ளிரவு முதல் பால்மாவின் விலை அதிகரித்துள்ளதென நுகர்வோர் அதிகார சபை உத்தியோகபூர்வமாகத் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் 400 கிராம் பால்மா பைக்கெற் 19 ரூபாயினாலும் ஒரு கிலோ பால்மா பைக்கெற் 48 ரூபாயினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரித்துள்ளதாக நுகர்வோர் அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன் தற்போது சந்தையில் உள்ள பால்மா பைக்கெற்றுக்கள் அதில் பொறிக்கப்பட்ட விலையி (20 ஆம் பக்கம் பார்க்க)

## சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை

### அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையில் சில மாதங்களாக சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இந்திய மற்றும் இலங்கைக்கிடையில் வரித் தீர்வை இன்றி வர்த்தக சந்தைகளை ஊக்குவிக்கும் வகையில் சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடுமாறு கடந்த 2002 ஆம் ஆண்டு முதல் இந்தியா, இலங்கையிடம் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து வந்தது.

இந்த நிலையில் இலங்கையில் உள்ள கைத்தொழில் உற்பத்தியாளர்கள் இந்த உடன்படிக்கைக்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன் உடன்படிக்கை தொடர்பாக இந்தியா சென் (20 ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்புத் திருத்த யோசனை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில்

(கொழும்பு)

அரசியல் யாப்பில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கான யோசனைகளை அடுத்த மாதம் நாடாளுமன்றத்தில் முன்வைப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகார முறை, அரசியல் அமைப்பின் 17-வது திருத்தச் சட்டம், தேர்தல் முறைமை, அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல் போன்றவை தொடர்பில் இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

முதலில் இந்த யோசனைகள் அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தபின்னர் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இதேவேளை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான சட்டத் திருத்தங்களை அரசியல் யாப்பில் மேற்கொள்வதாயின் அதற்குப் பூரண ஆதரவை வழங்க ஐக்கிய தேசியக் கட்சி முன்வந்துள்ளது.

இந்த விடயத்தில் அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும் (20 ஆம் பக்கம் பார்க்க)

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# தமிழ்மொழித்தினப் போட்டி-2009

# தேசிய மட்ட போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் மொழித் தினப் போட்டிகள்-2009 நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம் பமானது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யில் நடைபெறும் தமிழ் மொழித் தினப் போட்டிகள் இன்று முடிபடை கின்றது.

இதில் நேற்று நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றவர் களின் விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் முறையே முத லாம், இரண்டாம், மூன்றாம் இடங் களைப் பெற்றவர்களின் பெயர் விபரம் வருமாறு,

**பாவோதல்**

பிரிவு-1 : செ.பிரியஞ்சனா-கல் முனை கார்மேல் பற்றிமா கல்லூரி, வி.அனுசியா-மன்னார் சித்திவிநாய கர் இந்துக்கல்லூரி, எஸ்.கஜனி-பண்டாரவளை த.ம.கல்லூரி.

பிரிவு-2: ந.மாதங்கி-திருகோண மலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, க.அட்சயன்-கொழும்பு டி.எஸ்.சேனநாயக்கா கல்லூரி, ர.பவதாரணி-நாவலப்பிட்டி கதிரே சன் இந்து மகளிர் கல்லூரி.

பிரிவு-3 : ர.சிவானியா-நாவலப் பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல் லூரி, பு.டிரூஷா-திருகோணமலை ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, ச.கலைப்பிரியா-கொட்டாஞ்சேனை நல்லாயன் மகளிர் ம.வித்.

பிரிவு-4 : ஐ.கிருஷ்ணதிவ்யா-தெமோதர கௌதம் த.ம.வி., ஏ.ஜி.எப்.ஸம்ஹா மருதமுனை அல் மனார் மத்தியகல்லூரி, செ.கோபிகா-உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.

பிரிவு-5 : ம.அனோஜா-கண்டி பெண்கள் உயர்தர பாடசாலை, பி.கிஷோமதி-உடப்பு தமிழ் மகா வித்தியாலயம், தெ.தட்சாயினி-வவு னியா த.மத்திய மகாவித்தியாலயம்.

**பேச்சு**

பிரிவு-1 : பே.மயூரி-வவுனியா இறம்பைக்குளம் மகளிர் கல்லூரி, த.விதுஷா மட்டக்களப்பு வின்சன்ட் மகளிர் உயர்தர பாடசாலை, ஆர்.பிரி யதர்சினி-தெகியோவிற்ற புனித மரி யாள் த.மகா.வித்தி.

பிரிவு-2 : ம.மோகனதாரணி-மானிப்பாய் மகளிர் கல்லூரி, ஐ.வாசிம் அத்னு-மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி, சி.துவாரகா-கொழும்பு இராமநாதன் இந்து மக ளிர் கல்லூரி.

பிரிவு-3:பி.சாயிசங்கீத்-ஊவாவிஞ் ஞானக் கல்லூரி, எம். எம். மபாஸ்-கபுகொள்ளாவ வீரச்சோலை முஸ் லிம் வித்தியாலயம், இ.சஞ்ஜீவ் கொடி காமம்திருநாவுக்கரசு ம.வித்தியாலயம்.

பிரிவு-4 : க.மாதுமை-திருகோண மலை சென் மேரிஸ் கல்லூரி, க.ஜீவ தக்ஷா-பண்டாரவளை ஹைலண்ஸ் த.ம.வித், சி.சாருகா-வவுனியா இறம் பைக்குளம் மகளிர் கல்லூரி.

பிரிவு-5 : சு.வினோஜா-மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, என்.தீபதர்சினி-ஹல்துமுல்ல விபு லானந்தா த.ம. வித்தியாலயம், ஆர்.திவ்யரூபி-மஸ்கலிய சென் ஜோசப் த.வி.

**இசையும் அசைவும்**

பிரிவு-1 : கு.பவித்திரா-யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை, ச.மதுராந்தக சர்மா-நாவலப்பிட்டி கதிரேசன் இந்து மகளிர் கல்லூரி, என்.ஆர்.எப்.றிஸ்மா-புத்தளம் செய் னப் பெண்கள் பாடசாலை.

**ஆக்கம் - எழுத்து**

பிரிவு-1: க.கிசோதரன்-பதுளை சரஸ்வதி கனிஷ்ட வித்., ஜே.எஸ்.சம் ரின் சதா-மாதம்பை அல் மிஸ்பா மு.ம.வித்., கே.கவின்மதுஷான்-கொத்மலை கலைவாணி த.வித்தி யாலயம்.

**ஆக்கத்திறன் வெளிப்பாடு**

பிரிவு-1 : மூ.துளசிகா-யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை, பு.சுமித்தா-கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, ஏ.பீ.எப். அகிலா-தெகியோவிற்ற நாப்பா வில மு.ம.வித்.

**கட்டுரை எழுதுதல்**

பிரிவு-2 : மு.ஐ.ஜெஸ்மிகா-திரு கோணமலை அல் ஹம்றா முஸ் லிம் ம.வித்தி, அ.சஞ்சயன்- கொழு ம்பு றோயல் கல்லூரி, எம்.எம். எஸ். அஸீரா- அரநாயக்க தல்கஸ்பிட்டிய மு.ம.வித்தி.

**நடனம் தனி**

பிரிவு-2 : சி.அபித்திரா-யாழ். இந்து மகளிர் கல்லூரி, வ.லுக்ஷா யினி கண்டி பெண்கள் உயர்தரப் பாடசாலை, க.கவித்திரா-பதுளை தமிழ் மகளிர் ம.வித்தியாலயம்.

பிரிவு-3 : பி.கீர்த்தப்பிரியா-பது ளை தமிழ் மகளிர் ம.வித்தியால யம், வ.ஸ்ரீதரா- யாழ். வேம்படி மக ளிர் கல்லூரி, எம்.துஷாரினி-நீர் கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி.

பிரிவு-4 : ம.லக்ஷனா-கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, இ.சவிஸ்னிகா-பதுளை தமிழ் மக ளிர் ம.வித்தி, ஸ்ரீ.மகிந்தபேசன்- வவுனியா தமிழ் மத்திய ம.வித்தி யாலயம்.

பிரிவு-5 : க.பவன்-இணுவில் மத்திய கல்லூரி, பி.சஜிகா-திரு கோணமலை மெதடிஸ்த பெண் கள்கல்லூரி, நா.ரந்திகா-வெள்ள வத் தை சைவ மங்கையர் வித்தியாலயம்.

**இசை தனி**

பிரிவு-2 : ஜே.சேஷயன்-மட்டக் களப்பு புனித மைக்கல் கல்லூரி, இரங்கநாதன் கீர்த்திகா-யா/புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, பா.நவர ஜித்தன்-கொழும்பு விவேகானந்தா கல்லூரி.

பிரிவு-3 : ஸ்ரீ.யதுர்ஷனா- திரு கோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர்கல்லூரி, லோ.சாயிலக்ஷ்மி-வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தி, சி.கஜேந்திரன்-பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி.

பிரிவு-4 : கெ.பிரவீண்-கொழும்பு றோயல் கல்லூரி, கு.மயூரதி-யா/ இந்து மகளிர் கல்லூரி, மு.திவிஜா வந்தி-பதுளை தமிழ் மகளிர் ம.வித் தியாலயம்.

பிரிவு-5 : பி.பிரவீணா-வெள்ள வத்தை சைவ மங்கையர் வித்தி, இ.சர்மிளா- திருகோணமலை உவர் மலை விவேகானந்த கல்லூரி, சி.உசேனி-வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி.

**வாசிப்பு**

பிரிவு-1:ஜிலாவண்யா-நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல் லூரி, ம.மிலெனி சிறிசாந்தி-மன் னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, எம்.என்.நப்ளா-உலுவிடிகே நாவின்ன முஸ்லிம் க.வித்தியால யம்.

பிரிவு-2 : அ.அஷோபிகா-திரு கோணமலை சிறிசண்முக இந்து மகளிர்கல்லூரி, இவிவேகா-கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, பா.சகானா-ஹற்றன் ஹைலண்ட் மத்திய கல்லூரி. (ந-3)


## ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 28 02 1933



ஆண்டவன் பிடியில் 19 06 2003

யாழ். கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும்
கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் கந்தையா சிவராசா (சின்னக்கிளி)**

(யாழ். மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை முன்னாள் ஊழியர்) திதி: நவமி

நல் இதயம் ஒன்று நடுவீதியில் சாய்ந்ததையா
கல் இதயம் கொண்ட காலன் கணத்தில் எடுத்தானையா
பல் இதயங்கள் பரிதவித்து நின்றதையா
சொல்லொணாச் சோகத்தில் ஆழ்ந்ததையா
என்றும் கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்கி
அஞ்சலிக்கிறோம்.

கட்டுவன் மேற்கு
20.06.2010

என்றும் பாசத்துடன்
அன்பு மனைவி சி.அன்னரத்தினம்
பாசமிகு பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(1738)

ஐங்கரன் திருமண சேவை

**மணமகன் தேவை**

UK Citizen 26 வயது,28 வயது, 35 வயது,கனடா Citizen 27 வயது, 31 வயது ,பிரான்ஸ் Citizen 29 வயது மணமகள்மார் உள்ளனர். நன்கு படித்த அறிவுள்ள மணமகன் மாரை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :-
T.P.: No : 00447508295863
00447904535905
Fax: 00442086720673 (U.K)

**மணமகள் தேவை**

எங்களிடம் UK Citizen 37 வயது, 35 வயது ,32 வயது ,28 வயது, Canada Citizen 37 வயது ,33 வயது,30 வயது,German Citizen 28 வயது ,27 வயது ,25 வயது ,Australia Citizen 34 வயது America Citizen 37 வயது France Citizen 30 வயது மணமகன்மார் உள்ளனர்.தகுந்த மணமகள்மாரை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :-
T.P.: No : 00447508295863
00447904535905
Fax: 00442086720673 (U.K)

(C-479)

ஐங்கரன் திருமண சேவை

**மணமகன் தேவை**

டென்மார்க் Citizen 12.03.1982இல் பிறந்த, உயர்குலம், இலக்கினத்தில் செவ்வாய், ஆயிலிய நட்சத்திரம், Nurse ஆக கடமையாற்றும் பெண்ணுக்கு தகுந்த பட்டதாரி மணமகனை எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :-
T.P.: No :- 00447508295863
00447904535905
Fax: 00442086720673 (U.K)

(C-479)

**மணமகள் தேவை**

யாழ்.கௌரவ, றோ.க.,7-ல் செவ்வாய் உள்ள அரச தொழில் புரியும் 31 வயதுடைய மகனிற்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளிற்கு:
0714624051

(1719)

## தவறிவிட்டது

திருமதி சாரதாதேவி மேரிதாஸன் ஆகிய எனது தே.அ.அட்டையும் (இல. 607040591V) கைத்தொலைபேசியும் சிறுதொகைப் பணமும் அடங்கிய கைப்பை 764 ஆம் இலக்க மினிபஸ்ஸில் யாழ் பஸ்நிலையத்திற்கும் அப்பலோ மருத்துவமனைக்குமிடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கணேசா உணவகம், இல. 19, பலாலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவும்படி கேட்டுக்கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்

(C-482)

## ARRUL GLOBAL EXPRESS

INTERNATIONAL COURIER & CARGO SERVICE



- உலக நாடுகள் அனைத்திற்குமான துரித தபால்கள் மற்றும் பொதிகள் சேவை [4 Working days]
- இலங்கையின் சகல பாகங்களுக்குமான துரித தபால்கள் மற்றும் பொதிகள் சேவை (24 hours)
- குறிப்பு : 5Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 30 % விஷேட கழிவு

aramex delivery unlimited
DHL WORLDWIDE EXPRESS
SkyNET



No 1, Brown Road
Jaffna
Telephone No : 021 222 6113
Email : arrulcom@gmail.com

(C-480)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர் திரு.செல்வமகேசன் அவர்களது தந்தையார்

**அமரர் வேலுப்பிள்ளை இளஞ்சிங்கம்**

அவர்களது மறைவை ஒட்டி ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
யாழ். செங்குந்த இந்துக்கல்லூரி

(C-477)

## நூல் வெளியீட்டு விழா

சண்டிலிப்பாய் எஸ்.கவிதரன் எழுதிய "இதோ என் முகவரி" கவிதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி பிரதான மண்டபத்தில் கல்லூரியின் ஆசிரி யர் என்.குகபரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் அம்பலம் ஆசிரியர் தபின் வெளியீட்டுரையையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் கவிஞர் மா.பா.மகாலிங்கசிவம் ஆய்வுரையையும் வலிகாம கல்வித்திணைக்கள ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் கந்த சத்தியதாசன் ஆசியுரையையும் வழங்கவுள்ளனர். (6)

## படுகாயமுற்ற இளைஞர் வைத்தியசாலையில் அனுமதி

(கரவெட்டி)

கைதடிப் பகுதியில் மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மதிலுடன் மோதியதில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரட்ணசிங்கம் பரதன் (வயது 22) என்ற இளைஞரே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.(6-3-24)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி வடக்கு மந்திகை சோலை அம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெற்று 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 2 மணிக்கு பூங்காவனத் திருவிழாவுடன் முடிவடையும் என்று விழாவின் தலைமைக் குரு சிவ. ஸ்ரீ க. கிருபானந்த குருக்கள் தெரிவித்துள்ளார். (6-29)

## அம்மா பகவான் ஆன்மீகப் பேருரை

(யாழ்ப்பாணம்)

அம்மா பகவானின் ஆன்மிகப் பேருரையும் நாமசங்கீர்த்தனமும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி முதல் யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் ஆன்மீகப் பேரொளி தி. நளேந்திரன் ஜீ தலைமையில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு அம்மா பகவானின் அருள் ஆசியும் தீட்சையும் பெற்றுக் கொள்ளுமாறு யாழ் மாவட்ட அம்மா பகவான் சற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (6)

## உலக அகதிகள் தினத்தை முன்னிட்ட சித்திரப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

உலக அகதிகள் தினத்தினை முன்னிட்டு யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் உள்நாட்டில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் மக்கள் மத்தியில் ***வீடு இழந்த போதும் எதிர்காலம் இன்னும் என் கையில்*** எனும் தலைப்பில் நடத்தப்பட்ட சித்திரப் போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் மற்றும் ஆறுதல் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு,

**10 தொடக்கம் 15 வயதுப் பிரிவு**

இ.நிதர்சன், ம.கனுஜா (கண்ணகி குடியிருப்பு) ,ர. கஜீவன் (பழைய நீதிமன்ற முகாம்)

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

க.பிரசாத் (குருவளை முகாம் அளவெட்டி தெற்கு), து.அஜித்குமார் (அட்டகிரி ii ), அ.டினுஷன்( சேந்தான்குளம் நலன்புரி நிலையம்), அ.கிரிஷாந்தி அன்ரனி விமலதாஸ் (சின்னாவளை முகாம் பொலிகண்டி), ஜெ.அபினா (கேலன்காமம் முகாம்)

**16 தொடக்கம் 18 வயதுப்பிரிவு**

ந.ஜெனுஜா (ஓடக்கரை நலன்புரி நிலையம் சங்கானை), ப.சிந்துஜன் (செல்வபுரம்), ர.கார்த்திகா (நிலவன் குடியிருப்பு)

**ஆறுதல் பரிசு பெறுவோர்**

ஆ. சுகதாஸ் (மணற்காடு இடைத்தங்கல் முகாம்), செ.கௌசலா (புலவர் குடியிருப்பு நலன்புரி நிலையம்), சு.மேரிடிலஸ்ரீனா (கண்ணகி குடியிருப்பு), சூ.அஜித் (கோணப்புலம்), ச.சலூஜா(அட்டகிரி ii)

**19 வயதிற்கு மேற்பட்டோர்**

ம.ரவிவர்மன் (உடுப்பிட்டி தெற்கு நலன்புரி நிலையம்), ச.பிரதீபன் (மணற்காடு இடைத்தங்கல் முகாம்)

**மூன்றாமிடம் இருவர்**

இ.யேசுதாஸ், சி.ஜெசிதா(மணற்காடு இடைத்தங்கல் முகாம்),

**ஆறுதல் பரிசு பெற்றோர்**

நிஷாந்தராஜ் (ஊறணி நலன்புரி நிலையம்), உ.லுஷாந்த் (புலவர் குடியிருப்பு), ர.கிருபாகரன்(நிலவன் குடியிருப்பு), ம.சுஜிதா (யோகபுரம்). (6)

## புத்தளம் பகுதியில் கடத்தல் சம்பவம்

(புத்தளம்)

புத்தளம் பகுதியில் நேற்று முன்தினம் மூன்று வயதுடைய சிறுவன் ஒருவனை இனந்தெரியாத இருவர் கடத்திய சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சிறுவனின் தந்தை வீட்டிலிருந்து வெளியேறியதன் பின்னர் சிறுவனுடன் விளையாடிக் கொண்டிருந்த இருவர் த சிறுவனை தம்பனைப் பகுதியில் வைத்து கடத்திச் சென்றுள்ளனர் என்று பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்கு நேற்று முன்தினமிரவு விசேட பொலிஸ் குழுக்களை தம்பனை நோக்கி அனுப்பி வைக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (6-9)

## இராசி பலன்

*20.06.2010*
*(ஆனி 6, ஞாயிற்றுக்கிழமை)*
*நவமி முன்னிரவு 10.01 மணிவரை*
*அத்தம் முன்னிரவு 10.26 மணிவரை*
*இராகு காலம் 4.24-5.54 மணிவரை*
*சுபநேரம் 8.54-10.24 மணிவரை*
*அமிர்த சித்தம்.*

| | |
|---|---|
| மேடம் | நோய் குணமடைதல், காரிய நன்மை, போசன சுகம், பிறர் உதவி. |
| இடபம் | புத்திரரால் கவலை, சொத்துப் பிணக்கு, முயற்சி தாமதம், தன விரயம். |
| மிதுனம் | சிந்தனை மிகுதி, நல்ல முயற்சி, வாகனசுகம், போசன சுகம். |
| கடகம் | பிரயாண நன்மை, காரிய சித்தி, குடும்ப சுகம், போசன சுகம். |
| சிங்கம் | வேலைச்சுமை, பணவிரயம், எடுத்த காரியம் தாமதமாகும், விவாதம். |
| கன்னி | தெய்வசிந்தை, நிலைமாற்றம், முயற்சி கைகூடும், போசன நன்மை. |
| துலாம் | இடமாற்றம், தந்தைவழி உறவு, முயற்சி தாமதம், சுப செலவு. |
| விருச்சிகம் | முயற்சி கைகூடும், கீர்த்தி, போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| தனுசு | கடின முயற்சி, இனிய செய்தி, பிறர்உதவி, தேகநலன். |
| மகரம் | புதிய முயற்சி, பிரயாணம், செய்தொழில் விருத்தி, வீண்பயம். |
| கும்பம் | காரிய தடங்கல், மனச்சஞ்சலம், போசன சுகம், உடல்நலக் குறைவு. |
| மீனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, போசனசுகம், தேகநலன். |

வளவன்

## வாரம் ஒரு தகவல்

## வயதுக் கோளாறு

"நான் அடிக்கடி குழம்பிப் போய் விடுகிறேன், டாக்டர்"

"வயதாகி விட்டதல்லவா. மூளைத்தளர்ச்சியால் ஏற்படும் மனக் குழப்பம் இது."

"எதையும் சரியாக மனதில் பதியவைக்க முடியவில்லை. கொஞ்சம் முன்னால் நடந்ததைக் கூட மறந்து விடுகிறேன்"

"மூளைத்தளர்ச்சியால் ஏற்படக் கூடிய அறிவுத்திறன் வீழ்ச்சி (Dementia). முக்கியமாக சமீபத்திய நினைவாற்றல் (Recent memory) பாதிக்கப்பட்டு மறதி உண்டாகிறது.

ஏற்கனவே பதிந்த (Past memory) அப்படியே இருக்கும். அதனால் தான் வயதானவர்கள் கடந்த காலத்தைப் பற்றியே அதிகமாகப் பேசிக் கொண்டிருப்பார்கள்."

"இன்னொரு விடயம் டாக்டர்... என் மீதே எனக்கு நம்பிக்கை குறைந்து விடுகிறது. ஏதோ ஒரு குற்ற உணர்வு. ஒன்றும் புரியவில்லை"

"இது மனத்தளர்ச்சி நோய் (Depression)"

"சிலசமயம் உளற ஆரம்பித்து விடுகிறேன் டாக்டர். என்னை யாரோ கட்டுப்படுத்துவது மாதிரி ஓர் எண்ணம்."

"அப்படி இருந்தால் அது மனச்சிதைவு நோய் (Paraphrenia)"

"சில சமயத்தில் கண்ணில் பூச்சி பறப்பது போன்று இருக்கிறது டாக்டர்"

"வயதாகி விட்டாலே இப்படித்தான்"

"முதுகு வலியும் இருக்கிறது"

"வயதானாலே இப்படித்தான்"

"என்னங்க இது....? எதற்கெடுத்தாலும் இப்படியே சொல்றீங்க.... உங்களால வைத்தியம் பண்ண முடியுமா? முடியாதா? சொல்லுங்க... வேற டாக்டரைப் பார்த்துக் கொள்கிறேன்.நீங்க சொல்லும் பதில் எனக்கு எரிச்சலை உண்டு பண்ணுது. எனக்கு வாற கோபத்தில உங்கள் மீது அப்படியே பாய்ந்து கடித்துக் குதறலாம் போல இருக்கு"

"வயதானாலே இப்படித்தான்".

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 110 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 170 | 180 | 120 |
| தக்காளி | 170 | 170 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 50 |
| கோவா | 90 | 100 | 90 |
| கரட் | 220 | 180 | 250 |
| பூசனி | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 80 | 40 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 60 |
| பாகற்காய் | 160 | 150 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 80 | 40 |
| பயற்றங்காய் | 200 | 200 | 130 |
| லீக்ஸ் | 180 | 180 | 140 |
| பீற்றூட் | 100 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 160 | 140 |
| முருங்கைக்காய் | 380 | 400 | 450 |
| போஞ்சி | 120 | 160 | 110 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 70 |
| கீரை - 1 பிடி | 15 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 150 | 130 |
| தேங்காய் (ஒன்று) | 25-30 | 35 | 30 |

# தண்டனை... சீர்திருத்தவா, சீரழிக்கவா?



தவறு செய்வது மனிதனின் இயல்பு. தவறுகளில் இருந்துதான் நியாயங்கள் பிறக்கின்றன என்கிறது சமூகவியல். ஆனால் நடைமுறையில் ஒரு குற்றத்துடன் தொடர்புடைய தொடர்பற்ற அனைவருமே விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

சட்டத்தால் ஆளப்படும் ஒரு நாகரிகச் சமூகத்தில் மிகவும் கேவலமான குற்றம் கஸ்டோடியல் டெத் (Custodial Death) எனப்படும் சிறை மரணங்கள் தான். சுய லாபங்களுக்காகவும் இலஞ்சம் எனும் எலும்புத் துண்டுக்காவும் அதிகார அழுத்தம் காரணமாகவும் சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய காவலர்களே ஒரு கைதியைக் கொலை செய்கிறார்கள்.

பெரும்பாலானசிறைமரணங்களுக்கு நியாயம் கிடைப்பதே இல்லை. சிறைக்குள் வந்துவிட்டதாலேயே ஒருவர் மரணம் அடை யும் தகுதியைப் பெற்றுவிடுவது இல்லை. ஆனால் சிறைவாசி ஒருவரைத் துன்புறுத்துவதற்கான உரிமை தனக்கு உண்டு என்பதே காவலர்களின் எண்ணமாக இருக் கிறது.

சிறைத் தண்டனையிலும் கொடுமையானது தனிமைச் சிறை. அபாயகரமான கைதிகளுக்கு என்ற பெயரில் இயங்கும் இந்த தனிமைச் சிறைகள் கைதிகளை மனப் பிறழ்வு நோய்க்கு ஆளாக்குகின்றன. தனிமைச் சிறைகள் மூடப்பட வேண்டும் என்று உலகம் முழுக்க எதிர்ப்புகள் வலுக்கின்றன. சாலிட்டரிகன் பைன்மென்ட் எனப்படும் தனிமைச் சிறையை மிக உச்ச பட்சத் தண்டனையாகக் கருதலாம்.

குற்றவாளிகளும் கூட ஒருவகையில் சமூகத்துக்குப் பயன்படுகிறார்கள். அவர்களால் தான் புதிய சட்டங்கள் இயற்றப்படுகின்றன என்ற கார்ள் மார்க்ஸின் சிந்தனையைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நம் நாட்டு நீதிமன்றங்களில் சுமார் இலட்சக் கணக்கான வழக்குகள் நிலுவையில் உள்ளன. விசாரணைக் கைதிகள் தங்களுக்கு எப்போது தீர்ப்புக் கிடைக்கும் என ஏங்குகிறார்கள். தீர்ப்பில் அவர்கள் குற்றவாளிகள் இல்லை என்று கூறப்பட்டால் இழந்த வாழ்க்கையை யாரிடம் பெறுவார்கள்?

## தண்டனைகள்

## நீங்கள் பாவியா?

தவறு செய்தவன் தண்டனையை அனுபவிப்பதற்கான இடம் நரகம்!

எகிப்தியக் கடவுளான *ஓசிரிஸ்* லைஸப் பின்பற்றுபவர்கள் *இறப்புக்குப் பின் வாழ்க்கை* என்கிற கட்டத்தை கொண்டுவந்தார்கள்.

இறப்புக்குப் பின் 42 தேவதைகள் நீதிபதிகளாக இருந்து நம் நன்மை –தீமைகளை ஆராய்வார்கள். பாவிகளின் ஆன்மா நரகத்தில் தூக்கி வீசப்படும். அங்கே தண்டனைகள் வழங்கப்படும். பின்னர் அந்த ஆன்மா அழிக்கப்படும் என்று மதத் தலைவர்கள் சொன்னதைக் கேட்டு எகிப்தியர்கள் நடுங்கினர். பல மதங்கள் எகிப்தியர்களிடம் இருந்தே 'நரகம்' கட்டத்தை எடுத்துக் கொண்டதாக வரலாற்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

*மேலே சொர்க்கம். நடுவில் பூமி கீழே நரகம். (டார்டரஸ் )*என்று நம்பினார்கள் கிரேக்கர்கள். காற்றும் வெளிச்சமும் புக முடியாத இருட்டறை போன்ற இடம் என்பதே டார்டாரஸின் வர்ணனையாக இருந்தது. பாவத்துக்கு ஏற்ப டார்டராஸில் மூச்சுத் திணறிக்கொண்டே இருக்க வேண்டும் என்று பாவிகளைப் பயமுறுத்தினார்கள்.

தண்டனை என்பது உடலை வருத்துவது அல்ல மனதை வருத்துவது என்ற அடிப்படை கொண்டவர்கள்யூதர்கள். அவர்களின்சொர்க்கம் –நரகம் எல்லாமே *கெஹானா* தான்.

# அணு அணுவாக மரணம்



தண்டனைகள் பலவிதம்... ஒவ்வொன்றும் ஒருவிதம் பழங்காலத்தில் தண்டனைகள் எல்லாமே கூரமாக யோசித்துக் கொடுக்கப்பட்டன. அதில் ஒன்று எதிரிகளின் தோலை உரிப்பது தோலை அகற்றி விட்டால் இறப்புக்குப் பின்னர் மறுவாழ்வு குற்றவாளிக்குக் கிடைக்காது என்ற மதம் சார்ந்த நம்பிக்கையும் காரணம்.

எதிரிகளுக்கு எச்சரிக்கை கொடுப்பதற்காக உரிக்கப்பட்ட தோலை பொதுமக்கள் பார்வைக்கும் வைப்பார்கள். பார்க்கும் மக்களை பதறவைப்பதே தண்டனைகளின் நோக்கமாக இருந்தது. ஐரோப்பிய நாடுகளில் முன்பு இராஜ துரோகிகளை ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் தலையை வெட்டி சரிவான தளங்களில் உருட்டி விடுவார்கள். பார்ப்பவருக்குத் துரோகம் செய்ய மனசு வருமா?

தேசத்துரோகம், பெற்றோர்களை கொல்வது போன்ற குற்றங்களுக்கு சீனாவில் கி.பி. 900 இலிருந்து 1905வரை உள்ள காலகட்டத்தில் வழங்கப்பட்ட தண்டனை தன் கொடூரமானது. குற்றவாளியை கட்டி வைத்து ஆங்காங்கே சதையை அறுப்பார்கள். இதற்கு சீன மொழியில் லிங்க்ச்சி என்று பெயர். குற்றவாளி சுயநினைவை இழந்தால் வலி தெரியாதே? நினைவை இழக்காமல் இருப்பதற்கு மருந்து கொடுப்பார்கள். முதலில் கண்கள் அப்புறம் காது, மூக்கு, உதடு, நாக்கு, விரல்கள் என்று ஒவ்வொரு உறுப்பாக எடுப்பார்கள். குற்றவாளி உயிரை விடுவதற்கு மூன்று நாட்கள் ஆகிவிடும். குற்றவாளியின் உறவினர்கள் இலஞ்சம் கொடுத்தால் தொண்டையை அறுத்து உடனே உயிரெடுக்கப்படும்.

மாபெரும் தேசத் துரோக குற்றத்திற்கு இங்கிலாந்தில் வழங்கப்பட்ட தண்டனை அடிவயிற்றை கலக்கும் குற்றவாளியை வீதியில் இழுத்துவந்து தூக்கில் போடுவார்கள். உயிர் பிரியும் முன் தூக்குக் கயிற்றை வெட்டி



விடுவார்கள். உயிர் ஊசலாடிக் கொண்டு இருப்பவரின் வயிற்றைக் கிளித்து குடலை உருவுவார்கள்.

பெர்ஷியாவில் கொடுக்கப்படும் கொடூர தண்டனை இது... குற்றவாளிக்கு பாலையும் தேனையும் மலமிளக்கிகளையும் கலந்து கட்டாயமாக புகட்டிவிடுவார்கள். கடுமையான வயிற்றுப்போக்கு ஏற்படும். அவரது உடல் முழுக்க முழக்க தேனைப் பூசி, குட்டையில் மிதக்கவிடுவார்கள். உடலில் பூசியிருக்கும் தேன், பூச்சிகள், தேனிகள் , ஈக்கள் போன்றவற்றை ஈர்க்கும் அல்லவா. அவை குற்றவாளியில் உடலை கொஞ்சம் கொஞ்சமாக அரித்துவிடும். குற்றவாளி பட்டினியால் சீக்கிரம் இறந்துவிடாமல் இருக்க பால், தேன் புகட்டும் சிகிச்சை தொடர்ந்தும் செய்யப்படும். சிலநாட்களில் குற்றவாளிக்குப் பைத்தியம் பிடித்துவிடும். ஓரிருவாரங்கள் கொடுமையான வேதனையை அனுபவித்துவிட்டு ஆசாமி க்ளோஸ்.

ஆசிய மற்றும் ஐரோப்பிய நாடுகளில் பழங்காலத்தில் குற்றவாளியை தண்ணீரிலோ, தார், கொழுப்பு,எண்ணெய் போன்றவற்றிலோ உயிருடன் வேகவைத்துக் கொல்வார்கள். சில சமயம் ஈயத்தைக் காய்ச்சி அதில் அமுக்கிக் கொல்வதும் உண்டு.

சிலரைக் கதறக் கதற எரித்துக்கொல்வதும் உண்டு. பொதுவாக விசம் கொடுத்துக் கொலை செய்பவர்களுக்கும், கலப்படம் செய்தவர்களுக்கும் இந்த " சொக்கன் 65" தண்டனை நிறைவேற்றப்பட்டது.

ரோமாபுரியிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் அந்தக் காலத்தில் குற்றவாளியை றம்பத்தால் அறுத்து மரணதண்டனை





கொடுக்கப்பட்டது.

ஒரு கம்பத்தில் குற்றவாளியை நிர்வாணமாக தலைகீழாக தொங்கவிடுவார்கள். இரண்டு கால்களையும் விரித்து இருமரத் தூண்களில் கட்டிவிடுவார்கள். இருதொடைகளுக்குமிடையில் அறுப்பு ஆரம்பமாகும். குற்றவாளி நெடுநேரம் உயிருடன் இருந்து வேதனையை அணுஅணுவாக உணர்ந்து மெல்லச் சாவார்.

பண்டைய ரோமில் குற்றவாளியை ஒரு மைதானத்தில் இறக்கிவிடுவார்கள். பசியோடு புலியொன்று திறந்துவிடப்படும் புலி ஜெயித்தால் தண்டனை. குற்றவாளி ஜெயித்தால் சுதந்திரம். இந்த ஆள் –புலி ஆட்டத்தைப் பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் முண்டியடிப்பார்கள்.

நாகரிகம் வளர வளர இந்தக் கொடூரமான தண்டனைமுறைகள் வழக்கொழிந்து போயின. இப்போது தூக்கு, விச ஊசி, மின்சாரம் பாய்ச்சி நாகரிகமாக குற்றவாளிகளை கொல்கிறார்கள்.

# கொலைகளின் கலைஞன்

எதிரிகளுக்கு மரணதண்டனைகள் தந்தே வரலாற்றில் சிவப்புப் புள்ளியாக இடம்பிடித்த சில வில்லன் வி.ஐ.பி.க்கள் இவர்கள்... கொலைகளின் கலைஞன் சந்தேகம் இல்லா மல் ஹிட்லர்தான். 'அட, சீக்கிரம் நம்மைக்கொன்று தொலைக்க மாட்டார்களா?" என்று சித்திரவதைக்கு உள்ளாகும் யூதர்கள் வேண்டும் அளவுக் குக் கொடூர யுக்திகளின் தண்டனை அளித் தவர்.

ஒருகுட்டி வானுக்குள் 300 பேரை அடைத்து,அதன் புகைபோக்கியை வானுக்குள்ளேயே திருப்பிவிட்டது ஒரு உதாரணம். இலட்சக்கணக்கான யூதர்களை உலகின் பார்வை படாமல் இவன் கொத்துக் கொத்தாகக் கொன்று குவித்தது நடுங்கச் செய்யும் வரலாறு. எதிரி துடிதுடிப்பதைப் பார்த்து துளித்துளியாக ரசிப்பவன் நீரோமன்னன்.

இவனிடமிருந்து தப்பிப்பதற்காக வேண்டி விரும்பி தற்கொலை செய்துகொள்வார்கள் என்பதே இவனுடைய கொடூரத்துக்கான உரைகல்.

நீரோவின் காலத்தில் இருந்த சிந்தனைவாதி ஸெனேகா தன்னை நீரோ தேடுவது தெரிந்து தன் கைநரம்புகளை அறுத்துக் கொண்டார். ஹீமோகுளோபினின் அதிக அடர்த்தி காரணமாக அறுத்த இடம் ஒட்டிக் கொண்டு விட்டது. பின்னர் கால்நரம்புகளையும் அறுத்துக் கொண்டார். இம்முறையும் இவருக்கு அதிர்ஷ் டம்(?) இல்லை. கடைசியில் கொதிக்கும் நீரில் தலையை அமிழ்த்தி



தற்கொலை செய்துகொண்டார்.

உலகை வெல்லும் ஆசையோடு புறப்பட்ட தைமூருக்கு தனித்தனியாக தண்டனை கொடுக்க நேரம் இருக்கவில்லை. எனவே கூட்டம் கூட்டமாக கொன்றுகுவித்தான்.

மக்களை வரிசையாக மண்டியிட வைத்து அவர்களின் கழுத்து உயரத்துக்கு பெரிய கத்தியைப் பிடித்த தன் காவலர்களை வரிசையின் குறுக்காக ஓடச் சொல்வான் தைமூர். தலைகள் தடதடவென்று கீழே உருண்டுவிழும்.

ரஷ்யாவில் ''டிரான்சில்வேனியா'' பகுதியைச் சேர்ந்த ஒரு சிற்றரசன் வாலாட் டிராகுலா இரத்தவெறி பிடித்த சைக்கோ இரத்தம் குடிக்கும் வேம்பயர்கள் பற்றிய கதைகள் இவனால் தான் எழுந்தன. இவன் இறந்து உலகின் முதல் வேம்பயராக மாறி விட்டானென்று ஒரு காலத்தில் ஐரோப்பாவே நம்பியது.

அந்த அளவுக்கு கைதிகளை கம்பியில் குத்தி தொங்கவிடுவது சிறிய கத்தியால் உடலெங்கும் கீறுவது,துளையிடுவது உடம்புத் தோலை உரிப்பது என்று கொடூரமான தண்டனைகள் கொடுத்தான்.

# 'சட்ட' துரை!

உலகில் முதன் முதலில் தண்டனைச் சட்டங்களைத் தோற்றுவித்த பெருமை மெசபடேமியா மன்னராக இருந்த ஹமுராபியைச் சேரும்.

கி.மு.1764 இல் அரியானை ஏறிய இவரது சட்டங்கள் இன்றளவும் பிரமிப்பூட்டும் உதாரணங்கள். இவரது சட்டத்தின்படி ஒருவரை யாரவது அடித்தால் அபராதம் உண்டு. வி.ஐ.பி–யை அடித்தால் அதிக அபராதம்!

கற்பழிப்பு, கடத்தல் ,குழந்தைகளோடு உடலுறவுகொள்ளல் போர்க்களத்தில் பயந்து ஓடுவது,திருட்டு,வழிப்பறிக் கொள்ளை , நிர்வாகத்தில் இலஞ்ச ஊழல் இதற்கெல்லாம் தலைவர் கொடுத்தது மரண தண்டனை தவிர பாபிலேனியர்கள் பீர் குடிப்பதை மிக முக்கியச் சம்பிரதாயமாக்க கருதியதால் பீர் தயாரிப்பாளர்கள் தரம் குறைந்த பீர் தயாரித்தாலும் மரண தண்டனை அளிக்கப்பட்டது.

நடைமுறையில் அதிகம் பயன்படுத்தப் படும் An Eye for an eye. A Tooth for a tooth என்பது இவர் கொண்டுவந்தது தான். இதன்படி பெற்றோரைக் கைநீட்டி மகன் அடித்தால்,அடித்த இடத்திலேயே திருப்பி அடிப்பதுதான் அவனுக்குத் தண்டனை. ஒருவரை ஓங்கிக் குத்தி அவர் பல் உடைத்தால் பதிலுக்கு குத்தியவரின் பல் உடைக் கப்பட்டது. அலட்சியமாக ஒபரேஷன் செய்



யப்பட்டு நோயாளி இறந்துபோனால் சார்ஜ னின் விரல்கள் வெட்டப்பட்டன. அன்றாட வாழ்க்கை தொடர்பான சட்டங்களும் அப் போது நடைமுறையில் இருந்தன.

வீடு கொள்ளையடிக்கப்பட்டு குறித்த காலத்துக்குள் காவலர்கள் திருடர்களைக் கைது செய்யாவிட்டால் காவலர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டு திருடப்பட்ட தொகையை அரசாங்கமே அளிக்கும். மனித இனம் தோன்றி வளர்ச்சி அடைந்து கொண்டு இருந்த காலத்தில் உருவாக் கப்பட்ட இந்தச் சட்டங்கள் அனைத்தும் 1900 இல் அகழ் வாராய்ச்சியில் தான் கண்டுபிடிக்கப்பட்டன. அந்தக் கல்வெட்டு இப்போது பிரான்ஸின் உலகப் புகழ்பெற்ற லூவர் மியூஸியத்தில் உள்ளது!.

## அவுஸ்திரேலிய கடற்பரப்பில் முற்றுகையிடப்பட்ட அகதிகள் கிறிஸ்மஸ்தீவுக்கு அனுப்பிவைப்பு

அவுஸ்திரேலிய கடற்பரப்பில் வைத்து முற்றுகையிடப்பட்ட அகதிகள் தற்போது கிறிஸ்மஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலியாவின் மேற்கு கடற்பகுதியில் வைத்து குறித்த இரண்டு படகுகளும் 40 நிமிட இடைவெளியில் முற்றுகையிடப்பட்டுள்ளதாக அந்நாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த இரண்டு படகுகளிலும் 74 அகதிகள் பயணித்துள்ளதுடன் அவர்கள் இலங்கை அல்லது ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளை சேர்ந்தவர்களாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

இந்த வருடத்தில் மாத்திரம் அவுஸ்திரேலியாவிற்கு 3 ஆயிரத்து 278 பேர் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளதாக அவுஸ்திரேலிய தகவல்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

## யுனிசெப் நிலையறி மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலைகளில் தரம் 3 முதல் தரம் 9 வரை இடம்பெற்ற யுனிசெப் நிலையறி மதிப்பீட்டு விடைத்தாள் பொதிகளை வகுப்பு அடிப்படையிலும் பாட அடிப்படையிலும் பொதி செய்து பாடசாலைப் பெயர், வகுப்பு மற்றும் பாடம் என்பவற்றை குறிப்பிட்டு நாளை திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னதாக உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் கையளிக்குமாறு யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (6)

## தனியார் பஸ் கட்டண அதிகரிப்பு தொடர்பிலான இறுதித் தீர்மானம்

(கொழும்பு)

தனியார் பஸ் கட்டணங்கள் அதிகரிப்புத் தொடர்பில் இதுவரையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுடன் இணக்கப்பாடு ஏற்படவில்லை. எனவே அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து இன்று இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என்று தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

பஸ்களின் கட்டணங்கள் அதிகரிக்கப்படாமல் ஜுலை மாதத்தில் தனியார் பஸ்களை சேவையில் ஈடுபடுத்த முடியாது. 7 வீதமான கட்டண அதிகரிப்பிற்கு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இணங்காவிடின் பொதுமக்களே அசௌகரியங்களை எதிர்கொள்வர் எனவும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ண கூறுகையில்,

தனியார் பஸ்களின் கட்டணங்கள் வருடத்திற்கு ஒரு முறை மீளாய்விற்கு உட்படுத்தப்படும். இதன்போது அப்போதுள்ள எரிபொருட்களின் விலை மற்றும் டயர் உள்ளிட்ட ஏனைய உதிரிப்பாகங்களின் விலைகளின் ஏற்றத் தாழ்விற்கு அமைவாகவே புதிய பஸ் கட்ட ணங்கள் அறிவிக்கப்படும்.


இதனடிப்படையில் 2010 ஆம் ஆண்டிற்கான தனியார் பஸ்களின் கட்டணங்களை 5 தொடக்கம் 7 வீதங்களுக்கு உட்பட்ட தொகையினால் அதிகரிக்கப்படவேண்டும் என எமது சங்கம் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவிற்கு அறிவித்திருந்தது. ஆனால் இதுவரையில் ஆணைக்குழு ஆக்கப்பூர்வமான பதிலை எதுவும் எமக்கு அறிவிக்கவில்லை.

தற்போது அதிகரிக்கப்பட்டுள்ள வாகன உதிரிப்பாகங்களின் விலையின் அடிப்படையிலும் எரிபொருளின் விலை அதிகரிப்பின் அடிப்படையிலும் தனியார் பஸ் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் என்ற தீர்மானத்திற்கு நாம் வந்துள்ளோம்.

எவ்வாறாயினும் பஸ் கட்டணம் அதிகரிப்பு தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் செயற்பாடுகள் திருப்தியாக அமையவில்லை. எனவே இது தொடர்பாக இறுதித்தீர்மானத்தை இன்று நடைபெறவுள்ள சம்மேளனத்தின் போது அறிவிப்போம் என்றார். (6)

## போர் வெற்றி விழாக் கொண்டாட்டம்; மணமகள் இல்லாத திருமணத்தைப் போன்றது

### திஸ்ஸ அத்தநாயக்க தெரிவிப்பு



(கொழும்பு)

காலி முகத்திடலில் நேற்று முன்தினம் நடைபெற்ற போர் வெற்றி விழாக் கொண்டாட் டம் மணமகள் இல்லாத திருமண வைபவத் திற்கு நிகரானதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு அழைப்பு விடுக்கப்ப டாமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

மூன்று தசாப்த காலமாக நீடித்த பயங்கர வாதத்தை இல்லாதொழித்த ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு உரிய மரியாதை அளிக் கப்படவில்லை என அவர் அதிருப்தி கொண் டுள்ளதுடன்,

வெற்றி விழா கொண்டாட்டங்களில் ஜெனரல் சரத் பொன்சேகாவின் பெயரைக் கூட குறிப்பிடாமை பெரும் வேதனை அளிப் பதாக கவலை தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி விழாக் கொண்டாட்டங் களின் நாயகனான சரத் பொன்சேகா விழா விற்கு அழைக்கப்படாமை எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதென கூறினார். (6)

## உறங்கிக் கொண்டிருந்த இளைஞன் பரிதாப மரணம்

(கொழும்பு)

ரயில் தண்டவாளத்தில் தலை வைத்து நித்திரையில் இருந்த இளைஞர் ஒருவர் மீது ரயில் மோதியதில் 29 வயதுடைய இளைஞன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இந்தப் பரிதாப சம்பவமானது பொலநறுவை கக்வேல்ல தொழிற்பயிற்சி நிலையத்திற்கு அருகிலுள்ள ரயில் பாதை யில் நேற்று அதிகாலையில் இடம்பெற்றது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலநறுவை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் . (6)

## 20.06.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1631- பால்ட்டிமோர் என்ற ஐரிய கிராமம் அல்ஜீரிய கடற் கொள்ளைக் காரர்களினால் முற்றுகையிடப்பட்டது.
- 1756-கொல்கத்தாவில் நவாப்புகளினால் பிரித்தானியப் படைவீரர்கள் சிறைப் பிடிக்கப்பட்டனர்.
- 1791- பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனும் அவனது குடும்பமும் வரெனெஸ் நகருக்குத் தப்பியோடினர்.
- 1837- விக்டோரியா பிரித்தானியாவின் அரசியாக முடி சூடினார்.
- 1858- இந்தியச் சிப்பாய்க் கிளர்ச்சி , 1857 இல் முடிவுக்கு வந்தது.
- 1862- ருமேனியாவின் பிரதமர் பார்பு கட்டார்ஜியூ படுகொலை செய்யப்பட்டார்.
- 1863- மேற்கு வேர்ஜீனியா ஐக்கிய அமெரிக்காவின் 35 ஆவது மாநிலமாக சேர்க்கப்பட்டது.
- 1877- அலெக்சாண்டர் கிரகம் பெல் உலகின் முதலாவது வர்த்தக தொலைபேசிச் சேவையை கனடாவின் ஹமில்ட்டன் நகரில் ஆரம்பித்தார்.
- 1900- பொக்சர் படைகள் பீக்கிங்கில் நூற்றுக்கணக்கான ஐரோப்பியர்களைக் கொன்றனர்.
- 1944- இரண்டாம் உலகப் போர்: பிலிப்பைன்ஸ் கடல் சமர் அமெரிக்கக் கடற் படையின் பெருவெற்றியில் முடிவடைந்தது.
- 1960- மாலி,,செனகல் ஆகிய நாடுகள் பிரான்சிடம் இருந்து விடுதலை அடைந்தன.
- 1978- கிறீசில் 6.5 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவானது.
- 1990- யுரேக்கா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1991- ஜெர்மனியின் தலைநகரம் என் பொன் என்பது பேர்லின் என்று மாற்ற பாராளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.
- 2001- பாகிஸ்தானின் அதிபராக பர்வேஸ் முஷாரஃப் பதவியேற்றார்.
- 2003- விக்கிமீடியா அமைப்பு உருவானது.

### பிறப்புகள்

- 1969- சனத் ஜயசூரிய இலங்கைத் துடுப்பாட்ட வீரர்.

### இறப்புகள்

- 2005- ஜாக் கிலிபி, அமெரிக்க மின்னியல் பொறியியலாளர் (பி.1923)
- 2006- சுரதா தமிழகக் கவிஞர்

### சிறப்பு நாள்

உலக அகதிகள் நாள்
ஆர்ஜெண்டீனா- கொடி நாள்.

## 1971 ஆம் ஆண்டு

இந்நாளில் ஈழத்துக் கவிஞர் மகாகவி உருத்திர மூர்த்தி இறைபதம் எய்தினார்.





அனலைதீவு நயினாகுளம்

பூரணைதேவி புட்கலை தேவி சமேத அருள்மிகு ஸ்ரீ ஹரிஹரபுத்திர ஐயனார் திருக்கோவில்

# புனராவர்த்தன பிரதிஷ்டா அஷ்டபந்தன நவகுண்டபக்ஷ மகாகும்பாபிஷேக விஞ்ஞாபனம்

ஐயன் அடியார்களே! –

நிகழும் மங்களகரமான விகிர்தி வருடம் ஆனித்திங்கள் 9 ஆம் நாள் (23.06.2010) புதன்கிழமை ஹரிஹர புத்திர ஐயனாருக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நிகழ திருவருள் கூடியுள்ளது. இப்பெருஞ்சாந்தி விழாவிலும் ஏனைய கிரியைகளிலும் ஆசாரசீலர்களாக கலந்து ஐயன் அருள் பெறுவோமாக!

**கிரியா கால நிகழ்வுகள்**

ஆனிமாதம் 2 ஆம் நாள் (16.06.2010) புதன்கிழமை காலை 5 மணி 5 நிமிடத்தில் பூர்வாங்க கிரியைகள் ஆரம்பமானது.

ஆனிமாதம் 8 ஆம் நாள் (22.06.2010) செவ்வாய்க்கிழமை காலை 8 மணி முதல் பி.பகல் 5 மணிவரை தைலாப்பியங்கம் (பக்தர்கள் எண்ணைக் காப்பு சாத்துதல்).

ஆனி மாதம் 9 ஆம் நாள் (23.06.2010) புதன்கிழமை காலை 6 மணி 24 நிமிடம் தொடக்கம் 7 மணி 10 நிமிடம் வரையுள்ள மிதுன லக்கின சுப முகூர்த்த வேளையில் கும்பாபிஷேக பெருவிழா நடைபெறும்.

23.06.2010 ஆம் திகதி அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.

*"சாமியே சரணம் ஐயப்பா"*

ஆலய பரிபாலன சபையினர்,
ஐயனார் ஆலயம், அனலைதீவு

(1723)


## உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டில் "தமிழினப் படுகொலைகள்" நூல்வெளியீடு

தமிழினப் படுகொலைகள் என்ற திறனாய்வுப் புத்தகம் கோவை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டின் போது நடைபெறும் புத்தக விழாவில் வெளியிடப்படவுள்ளது.

இது குறித்து மனிதம் என்ற மனித உரிமைக்கான அமைப்பின் நிர்வாக செயல் இயக்குநர் அக்னி சுப்பிரமணியன் கூறுகையில்,

தமிழினப் படுகொலைகள் ஆவணப் புத்தகம் எதிர்வரும் 23 ஆம் திகதி கோவையில் நடைபெறவுள்ள உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் சிறப்புப் புத்தக விழாவில் 74 ஆம் இலக்கப் புத்தகக் கடையில் சிறப்புக்குரிய வகையில் விற்பனை செய்யப் படவுள்ளது.

உலகம் முழுவதும் விற்பனையாகி வரும் ஈதமிழினப் படுகொலைகள் ஆவணப்புத்தகம் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் வெளியிடப்பட்ட புத்தகமாகும்.

அதேபோன்று தமிழகத்தின் கோவை நகரிலும் இதற்கு அறிமுக விழா எடுக்கப் பட்டது. மேலும் இதற்கு அண்மையில் கனடாவிலும் , நோர்வே நாட்டிலும் அறிமுக விழா நடத்தப்பட்டது.

" தமிழினப் படுகொலைகள் "ஆவணப் புத்தகத்தின் மதிப்பை உயர்த்தும் வகையில் , புத்தகத்தை தமிழ் உலகில் சிறப்பாக அறியப் பட்டு வரும் பிரான்ஸைச் சேர்ந்த சோபா சக்தியும் , கனடாவில் ஈழத்தமிழர் களுக்காக அயராது உழைத்து வரும் அய்யா வேலுபிள்ளை தங்கவேலுவும் ஆவணப் புத்தகத்தை திறனாய்வு செய்து வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் வெளியிட்டுள்ள திறனாய்வுகளை தற்போது, மனிதம் சார்பில் புத்தக வடிவில் பல்லாயிரக் கணக்கில் அச்சிட்டு , உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டின் போது சிறப்புப் புத்தக விழாவில் இலவசமாய் வழங்கவுள்ளோம் என்று தெரிவித்தார். (6)

## சீரற்ற பஸ்சேவை காரணமாக அசௌகரியத்துக்குள்ளாகும் பயணிகள்

(சித்தங்கேணி)

இலங்கை போக்குவரத்து சபையால் ஈடுபடுத்தப்படும் காரைநகருக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான 782 இலக்க பஸ் வண்டிகள் சீரற்ற சேவையில் ஈடுபடுவதாக பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், தொழில்நுட்பகல்லூரி மாணவர்கள், அரச ஊழியர்கள் ஆகியோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறிப்பிட்ட நேரத்தில் குறித்த இடத்திற்கு பஸ்வண்டிகள் வந்து சேராமையினால் அன்றாட வேலைகளை உரிய நேரத்தில் நிறைவேற்றிக்கொள்ள முடியாத நிலை இருப்பதாகவும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்பவர்கள் உரிய நேரத்தில் வேலைக்கு சமூகம் அளிக்க முடியாத நிலையில் உள்ளதாகவும் கவலை தெரிவிக்கின்றார்கள்.

எனவே இவ்விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர். (6-17)

## கணனிப் பயிற்சி நெறிகள்

பருத்தித்துறை பிரதேச செயலக விதாதா வள நிலையத்தினாலும் கரித்தாஸ் கியூடெக் வளங்களுடனும் குறுங்கால கணணி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன.

இப்பயிற்சிநெறிகள் இளைஞர் தொழிற் பயிற்சி நிலையத்தில் சனி மற்றும் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் நடத்தப்படவுள்ளது.

இதில் கலந்துகொள்ள விரும்பும் இளைஞர் மற்றும் யுவதிகள் பருத்தித்துறை பிரதேச செயலகத்திலுள்ள விதாதாவள நிலைய விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தரிடம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு முன்னராக அலுவலக வேலை நாட்களில் தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும் எனவும் பயிற்சி முடிவில் தகுதிவாய்ந்த அரச சான்றிதழ் வழங்கப்படும் எனவும் பருத்தித் துறை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6)

## திருமஞ்சத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு அருள் மிகு ஸ்ரீ நாக பூசணி அம்மன் கோவில் 10 ஆம் நாள் திருமஞ்சத் திருவிழா நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் காலை 7 மணிக்கு சங்காபிஷேகமும் அதனைத் தொடர்ந்து அம்பாள் வீதியுலா வரும் அலங்காரக் காட்சியும் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் 10 வயது சிறுவனான தவில் வித்துவான் ருவநாத இளவரசன் ஆர். சிவசாயித்தியனின் சிறப்பு தவில் கச்சேரியும் இடம்பெறவுள்ளது. (6)


## யா/ வட்டு இந்துவின் புதிய அதிபரை பாராட்டி பணிசிறக்க வாழ்த்துகிறோம்

அரசாங்கப் பாடசாலைகளில் அதிபர் பதவிக்கு அதிபர் தரமுடையவர்களை நியமித்தல் எனும் நடைமுறைக்கமைய அதிபர் தரம் 1 யை உடைய

**திரு S. சிவகணேசசுந்தரம் அவர்கள்**

எமது பாடசாலைக்கு 15.06.2010 முதல் நியமனம் செய்யப்பட்டு 16.06.2010 அன்று பாடசாலையின் பொறுப்புக்களைக் கையேற் றுள்ளார்.

எமது பாடசாலைக்கு நியமனஞ் செய்யப்பட்ட இப்புதிய அதிபரை மகிழ்ச்சி பொங்க வரவேற்பதோடு இவருடைய உன்னதப்பணி எமது பாடசாலையில் சிறக்க வாழ்த்துகின்றோம்.

இவரை எமது பாடசாலைக்கு நியமனஞ் செய்வதற்கு அரும்பாடுபட்ட எமது வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணக் கல்விச் செயலாளர் மற்றும் கௌரவ ஆளுநர் அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

யா. வட்டு இந்துக் கல்லூரி
ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்.

(1736)

# சிரஞ்சீவி மாஸ்ரர் கைது பொட்டு அம்மான் எங்கே?

விழுப்புரம் தண்டவாள அதிர்வுகள் இன்னும் அடங்காத நிலையில் சந்திரகுமார், அருள்செல்வம், பாலா, செல்வம் என்கிற புனைப்பெயர்களைக் கொண்ட சிரஞ்சீவி மாஸ்டரை வளைத்திருக்கிறது தமிழக உளவுத்



சிரஞ்சீவி மாஸ்டர்

துறை பொலிஸ்!

சிரஞ்சீவி மாஸ்டர், புலிகளின் உளவுத்துறையில் பொட்டு அம்மானின் அடுத்த கட்டத் தலைவர்களில் ஒருவர் என்று கூறப்படுகிறது. 12 வருடங்களுக்கும் மேலாக் மத்திய, மாநில உளவுத்துறைகளால் தேடப்பட்டு வந்த சிரஞ்சீவி மாஸ்டர், ஈழப்போரின் இறுதிக் காலத்தில் களத்தில் நின்றவர். கடைசிக் கட்ட



நேரத்தில் கை, கால்களில் பலத்த காயமடைந்தவர், அதன் பிறகு என்ன ஆனார் என்பது தமிழீழ ஆர்வலர்களாலேயே நேற்று வரை யூகிக்க முடியாத விடயம்.

தமிழீழ ஆர்வலர்கள் சிலரிடம் பேச்சுக் கொடுத்த போது, நம் தகவலையே முதல் செய்தியாகக் கேட்டு அதிர்ச்சியின் விளிம்புக்கே போனவர்கள் , 'சிரஞ்சீவி மாஸ்டர் , பொட்டு அம்மானின் பேரபிமானத்தைப் பெற்றவர். புலிகளின் தமிழகப் புலனாய்வுத் தலைவராக இருந்தார். இலங்கைக்கும் தமிழகத்திற்கும் அடிக்கடி விசிட் அடிப்பார். ஈழப் போர் தீவிரம் எடுத்த காலகட்டத்தில் புலனாய்வுப் பிரிவிடம் இருந்து அழைப்பு வர.... உடனடியாகக் கிளம்பிப் போனார். போரின் உக்கிரம் மிகக் கடுமையானபோது , தமிழகத்திற்கு வந்து அதன் பாதிப் புகழை பட்டவர்த்தனமாக எடுத்துச் சொல்லி, தமிழக அரசியல் தலைவர்களின் ஆதரவைத் திரட்டும் பொறுப்பு அவருக்குக் கொடுக்கப்பட்டது.

ஆனால், இந்திய -இலங்கை அரசுகளின் தீவிர கண்காணிப்புகளை தாண்டி, அவரால் இங்கே வந்து சேர முடியவில்லை. அதன் பிறகு அவர் என்ன ஆனார் என்பதே தெரியாத நிலையில்.... அவர் தமிழகத்தில் பிடிபட்டிருப்பதாகச் சொல்வது பெரிய விந்தைதான்!' என்றார்கள்.


இன்னும் சிலரோ, 'திருகோணமலையில் உள்ள பனகுளம் பகுதியில் பிறந்த சிரஞ்சீவி, 91 ஆம் ஆண்டு இயக்கத்தின் நம்பகத்தை பெற்று யாழ்ப்பாணப் பகுதியில் தீவிர ஆயுதப் பயிற்சி எடுத்தார். அதன் பிறகு புலிகளின் உளவுப் பிரிவுக்கு வந்தார்.

பொலிஸ். அவர் மீது எந்த வழக்குகளும் அப்போது இல்லை என்பதால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

2007இல் சிவகரன் என்கிற போராளி வெடிமருந்து கடத்தியதாகக் பதிவான வழக்கில் சிரஞ்சீவி மாஸ்டர் பேரும்

ஆகியோரிடம் அறிமுகம் செய்து வைத்தவர் சிரஞ்சீவிதான். போர் உக்கிரமான காலத்திலேயே தமிழகத்து அரசியல் புள்ளி ஒருவரை ஈழத்திற்கு அழைத்துப்போய் குண்டு மழைகளுக்கு நடுவே வீடியோ காட்சிகளை பதிவு செய்து

பிரபாகரனுடன் பொட்டு அம்மான்



## தொட்டுவிடும் தூரத்தில்.... 'பொட்டு' ரகசியம்!

98 ஆம் வருடம் கண்ணன் என்கிற கண்ணப்பனும், சிரஞ்சீவியும் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.


அசம்பாவிதச் சம்பவங்களிலோ, ஆயுதக் கடத்தலிலோ ஈடுபடும் அசைன் மென்ட் இவர்களுக் குக்கிடையாது. தமிழகத்தின் அரசியல் நிலைமைகளைக் கணித்துக்கொடுக்கும் பணி மட்டும் தான். அதைச் செவ்வனே செய்யக்கூடியவர் சிரஞ்சீவி. அதனாலேயே அவரை தமிழ் நாட்டு பொட்டு அம்மான் என் பார்கள்.

ராஜீவ் படுகொலைக்குப் பிறகு தமிழகம் வந்த சிரஞ்சீவி,இங்கு உள்ள அரசியல் நிலைவரங்களை ஊன்றிப் படித்து பிறகு,இங்கு இருந்தே ஆயுதப் பரிவர்த் தனைக்கான பொறுப்பையும் ஏற்றார். அப்போது தான் தமிழகப் பொலிஸ் அவர் மீது கண் வைத்தது. அவரை மடக்கினால்,புலிகளின் உளவு நெற்வேக்குகளை துல்லியமாகக் தெரிந்துகொண்டுவிடலாம் எனத் திட்டமிட்டு அவரை வளைக்க எவ்வளவோ முயன்றார்கள். ஆனால், சாதுரியமாகத் தப்பிச் சென்று விட்டார்.

இலங்கைத் தமிழர் எனச் சந்தேகிக்க முடியாத அளவுக்கு சென்னைத் தமிழிலும் சரளமாகப் பேசுவார். 2004இல் அவர் மறுபடி சென்னைக்கு வந்து சென்ற போது, பல திசைகளிலும் ரூட் போட்டு அவரை வளைக்கத்துடித்தது

சேர்க்கப்பட்டது. அப்போது போட்ட வழக்கு ஒன்றை வைத்தே அதன் பிறகு அவரை வெளிப்படையாக பொலிஸ் தேடத்தொடங்கியது.

தொண்டி வழியாக அவர் மீண்டும் சென்னைக்கு வரும்



1989இல் வேலுப்பிள்ளையுடன் பார்வதி அம்மாள்

தகவலை அறிந்து கொண்ட உளவுப்பொலிஸ்,புலிகளின் அபிமானம் பெற்ற புதுக்கோட்டை மாவட்டம் அரசியல் புள்ளியை வளைத்து,அவர் மூலமாக சிரஞ்சீவியை வளைக்கத் திட்டமிட்டது. ஆனால், கண் ணப்பன் என்ற போராளி மட்டும் சிக்க,பொலிஸின் கண்ணில் மண்ணைத்தூவி விட்டு எஸ்கேப்பானார் சிரஞ்சீவி.

தமிழகத்தில் முக்கிய அரசியல் புள்ளிகளை ஈழத்திற்கே அழைத்துச் சென்று.... பிரபாகரன், பொட்டுஅம்மான், தமிழ்ச்செல்வன்

கொண்டு வந்தார்.

கடைசிக்கட்ட ஈழப்போரில் பல்வேறு படையணிகளாகப் பிரிந்து ஊடறுப்புத் தாக்குதல்கள் நடத்தி வெளியேறியவர்களில் சிரஞ்சீவியும் ஒருவர் என எங்களுக்குத் தகவல் வந்ததே தவிர, தப்பித்த அவர் எங்கே இருக்கிறார் என்கிற விபரங்கள் எங்களுக்கு தெரியவில்லை! என்றார்கள்.

மேற்கொண்டு நாம் விசாரித்த போது, ஒருவாரத்துக்கு முன்னரே உளவுத் துறை பொலிஸார் அவரை வளைத்து விட்டதாகவும், புலிகளின் உளவுப் பிரிவு தலைவரான பொட்டு அம்மான் குறித்து அவரிடம் துருவிக்கொண்டு இருப்பதாகவும் தெரிகிறது.கூடவே தமிழக அரசியல் தலைவர்களின் புலித்தொடர்புகள் குறித்தும், அவர்களை சிக்க வைக்கும் விதமான தகவல்கள் குறித்தும் விசாரிக்கப்பட்டு வருகிறதாம்.

விழுப்புறம் தண்டவாளத் தகர்ப்பு விவகாரத்தில் ஆரம்ப கட்ட விசாரணையின் போதே புலிகளின் ஆதரவாளர்கள் செய்திருக்கலாம் எனச் சொன்ன பொலிஸார் தற்போது சிரஞ்சீவியை சிக்க வைக்கவும் வாய்ப்பு இருக்கிறது! என்று கூறுகிறார்கள் காவல் வட்டாரத்தின் அசைவுகளை அறிந்தவர்கள்.

ஜூனியர் விகடன்

(16ஆம் பக்கம் பார்க்க....)

# ஆனி மாதப் பலன்கள்

## கும்பம்

(அவிட்டம்3,4ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3ஆம் பாதங்கள்)

**யாரையும் சந்தித்த உடனேயே நண்பர்களாக்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்ற கும்ப இராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ,அஷ்டமத்துச் சனியின் ஆதிக்கம் ஒருபுறமும், ஆறில் உள்ள சுக்கிரனின் ஆதிக்கம் மற்றொரு புறமும் இருப்பதால் எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. நிச்சயிக்கப்பட்ட காரியங்களை அடிக்கடி மாற்றுவீர்கள்.தொழில் வரவைக் காட்டிலும் செலவு கூடும். அருகில் இருப்பவரை அனுசரித்துச் செல்வதன் மூலமே ஆதாயத்தை நீங்கள் பெறமுடியும்.

ஜென்ம குரு விலகியதால் குடும்பப் பிரச்சினை இனி ஓரளவு குறையும் கூட்டு முயற்சிகளில் மாற்றம் ஏற்படும். ஆறாமிடத்தில் சந்திர பலம் கூடி மாதம் ஆரம் பழைய கடன்களை அடைக்க புதிய கடன்களை வாங்கும் சூழ்நிலை உருவாலாம் பொறுமையை கடைப்பிடிக்க வேண்டிய மாதமிது.

செவ்வாய் பலத்தால் உடன் பிறப்புக்கள் வழியே ஒரு நல்ல காரியம் நடைபெறும் அவர்களின் குடும்பத்தில் நடைபெறும் சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள்.

எனவே சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற்கொள்வதோடு விருட்சங்களின் அருகில் வீற்றிருக்கும் தனி சனீஸ்வரனையும் வழிபட்டு வந்தால் விருப்பங்கள் நிறைவேறுவதில் இருந்த தடை அகலும்.

ஜுன் 16 ஆம் திகதி மிதுன இராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக பொருளாதார நிலை உயரும். பூர்வீக சொத்துக்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும் முன்பு வாங்கியிருந்த சொத்துக்களின் விலை உயர்ந்து மகிழ்ச்சியை வழங்கும். ஜுலை 2 ஆம் திகதி கடக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போவதால்பிள்ளைகள் வழியில் செலவு அதிகரிக்கும். குடும்பச் சுமை கூடும். நரம்பு சம்பந்தப்பட்ட தொல்லைகள் ஏற்பட்டு மருத்துவச் செலவுகளைக் கொடுக்கலாம். வாகனங்களில் செல்லும் போது விழிப்புணர்ச்சி தேவை.

ஜுலை 12 ஆம் திகதி சிங்க இராசியில் சுக்ரன் சஞ்சரிக்க போகிறார். இதற்கு முன்பு பத்து நாட்கள் கூடுதல் விழிப் புணர்ச்சி உங்களுக்குத் தேவை. இனி வாழ்க் கைத் தேவைகள் பூர்த்தியாகும் தொழில் வளம் மேலோங்கும். நபர்களின் நல்லாதரவு பெருகும். தாயின் உடல் நலத்தில் அக்கறை காட்ட வேண்டிய நேரமிது.

யூலை 15ஆம் திகதி மீன இராசியில் குரு வக்ரம் பெறுகிறார். குடும்பஸ்தானாதிபதி குடும்பஸ்தானத்தில் வக்ரம் பெறும் போது குடும்ப பிரச்சினைகள் அதிகரிக்கும். நீதிமன்ற வழக்கு என்று கூட உருவாகலாம். நினைத்ததை நினைத்தபடியே செய்ய முடியுமா? என்பது சந்தேகம் தான். குரு வழிபாட்டை முறையாக மேற்கொள்வதன் மூலமும் அன்னதான வைபவங்களை முன்நின்று நடத்துவதன் மூலமும் சான்றோர்களின் ஆசியை பெறுவதன் மூலமும் காரிய வெற்றியைக் காண முடியும்.

இல்லத்து பூசை அறையில் விஷ்ணு படத்தை வைத்து செந்தாமரை மாலை அணிவித்து வழிபட்டு வருவதோடு விஷ்ணுவிற்குரிய துதிப்பாடல்களை படிப்பது நல்லது பெருமான் வழிபாடு பெருமை சேர்க்கும்.

## மீனம்

(பூரட்டாதி 4 ஆம் பாதம் உத்தரட்டாதி ரேவதி)

**விருந்தினர்களை உபசரிப்பதில் வல்லவர்களாக விளங்கும் மீன ராசி நேயர்களே!**

ஆனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது ஜென்ம குருவின் ஆதிக்கமும் சப்தம சனியின் ஆதிக்கமும் தான் அதிகமாக இருக்கிறது. எனவே எதிலும் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. அது மட்டுமல்லாமல் நம்பிக்கையோடு தெய்வ வழிபாட்டையும் மேற்கொண்டால் இன்பங்களை மட்டுமே இல்லத்திற்குள் வரவழைத்துக் கொள்ள இயலும்.

மாதத் தொடக்கத்தில் சந்திரன் பலம் பெறுகிறார். எனவே பண வரவு திருப்தி தரும். வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். சுக ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதாலும் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதாலும் ஆரோக்கியத்தில் தான் கூடுதல் அக்கறை காட்ட வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். தெசா புத்தி பலம் பெற்றவர்களுக்கு சாதாரண சிகிச்சையிலேயே சரியாகி விடும். இருப்பினும் சனீஸ்வர வழிபாட்டை முறையாக மேற் கொண்டால் சஞ்சலங்கள் தீரும். சந்தோஷங்கள் வந்து சேரும்.

ஜுன் 16 ஆம் திகதி மிதுன ராசியில் புதன் சஞ்சரிக்கிறார்.சுக ஸ்தானத்தில் புதன் சஞ்சரிப்பது நன்மை தான் என்றாலும் ரோகாதிபதியுடன் இணைவதால் உஷ்ணாதிக்க நோய்கள் ஏற்பட்டு அகலும். வாங்கிய இடத்தைக் கொடுத்து விட்டு, புதிய இடங்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். பழைய வாகனங்களை திருத்துவதன் மூலமும் சுபவிரயங்களை மேற்கொள்ளலாம்.

ஜுலை 2 ஆம் திகதி கடக ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். எனவே பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி கல்விக்காகவோ கல்யாணத்திற்காகவோ ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகும். இழப்புக்களை ஈடுசெய்ய விலை உயர்ந்த பொருட்களை விற்கும் சூழ்நிலை ஏற்படலாம்.

ஜுலை 12 ஆம் திகதி சிங்க ராசியில் சுக்ரன் சஞ்சரிப்பது யோகம் தான். எட்டுக்கு அதிபதி ஆறில் சஞ்சரிக்கும் பொழுது திட்டமிடாது செய்த காரியங்களில் வெற்றி கிடைக்கும். திடீர் திருப்பங்கள் பலவற்றைச் சந்திப்பீர்கள். உத்தியோகம், தொழிலில் எதிர்பார்த்த மாற்றங்கள் வந்து சேரும். எதிரிகளின் பலம்

**சிவல்புரி சிங்காரம்**

கூடும். இந்த நேரத்தில் எதையும் முன் யோசனையுடன் செய்வது நல்லது.

இராசிநாதன் குரு வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மன நிம்மதி குறையலாம். எடுக்கும் முயற்சிகளில் எண்ணற்ற தடைகள் ஏற்படலாம். கூட்டு முயற்சிகளில் கூட்டாளிகள் விலகாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அருகில் இருப்பவர்களை அனு சரித்துச் செல்வதன் மூலமும் குடும்ப உறுப்பினர்களின் குணமறிந்து நடந்து கொள்வதன் மூலமுமே வீட்டிலும், வெளியிலும் மனநிம்மதி காண இயலும்.

இல்லத்து பூஜை அறையில் குரு தட்சிணா மூர்த்தி படத்தை வைத்து முல்லைப்பூ மாலை அணிவித்து குரு கவசம் பாடுங்கள். குதூகலம் வந்து சேரும். (முற்றும்)

# மத்திய வங்கியின் பிராந்தியக்கிளை யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளது

(கொழும்பு)

மத்திய வங்கியின் பிராந்திய கிளையொன்று ஜுலை மாதத்தில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படவுள்ளதாகவும் மற்றுமொரு கிளை திருகோணமலையில் திறக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மத்திய வங்கியின் செயற்பாடுகளை பரவலாக்கும் நோக்கில் , ஏற்கனவே அனுராதபுரம் , மாத்தறை மற்றும் மாத்தளை ஆகிய நகரங்களில் கிளைகள் நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் வறுமையை இல்லாதொழிக்கும் முனைப்புக்களில் ஓர் கட்டமாக இந்த நடவடிக்கை அமையப்போவதாகவும்,

ஊழியர் சேமலாப நிதி போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு பிராந்தியக் கிளைகளுடன் தொடர்பு கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பிராந்தியக் கிளைகளை நிறுவுவதன் மூலம் வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவுகளைப் பேணக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது. (6)

# விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் கிழக்கு குட்டி சுட்டி சிறுவர் பாடசாலை விளையாட்டுவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.2 மணிக்கு யாழ். கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ்.கோண்டாவில் இராமகிருஸ்ணா மகாவித்தியாலய அதிபர் எஸ். வாமதேவன் பிரதமவிருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (6)



தென்புலோலி தமிழ் தாத்தாகந்தமுருகேசனாரின் 45ஆவது சிரார்த்த தினத்தை முன்னிட்டு புலோலி மத்திய நூல் நிலையத்தில் பிரதேச சபைச் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச சபை முன்னாள் தலைவர் ஐ.இரங்கேஸ்வரன் உரையாற்றுவதையும் ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் சே.ஏகாம்பரநாதன் மற்றும் கலாபூசணம் செ.மாணிக்கவாசகர் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். (படம்:- மருதங்கேணி நிருபர்)

# புதிய குளங்களை அமைப்பதற்கு நீர்ப்பாசன அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கிடைக்கும் நீரில் 60 சத வீதம் கடலில் கலக்கிறது. இவற்றைத் தடுத்து மாவட்டத்தில் புதிய குளங்களை உருவாக்க நீர்ப்பாசன நீர் முகாமைத்துவ அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இதன் மூலம் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதுடன் விவசாயச் செய்கையையும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பாக ஆராயும் உயர்மட்ட மாநாடு நீர்ப்பாசன மற்றும் நீர்முகாமைத்துவ அமைச்சின் ஏற்பாட்டில் மாவட்ட செயலக அனுசரணையுடன் ஹோப் இன் விடுதியில் நடைபெற்றதாகவும் இருக்கின்ற குளங்களை அபிவிருத்தி செய்வதுடன் புதிய குளங்களை இம் மாவட்டத்தில் உருவாக்குதல் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான வினாக்கள் இலகுபடுத்தப்படவுள்ளது

(கொழும்பு)

5ஆம் ஆண்டு புலமைப்பரீட்சை பரீட்சைக்கான வினாக்கள் இலகுபடுத்தப்படவுள்ளதாக கல்வி அமைச்ச அறிவித்துள்ளது.

மாணவர்களின் வயது மற்றும் அறிவாற்றல் என்பவற்றுக்கு ஏற்ற வகையில்,பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்படும் என கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்துள்ளார்.

ஆரம்ப நிலையில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு கடினமான வகையில் புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் தயாரிக்கப்படுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதையடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான வினாத்தாள்களின் மூலம் மாணவர்களுக்கு அனாவசியமான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைத் தொடர்பில் ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்று நியமிக்கப்படவுள்ள தாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஓய்வு பெற்ற மற்றும் தற்போது பதவி வகிக்கும் அதிபர்களிடம் கருத்துக்கள் கோரப்படவுள்ளதாகவும் 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் போட்டிப்பரீட்சை மாணவர்களின் குழந்தைப்பருவத்தை கவர்ந்துகொண்டுள் ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (6)

# மன்னாரில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிக்கு விலை மனு கோரல்

மன்னாரில் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிகளுக்காக விலை மனு கோரப்பட்டுள்ளது.

மசகு எண்ணெய் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்ளும் நிறுவனத்தினால் விலை மனுக்கள் கோரப்பட்டுள்ளதாக எரிபொருள் தொழிற்துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் இந்த நிறுவனத்தால் எண்ணெய் அகழ்வாராய்ச்சிகளுக்காக நிலத்தைக் குடையும் நடவடிக்கைகளில் ஈடுபடும் மற்றுமொரு நிறுவனம் விலைமனுவின் மூலம் தெரிவு செய்யப்படவுள்ளது.

எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சிகளுக்காக 3.8 கிலோமீற்றர் ஆழம்வரை நிலத்தைக் குடைய வேண்டுமென அமைச்சர் மேலும் கூறினார். (6)

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### சுயம்பரமாலை

வானவில் ஒன்றுசேர்ந்து
தோரணம் கட்ட
மின்னல்கள் புகைப்படம் எடுக்க
முகில்கள் தம்முடன்
மோதிக் கொண்டு
மேளதாளமாக
இடிமுழங்க
வான மாப்பிள்ளை
மணமகளாம் பூமாதேவியை
நோக்கி
பூக்களான மழைத்துளிகளைக்
கோர்த்து
பூமாதேவிக்கு
அணிவிக்கிறான்

செ.வினுஷா
பிளவத்தை

### ஹைக் கூ...

ஆடாதே மனிதா!
உன்னைப் பார்த்தே
பூமியும் அதிர்கிறது
*****
படித்தவனின்
பட்டம் பறக்கிறது
சுழல்காற்று
*****
சிலந்தி
விரித்த வலைக்குள்
பண்பாட்டுடை
*****
நாய்க்கு
வால் கொடுத்த வள்ளல்
மனிதன்

பொன் சுகந்தன்
நெல்லியடி

### நண்பியே!



என் வாழ்வில் புதுயுகம்
பிறந்தது உன்னாலே
அன்பே உன்னைப் பிரியாத
வரம் வேண்டும்
உறவுகளிலே உயர்ந்தது நட்புத்தான்
உயிர்கொண்ட நட்பிற்கு
மரணமில்லை
நம் நட்பு என்றும் அழியாதது

ப.மதுமதி
யா/இராமநாதன் கல்லூரி

### இமயம் தொட...

அன்பை ஆயுதமாக்கு
எதிரியும் உனைக்காண
பூவுடன் தேடிவருவான்
உலகிலேயே!
கூர்மையானதும்
வலிமையானதுமான
ஒரே ஆயுதம்
அன்பு மட்டும்தான்!

மாவை. நா.கஜேந்திரா

### பாதை மாறிய பாதங்கள்

ஆதரவற்று அகதியாய் இருக்கையில்; நீ
அன்புடன் நெருங்குவதாகவேயுணர்ந்தேன்; பின்பு
சீதனமேதும் வேண்டாமென்றே வாழ்வில்
சேர விரும்பியதையும் பார்த்தேன்; பெண்கள்
சாதனை படைக்கப் பிறந்தவரென்றே அரங்கில்
சத்தமாய் முழங்கியதையும் கேட்டேன்; முடிவில்
காதலில் சாதி நீ பார்த்த கணத்தில்; என்
கால்களை வழி மாற்றி நடந்தேன்

பிரியா பரந்தாமன்
கைவேலி

### மொட்டைக்கடிதம்

வஞ்ச உள் நோக்குடன்
வதன மதி முகமிழந்து
வன்மையுணர் மனமுடைய
ஏதிலிகள் கூட்டம்
எல்லையின்றி
ஏமாற்ற நினைக்கும்
நிஜமற்ற முகவரியுள்ள
முகங்களின் மொட்டைக் கடிதம்
கானல் நீர் போன்றது
வாய்மையிழக்க வைத்து
வல்லமையின்றி
கயவர் கூட்டத்தோடு
கை கோர்க்க வேண்டுமென்று
கண்ணியமற்ற
கற்பனையே
முகவரியின்றி
முழுமையடைய நினைக்கும்
இயலாதவனின் எழுத்துக்கள்
உள்ளதை உள்ளதென்று
உள்ளத்தால் உள்ளபடி
உண்மையை உரைக்க
உணர்வற்றவன்
போலி வேஷமிட்டு
பொம்மை நாடகமாடும்
மெய்மையற்ற
வெள்ளைத் தாள்
நிஜமாக முடியுமா....?

கொற்றையூர்
மகே-மேனன்

# மௌனத்தின் தேடல் - 24



### வேண்டும் நிதானம்

மனிதர்களே
பேருந்தில் ஏன் இந்த
அந்தரம்
கொஞ்சம் சறுக்கினாலும்
அதுவே எமலோகத்திற்கு
வழிகாட்டிவிடும்
எதிலும் வேண்டும்
நிதானம்

சுப்பிரமணியம் ஜெயரூபன்
2 ம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை

### சுனாமி எச்சரிக்கையோ

போர் தான் முடிந்துவிட்டதே
போக்குவரத்தில் ஏன்
இவ்வளவு நெருக்கடி
இடப் பெயர்வுதான் இனி
இல்லையே
ஏன் இவ்வளவு அவசரம்
ஓ மீண்டும் சுனாமியின் அச்சமா?
அதற்காகத்தான் இவ்வளவு
முன்னேற்பாடா

கந்த ஞானமுத்து
கைதடி மேற்கு

### எங்கே பயணம்

ஓ...சோதரர்களே
மூட்டை முடிச்சுக்களோடு
எங்கே பயணம்
யுத்தத்தின் சிதைவுகளை
வேடிக்கைபார்ப்பதற்கா?
முல்லைத்தீவில் வெற்றிவிழா
எடுப்பதற்கா?
வேண்டாம் மீண்டும்
இருண்ட தசாப்தங்களை
உருவாக்கி விடாதீர்கள்

ஆழ்வார்

### எம் இதய சுமை தாங்கியே

முப்பது ஆண்டு காலம்
அலைந்து திரிந்த எம்மை
சுமந்து திரிந்தாய் நீ
இப்போதும் நாம்
அலைந்து திரிகிறோம்
நீ சுமந்து திரிகிறாய்
நீ எம் இதய
சுமைதாங்கியே

நா.தளையசிங்கம்
கொக்குவில்

சங்குநாதம்

### அவதி

கயிற்றிலும் கம்பியிலும்
தொங்கியபடிஎங்குதான்
போகிறீர்கள்?
அவதியா உங்களுக்கு
அவதி நீ பட்டால்
ஆஸ்பத்திரிதான் உனக்கு

உ.கனிஸ்ரன்
அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம்

### பொறுப்புடன் நடவுங்கள் இளைஞர்களே

பொதுச் சொத்து
என்பதால் பொறுப்பற்ற
செயல் புரியும்
இளையோரே!
வீதி ஒழுங்கை மீறி
வில்லங்கத்தை ஏன்
விலைக்கு வாங்குகிறீர்கள்?
குரங்கிலிருந்து பிறந்தான்
மனிதன் என்பதை
நினைவுபடுத்த
இப்படியொரு குரங்குவித்தை
தேவைதானா? -வீதி
ஒழுங்கை மதித்து நடவுங்கள்
விளையப்போகும் விபரீதத்தை
வரும்முன்னே
தடுத்திடுங்கள்


செ.ரவிசாந்
வீரமனை குப்பிளான்

### இளைஞர்களே...!

அந்தரத்தில் தொங்கியபடி
எங்கே பயணம்?
சுற்றுலாவுக்கோ?
சுடுகாட்டிற்கோ?
கவனம்!

கயன்
மானிப்பாய்

# மௌனத்தின் தேடல்- 25



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 25.06.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.


-ஆசிரியர் -

# மானிப்பாய் புனித
# ஆலய பெருவிழா சிற





## யாழ்.மறைமாவட்ட குருமுதல்வரின் ஆசிச் செய்தி



ஆண்டவருக்கு நன்றி செலுத்துங்கள் ஏனெனில்
அவர் நல்லவர், என்றென்றும் உள்ளது அவரது பேரன்பு
(தி.பா 107:1)

கோடி அற்புதர் என்றும், சக்தி வாய்ந்த புனிதர் என்றும், புதுமை நாயகம் என்றும் போற்றிப் புகழ்பாடும் புனித அந்தோனியாரின் பெரு விழா இன்று யாழ். மானிப்பாயில் கோலாகலமாக கொண்டாடப் படுகிறது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட யுத்தத்தால் மாபெரும் சிதைவுக்கு உட்படுத்தப்பட்ட ஆலயத்தினுள்ளே கம்பீரமாக எழுந்து நின்று காட்சி தரும் சக்தி வாய்ந்த புனிதரின் சொரூபத்தின் திருவிழா இன்று கொண்டாடப்படுகிறது. யாழ். குடா நாட்டில் பல பாகங்களிலும் புனித அந்தோனியார் ஆலயங்கள் இருப்பினும் மானிப்பாயில் அமைந் திருக்கும் புனித அந்தோனியார் ஆலயம் புகழ் பெற்ற தனித்துவமான ஒரு திருத்தலமாகவுள்ளது.

இதற்குக் காரணம் இத்திருத்தலத்தை நோக்கி வரும் பக்தர்களிற்கு இறையருளை அள்ளி வழங்கும் கோடி அற்புதர் புனித அந்தோனியாரின் அற்புதங்களேயாகும். யாழ். மாந்தரின் இதயக் கோயிலில் நீங்காத நினைவலைகளாகவும் விசுவாச வாழ்விற்கு கலங்கரை தீபமாகவும் நம்பிக்கை யின் விடி வெள்ளியாகவும் மலர்ந்திருப்பதும் இதற்கு சான்றாகும்.

பாதுகாவலராகிய புனித அந்தோனியார் எம் அனைவரையும் இறையேசுவின் பாதையில் வழி நடத் தவும் எமது அனைத்து தேவைகளிலும் இறைவனுடன் பரிந்து பேசுவாராக. இறைத்திட்டத்தில் வழி நடக்க செபத்தில் ஒன்றித்து வாழ எனது வாழ்த்துக்களை அனைவருக்கும் தெரிவிக்கிறேன்.

**அருட்கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம்**
**குருமுதல்வர் , ஆயர் இல்லம்,**
**யாழ்ப்பாணம்.**

**மலரமைப்பு:**
**கே.விஜயகாந்தன்**

## மானிப்பாய் புனித அந்தோனிய

யாழ்ப்பாணக் குடா நாட்டிலே இயற்கை எழில் நிறைந்த இடமான மானிப்பாய் பதியிலே கோவில் கொண்டு, பக்தர்களைத் தன்பால் ஈர்ப்பவரும் தலை சிறந்த போதகருமாகிய கோடி அற்புதராம் புனித அந்தோனியார் திருவிழாவை இன்றைய நாளில் பக்த கோடிகள் வெகு விமரிசையாகக் கொண் டாடுகின்றார்கள். மானியம் பதியின் புனித அந்தோனியார் திருத்தலத்திற்கு மலந்த மலர்களில் மறைந்துள்ள தேனை நாடி வண்டுகள் வருவது போல , மக்கள் கூட்டம் அலை அலையாக அணி திரண்டு கோடி அற்புதரின் வரங்களைப் பெற்று சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்து வரும் பெருமைக்குரிய இடமாக இத் திருத்தலம் அமைந்துள்ளது.

புனித அந்தோனியார் கத்தோலிக்க திருமறை பொலிவுடன் திகழும் போத்துக்கல் தேசத்தின் தலைநகராம் லிஸ்பனில் 1195 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் திகதி இவ்வுலகில் அவதரித்தார். இவர் தமது திருமுழுக்கின் போது **பேர்டினட்** எனும் நாமம் பெற்று துறவறம் கொண்ட பின் **அந்தோனி** எனும் பெயர் சூட்டப்பட்டார். இவர் இவ்வுலகில் மிகவும் குறுகிய காலமாகிய 36 ஆண்டுகள் வாழ்ந்தார். இவ் வாறு தன் 36 ஆம் அகவையில் இவ்வுலக இறை வாழ்வுப் பயணத்தை நிறைவு செய்து 1231 ஆம் ஆண்டு ஆனி 13 ஆம் திகதி விண்ணக இறைவனின் தரிசன மாட்சியில் பங்கெடுத்தார்.

அந்த நாளையே நாம் புனித அந்தோனியாரின் பெருநாளாகக் கொண்டாடி வருகிறோம்.

இவர் இறந்த நான்காம் நாள் செவ்வாயன்று கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டதால் செவ்வாய்க் கிழமை அவரது மதிப்புக்குரிய நாளாக அவரின் பக்தர்களால் நினைவு கூரப்பட்டு வருகிறது.

புனித அந்தோனியார் தம்முடைய வாழ்க்கைக் காலங்களில் இயேசுவின் நற்செய்தியை அறி விப்பதில் இயேசுவை பிறருக்கு அறிவிக்க வேண்டும் என்ற ஆவலினால் பல இடங்களுக்குச் சென்று இறைவார்த்தையைப் போதிப்பதிலும் மக்களை நல்வழிப்படுத்துவதிலும் சிறப்புற்று விளங்கினார். பாவத்தின் கோரப்பிடியின் அகல பாதாள அழிவுப் பாதையில் அகப்பட்டு மீள முடியாது அவதியுற்று, அமைதியிழந்து பரிதவிக்கும் அனைவரையும் மீட்பதே எம் புனிதரின் தணியாத் தாகமாகும்.

கோடி அற்புதர் என்று அழைக்கப்படும் தூய அந்தோனியார் தம்மிடம் அருள் வரங்களைப் பெறு வதற்காக அண்டிவருபவரை அரவணைப்பவராக விளங்குகிறார். இறைவல்லமையை பெற்ற இவர் பேய்களை ஓட்டுவதிலும் ஊமைகளுக்கு வார்த்தை அளிப்பதிலும் குருடருக்கு பார்வை அளிப்பதிலும் முடவரை நடக்கச் செய்வதிலும் மரித்தவரை உயிர்ப்பிப்பதிலும் காணாமல் போன பொருட்களை கண் டெடுக்கச் செய்வதிலும் வல்லவராகத் திகழ்ந்தார்.

புனித அந்தோனியார் தலை சிறந்த தமது கரங்களிலே திவ்விய பாலனை ஏந்தும் பேறுபெற்ற வராகவும் திருச்சுருபத்தில் காணலாம். அத்துடன் புனித அந்தோனியாரின் கையிலே இறைவனின் வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமும் இருப்பதையும் காணக்கூடியதாகவுள்ளது. நாம் உட்கொள்ளும் தேவநற்கருணையில் ஆண்டவர் இருக்கின்றார் என்பதை நிரூபிக்க ஒருவருடன் போட்டி நடத்தினார். ஒரு கழுதை மூன்று நாட்கள் பட்டினி போடப்பட்டது. அக் கழுதையின் முன் தேவநற்கருணையும் வைக் கோலும் வைக்கப்படும் போது அது தேவநற்கருணையைப் பணிந்தால் நற்கருணையில் ஆண்டவர் இருக்கிறார் எனவும் பணியாது வைக்கோலை உண்டால் நற்கருணையில் ஆண்டவர் இல்லை எனவும்

விதிமுறை விதிக்கப்பட்டது. போட்
ஏந்தியவராக வந்தார். வைக்கோ
ஆச்சரியம்! அப்போது கழுதை தே
கருணையில் ஆண்டவரின் பிரசன்
அந்தோனியார் வெற்றி பெற்றார்.

இதன் மூலம் இவரது வாக்கு
மக்கள் மத்தியில் புனித அந்தே
உதாசீனப்படுத்தினர். இதனால்
கிடைக்கவில்லை நான் மீன்களுக்
இறைவாக்குரைத்தார். என்ன ஆச்
கேட்க கரைக்கு வந்தன. இதன் மூ
இறைவன் பக்கம் திரும்ப வழிசமை

அந்தோனியார் குருவாக திரு
வேண்டி நிர்ப்பந்திக்கப்பட்டார். குரு
தலைசிறந்த போதகர் என்று எல்லே
பதிதரும் மனம் மாறினர். இவர் இ
மறைவல்லுனர் என்று போற்றப்ப

இவர் இறந்து சுமார்36 வருடத்
நா மட்டும் அழியாது காணப்பட்
வனிடம் பெற்றது; இவ்வுலகில் வா
ராக இருந்தமையால் இறைவன்

புனித அந்தோனியார் தமது இ
தும் நமக்காக பல புதுமைகள் செய்

இன்று மானிப்பாய் புனித அந்
பவர்கள் தமது ஆன்மீக சரீர தே
இத்தலத்திற்கு வரும் மக்கள் அவர
மேலாக அவருடைய போதனை
மலர வேண்டும்.

புனித அந்தோனியார் திருப்ப
அமைந்திருக்கிறது. மானிப்பாய்
அனைவரும் இறைவனின் நிறை
வாழ்வை நிறைவாக்குவார்களாக

டேவிட்பீரிஸ் மோட்டார் கம்பனியின்
அங்கிகரிக்கப்பட்ட விற்பனை முகவர்
ரஞ்சித் மோட்டோர்ஸ் எஞ்ஜினியரிங்
யாழ்.வீதி , மானிப்பாய்.
T.P:-077 3107549 - 021 3737808

PC SYSTEMS
Total IT Solution Providers
PC SYSTEMS, Alady Junction, Manipay.
(0217391070,0217391071,0217391072, 0777917790)

IYNKARAN MOTORS
MARKET VIEW, JAFFNA ROAD, MANIPAY
Spare parts for motobikes, Three wheelars, waterpumbs &Bicycle
Authorized Distributers of CEAT TYRES, FEVICOL ltems in jaffna
T.P:-021 5100620, 021 5671073,

சுதர்சன்
மானிப்பாய்

பால்மா வகை, பிஸ்கட் வகை, பலசரக்கு
பொருட்கள் மலிவாக பெற்றுக் கொள்ள முடியும்.
ஃபமிலி சுப்பர் ஸ்பொட்
சந்தைக்கு அருகாமை, மானிப்பாய்.

மதன் எலக்ரோனிக்ஸ்
சுதுமலைச்சந்தி,மானிப்பாய்.
தொ.பே. 077 7448668- 0217901574 -0217900728
பர்ணபாஸ் எலக்ரோனிக்ஸ்
360/1, பிரதான வீதி,யாழ்ப்பாணம்.
சத்திரச்சந்தி ,யாழ்ப்பாணம். மவுண்கார் மேல் றோட், குருநகர்.

# த அந்தோனியார்
# றப்பு மலர்-20.06.2010





## ஆலய பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி



மானிப்பாய் புனித அந்தோனியார் திருத்தலமானது; அண்டிவந்தோருக்கு அபயம் அளிக்கும் இடமாக அமைந்துள்ளது. ஆரம்பத்தில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட சிற்றாலயமானது வளர்ச்சியடைந்து கம்பீரத்துடன் இன்று காட்சியளிக்கின்றது.

இவ்வாலயமானது இன, மத பேதமின்றி அனைவரையும் வரவேற்று அருள் பொழியும் இடமாக விளங்குகின்றது. வாழ்வில் துன்பங்களினாலும் சுமைகளினாலும் வருந்துவோர்க்கும் ஆன்மீக வாழ்வில் அமைதியை இழந்து தவிப்போருக்கும் அடைக்கலம் அளிக்கும் திருத்தலமாக இவ்விடம் அமையப் பெற்றுள்ளது. நாளாந்தம் இத்திருத்தலத்தை நாடிவரும் பக்தர்கள் இவற்றிற்கு சான்றாக அமைகின்றனர்.

கோடி அற்புதர் என அழைக்கப்படும் புனித அந்தோனியார் இவ்வுலகில் முப்பத்தாறு ஆண்டுகள் மட்டும் வாழ்ந்தாலும் வல்லமையுள்ளவராகவும் பலராலும் போற்றப்படுபவராகவும் திகழுகிறார். அவரது தூய வாழ்வு இதற்கு காரணமாக அமைகின்றது. இறைவனை அன்பு செய்தவராகவும் இறைவார்த்தையை மக்களுக்கு தனது நாவினால் போதித்தவராகவும் இருந்ததை அவரது வாழ்க்கை வரலாற்றில் காணக் கூடியதாக இருக்கிறது.

இவர் சிறந்த மறைபோதகராக விளங்கி பலரை மனம்மாற்றினார். தனது போதனையை வாழ்வாக்கினார். இறைவனுக்கும் தனக்கும் இடையே நெருங்கிய உறவுப் பாலத்தை உருவாக்கி இறைவனிடமிருந்து பல புதுமைகளை செய்வதற்கு ஆற்றலை பெற்று இறையாட்சிக்கு சான்று பகர்ந்தார்.

தூய அந்தோனியாரின் திருநாளை கொண்டாடும் பக்தர்கள் அனைவருக்கும் திருநாள் வாழ்த்துக்களைக் கூறி நிற்கின்றேன். புனிதரின் தூய வாழ்வை முன்னுதாரணமாக கொண்டு வாழ்வதன் மூலமாக நாமும் மனித நேயமுள்ளவர்களாக வாழ்வோம் என்று இந்நாளில் சபதம் எடுப்போம். புனிதரின் பரிந்துரை உங்களுக்கு நிறைவாக கிடைப்பதாக.

*அருட்பணி.அ.ப.அன்ரனிப்பிள்ளை*
*பங்குத்தந்தை.*

## ாணியார் ஆலய திருவிழா

ப்பட்டது. போட்டியும் ஆரம்பமாகியது. அந்தோனியார் தேவ நற்கருணையை
ார். வைக்கோலும் வைக்கப்பட்டது. பின் கழுதை கொண்டுவரப்பட்டது. என்ன
ாது கழுதை தேவநற்கருணை முன் தெண்டனிட்டு பணிந்து, வணங்கியது. நற்
டவரின் பிரசன்னம் உள்ளது என்பது நிரூபணத்துடன் உறுதி செய்யப்பட்டது. புனித
வற்றி பெற்றார்.

இவரது வாக்குவன்மை மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியது.

ல் புனித அந்தோனியாரின் இறைவார்த்தையை போதித்த போது மக்கள் அதனை
ார். இதனால் வெறுப்படைந்த புனித அந்தோனியார் "உங்களுக்கு இப்பேறு
நான் மீன்களுக்கு இறைவாக்குரைப்பேன்" என்று கூறி சமுத்திரத்தை நோக்கி
ார். என்ன ஆச்சரியம்! சமுத்திரத்தின் மீன்கள் எல்லாம் இவரது இறைவார்த்தையை
தன. இதன் மூலம் மக்கள் மத்தியில் ஆண்டவரைப் பற்றிய அச்சம் ஏற்பட்டு மக்கள்
திரும்ப வழிசமைத்தது.

குருவாக திரு நிலைப்படுத்தப்பட்ட பின் ஒரு பெரிய கூட்டத்திலே பிரசங்கம் செய்ய
கப்பட்டார். குருக்களின் பிரசங்கத்தை விட மேலோங்கி காணப்பட்டதால் இவரை
ர் என்று எல்லோரும் போற்றினர். அவருடைய போதனையைக் கேட்ட பாவிகளும்
றினர். இவர் இறைவார்த்தையால் மக்களை நல்வழிப்படுத்தினார். இதனால் சிறந்த
ன்று போற்றப்படுகிறார்.

மார்36 வருடத்தின் பின்னர் இவரது கல்லறையை திறந்து பார்வையிட்டபோது,
து காணப்பட்டது. இதனால் புனித அந்தோனியார் நா அழியா வரத்தை இறை
இவ்வுலகில் வாழ்ந்த போது என்றும் இறைவனையே தம் வாயில் உச்சரித்தவ
ல் இறைவன் அந் நாவிற்கு தம் பாதுகாப்பை வழங்கினார்.

ானியார் தமது இவ்வுலக வாழ்வில் மட்டுமல்ல தமது விண்ணக வாழ்வில் இருந்
துமைகள் செய்கிறார். எம் மத்தியில் இவரின் புதுமைகளுக்கு குறைவே இல்லை.
பாய் புனித அந்தோனியார் விழா கொண்டாடப்படுகிறது. இவ்வாலயத்திற்கு வரு
ன்மீக சரீர தேவைகளை நிறைவு செய்து செல்கிறார்கள். அந்தோனியார்
ம் மக்கள் அவரது அருள் வரங்களை பெறுவதோடு மட்டும் நின்று விடாது அதற்கு
ய போதனையையும் நல்வாழ்வையும் பின்பற்றி இறைவனுக்கு சாட்சிகளாக

ானியார் திருப்பண்டம் அவரது திருத்தலத்திலே வைக்க பாக்கியம் பெற்ற தலமாக
. மானிப்பாய் பதியின் புனித அந்தோனியாரின் திருவிழாவைக் கொண்டாடும்
றவனின் நிறைவான ஆசியும் தூய அந்தோனியாரின் பரிந்துரையும் பெற்று
க்குவார்களாக.

தயானந்தி,மயூரி

V.S.M.ஸ்ரோர்ஸ்
மானிப்பாய்.

பிரேம் நகை மாடம்
யாழ். வீதி, மானிப்பாய்.

யோய்ஸ் பார்மசி
மானிப்பாய்.

பிரம்யா நகை மாடம்
யாழ்.வீதி, ஆலடிச்சந்தி,
மானிப்பாய்.

மானிப்பாயில் கணனிக் கல்விக்கு
UNI TECHNOLOGY
ICT Education Trainers
T.P:-0217429325
077 7110862
Jaffna Road,
Manipay.

BANK OF CEYLON
BOC
BANK OF CEYLON இலங்கை வங்கி
ලංකා බැංකුව இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்.

# மக்களை வலுப்படுத்த கையடக்க தொலைபேசி ஒரு பெரும் சாதனம்

## அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவிப்பு



(கொழும்பு)

கையடக்க தொலைபேசி மக்களை வலுப்படுத்துவதற்கு பெரும் உறுதுணையாக, சாதனமாக அமைகிறது என தொழில்நுட்பம் மற்றும் ஆய்வுதுறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார். கடந்த வியாழக்கிழமை கொழும்பு தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நடந்த தென்னாசிய கையடக்க தொலைபேசி மாநாட்டில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு கூறினார்.

இலங்கை தகவல்தொடர்பாடல் தொழில்நுட்பநிலையம் (ICTA), எடிசலாட் மற்றும் எச்.செனிட் இன் பங்களிப்புடன் ஒழுங்கு செய்யப்பட்ட மாநாட்டை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,


தொழில்நுட்பத்தை தகுந்த வழியில் பயன்படுத்தினால் அது உலகின் எப்பகுதியில் மக்கள் இருந்தாலும் அது மாபெரும் வாய்ப்புக்களை வழங்கும். ஏனைய தென்னாசிய நாடுகளுடன் ஒப்பிட்டால் இலங்கை அதன் உயர்மட்ட எழுத்தறிவின் காரணமாக ஒரு வாய்ப்பு மிக்க நிலையிலுள்ளது. அறிவு என்பது வலிமையைக் கொண்டு வந்து தரும். அறிவு மக்களை முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லும். அது ஏழைகள்-செல்வந்தர்கள் மற்றும் கிராமம்-நகரம் இடையிலான இடைவெளியை நிரப்பும். அதே நேரம் பிழையான தகவல்களினால் சமூகத்துக்கு பெரும் பின்னடைவுகள், கேடுகள் ஏற்படுகின்றன.

கையடக்கத் தொலைபேசி பிழையான தகவல்கள் பரப்பப்படுவதை நிறுத்தி உண்மையான தகவலை வழங்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்.

மகிந்த சிந்தனைப்படி, இலங்கை தெற்காசியாவின் அறிவாற்றல் மையமாக திகழவேண்டும் எனத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு இந்த மாநாடும் வலுச் சேர்க்கும்.

தெற்காசியாவில் கையடக்கத் தொலைபேசிப் பாவனை ஆச்சரியமான விதத்தில் அதிகரித்து வருகிறது. இந்தியாவில் கையடக்கத் தொலைபேசிகள் 70 கோடியும், பங்களாதேஷில் 5.7 கோடியும், இலங்கையில் 1.4 கோடியும் பாவனையில் உள்ளன எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



ஜனாதிபதியால் மீண்டும், மத்திய வங்கியின் ஆளுநராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டார். கடந்த 16ஆம் திகதி அலரிமாளிகையில் வைத்து நியமனக் கடிதம் வழங்கப்பட்டதை படத்தில் காணலாம். இரண்டாவது தடவையாக நியமிக்கப்பட்ட இவரது பதவிக் காலம் 6 ஆண்டுகளுக்கானதாகும்.

## மன்னார் எண்ணெய் அகழ்வுக்கு இந்திய உதவியை நாடும் இலங்கை

மன்னார் வளைகுடாவில் எண்ணெய் படிமங்களைக் கண்டுபிடிப்பதற்கும், அகழ்வதற்கும் இலங்கை அரசு இந்தியாவிடம் உதவி கோரியுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன் அண்மையில் மேற்கொண்ட விஜயத்தின்போது விரிவாக கலந்துரையாடியுள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான கடல் எல்லையில், மன்னார்ப் பகுதியில் எண்ணெய் படிமங்கள் மற்றும் எரிவாயு அகழ்வதற்கான சாத்தியப்பாடுகள் குறித்து இரு நாடுகளும் இணைந்த கூட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவது தொடர்பான யோசனை ஒன்று இலங்கை தரப்பால் முன்வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இந்தியா எதிர்காலத்தில் பேச்சுக்களை நடத்தி சாதகமான முடிவுகளை எடுக்கும் என இந்திய பிரதமரால் உறுதியளிக்கப்பட்டது. இந்தியாவின் கெய்ன் நிறுவனம் மன்னார் கடற்பகுதியின் ஒரு பிரிவில் எண்ணெய் கிணறு அகழ்வுப் பணிகளை அடுத்த வருடம் ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வர்த்தக செய்தித் துளிகள்

### இல.திறன் தொழிலாளருக்கு கனடாவில் அதிகரித்த கேள்வி

கனடாவில் இலங்கைத் தொழிலாளர்களுக்கு (Skilled Workers) அதிகரித்த கேள்வி காணப்படுகிறது. அவர்களின் தொழில் நேர்த்தி, வேலையை முடிக்கும் மனோபாவம் மற்றும் சிறந்த வேலைப்பண்பு காரணமாக கனடாவில் வரவேற்கப்படுகிறார்கள் என குடிவரவு ஆலோசகர் ஒருவர் தெரிவித்துள்ளார். இலங்கையரின் ஆங்கில அறிவு இதற்கு சாதகமாகவுள்ளதாகவும், எலக்ரிக்கன், மேசன், நீர்க்குழாய் பொருத்துநர், கணக்காளர் மற்றும் மருத்துவ தாதியர் ஆகியோர் அங்கு அதிகளவில் தேவைப்படுகின்றனர். ஒருதிறன் தொழிலாளிக்கு 10.25 கனேடிய டொலர் ஒரு மணி நேரத்துக்கான ஊழியமாக வழங்கப்படுகிறது எனவும் ஒரு மருத்துவத் தாதி 8 இலட்சத்தில் இருந்து ஒரு மில்லியன் வரை உழைக்க முடியும் என்றார்.

### 900 ％ வளர்ச்சியில் சிலோன் பிஸ்கட்

சி.பி.எல் நிறுவனம் 2001 முதல் 2010 வரையான ஒரு தசாப்த காலப் பகுதியினுள் 900 வீத வளர்ச்சியை எய்தியுள்ளதாக அண்மையில் நடைபெற்ற சிலோன் பிஸ்கட்ஸ் நிறுவனத்தின் விநியோகஸ்தர் ஒன்றுகூடலும், நட்சத்திர விருது வழங்கும் நிகழ்விலும் அறிவிக்கப்பட்டது.

சொக்லேட், கேக், பிஸ்கட், சமபோஷ மற்றும் லங்கா சோய் பிரிவுகளின் வெற்றிகரமான அடைவுகள் குறித்தும் ஆராயப்பட்டிருந்தன. கடந்த தசாப்த காலம் அனைவருக்குமே கடினமான காலம் எனவும் இந்நிலையிலும் நிறுவனத்தின் ஒவ்வொரு உணவுத் தயாரிப்புகளும் 8 வீத வளர்ச்சியை எய்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

### ஐதராபாத்தில் பேஸ்புக் அலுவலகம்

சர்வதேச அளவில் முதன்நிலை சோசியல் நெட்வேர்க் தளம் என்ற பெருமைக்குரிய பேஸ்புக், இப்போது இந்தியாவிலும் தனது அலுவலகத்தை தொடங்குகிறது. ஐதராபாத்தில் விரைவில் அலுவலகம் திறக்கிறது இந்நிறுவனம். தற்போது கலிபோர்னியா, அயர்லாந்தின் டப்ளின் மற்றும் டெக்ஸாஸின் ஆஸ்ரின் ஆகிய இடங்களில் பேஸ்புக் அலுவலகங்கள் உள்ளன. இவற்றுக்கு அடுத்து இந்தியாவில்தான் திறக்கப்படுகிறது. இந்தியாவில் அதிகமான பேஸ்புக் பயனாளர்கள் உள்ளனர். இங்கு அலுவலகம் திறப்பதன் மூலம் பேஸ்புக்கின் வீச்சும் பார்வையாளர் எண்ணிக்கையும் வருவாயும் பெருகும் என்ற நம்பிக்கையுள்ளது என நிறுவன உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 112.78 | 114.33 |
| பவுண்ட் (ஐக்கிய இராச்சியம்) | 165.35 | 168.71 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 137.77 | 141.05 |
| சுவிஸ் பிராங் | 98.86 | 101.87 |
| கனேடிய டொலர் | 108.82 | 112.37 |
| அவுஸ்திரேலிய டொலர் | 96.27 | 99.15 |
| சிங்கப்பூர் டொலர் | 80.38 | 82.27 |
| ஜப்பான் யென் | 1.22 | 1.26 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.89 | |

### புதிய உயர்வைத் தொடும் கொழும்பு பங்குச் சந்தை

கொழும்பு பங்குப் பரிவர்த்தனை புதிய உயர் அடைவை எட்டியுள்ளது. குறிப்பாக அனைத்து பங்கு விலைச்சுட்டி வார இறுதியில் 4561.3 புள்ளியாக உள்ளது. இதேபோல் மிலங்கா விலைச்சுட்டி 5182.2 புள்ளிகளையும் அடைந்துள்ளது.

கடந்த வாரம் ஜோன் கீல்ஸ் பங்குகள் அதிகளவில் வியாபாரமாகின. இதேபோல் கொமர்ஷல் வங்கி மற்றும் செலான் வங்கிப் பங்குகளும் அதிகரித்தே முடிந்தன. கடந்த வாரம் சராசரியாக 2.62 பில்லியன் ரூபாய் புரள்வாகப் பதிவாகியது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

| துறை | புள்ளி | அதிகரிப்பு/ குறைவு |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 4607.34 | 03.98 |
| மிலங்கா விலைச்சுட்டி | 5271.47 | (0.76) |
| புரள்வு (ரூபா.மில்லியன்) | 2340.90 | |

***உயர்வடைந்த பங்குகள்*** : டயலொக் ரெலிகொம், நெஸ்ரல் லங்கா, சிறிலங்கா ரெலிகொம், றிச்சட் பீரிஸ், நவலோகா ஹொஸ்பிட்டல்.
***சரிவைக் காட்டிய பங்குகள்.*** சிலோன் ரொபாக்கோ கம்பனி, கார்ஷன்ஸ், கார்கில்ஸ் (சிலோன்), என்வெயர்மென்டல் றிசோசஸ், ஏசியன் ஹோட்டல்ஸ்.

# ஏசியன்-சி.எஸ்.சியின் மல்டிமீடியா புலமைப்பரிசில்

## மல்டிமீடியா, அனிமேஷன் வேலைவாய்ப்புகள் குவிகின்றன



1993-ம் ஆண்டு தொடக்கம் தகவல் தொழில்நுட்பக் கல்விச் சேவையில் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் முன்னணி வகித்து வரும் ASIAN COMPUTERS நாடு முழுவதிலுமுள்ள கிளைகளின் ஊடாக சமகால நவீன கணனிப் பயிற்சிகள் அனைத்தையும் 16 ஆண்டு காலமாக மாணவர்களுக்கு வழங்கி வருகிறது. அத்துடன் இந்தியாவை தலைமையகமாகவும் தென் இந்தியா முழுவதும் 500 பயிற்சி மையங்களைக் கொண்டு இயங்கும் மிகப் பெரிய நிறுவனமான சி.எஸ்.சி.கொம்ப்யூட்டர் எடியுகேஷன் உயர் கல்வி நிறுவனத்துடன் இணைந்து சர்வதேச தரம் மிக்க மற்றும் அங்கீகாரம் பெற்ற பயிற்சிகளைம் பாட முடிபில் டிப்ளோமா சான்றிதழ்களையும் ASIAN வழங்கி வருகிறது. அத்துடன் CSC இன் மல்டிமீடியா பிரிவான - Softview வின் இலங்கைக் கிளையாகவும் முதன்மை பயிற்சி நிறுவனமாகவும் செயற்படுகிறது.

மாணவர்கள் பயன்பெற சி.எஸ்.சி ஒவ்வொரு வருடமும் MSAT ஸ்கொலர்ஷிப் தேர்வினை ஜூன் மாதம் நடத்தி வருகிறது. மாணவர் நலன் கருதி கடந்த 5 ஆண்டுகளாக சி.எஸ்.சி. மல்டிமீடியா அனிமேஷன், கிராபிக்ஸ் பாடத் திட்டத்திற்காக இத் தேர்வை நடத்தி வருகிறது. இந்த வருடமும் இத் தேர்வினை எதிர்வரும் ஜூன் மாதம் 26 மற்றும் 27-ம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிறு) நடத்த எண்ணியுள்ளது. இத் தேர்வினை கணிப்பொறிப் பயிற்சி பெற விரும்புகின்றவர்கள் மற்றும் ஆர்வமுடையவர்கள் அனைவரும் எழுதலாம்.

இத்தேர்வினை எழுத ஆகக் குறைந்தது G.C.E.(O/L) அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மும்மொழிகளில் விரும்பிய மொழியில் எழுதலாம்.

வேலைவாய்ப்புக்கு உகந்த கல்வியை அனைத்துத் தர மக்களும் பெற வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றமையால் சி.எஸ்.சி.-ஏசியன் நிறுவனம் பயிற்சியோடு எல்லோருக்கும் கணனி வேலைவாய்ப்பு கிடைக்க வேண்டும் என்ற திட்டத்தில் இறங்கியுள்ளது. எதிர்வரும் மாதங்களில் இதற்கான அறிவிப்புகளை பத்திரிகை வாயிலாகவும் காணலாம்.

இத் தேர்வில் வெற்றிபெறும் அனைவருக்கும் அவரவர் பெறும் மதிப்பெண்களுக்கேற்ப முறையே 40%, 50% மற்றும் 60% கட்டணக்கழிவு வழங்கப்படும்.

**பாடநெறிகள்**

இப் புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடநெறிகள் அனைத்தும் Graphics, Animation, Multimedia சார்ந்ததாக அமையும். கீழ்க் கண்ட அனைத்து Diploma பாடநெறிகளும் இத்துறை சார்ந்த வல்லுநர்களின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டலினூடாக உருவாக்கப்பட்டவை.

**Digital Pre-Press, Video Editing, Web Animation, Audio & Film Editing, Graphic Design, 2D & 3D Animation, Visual Effects, Cartoon Animation, CBT Technology, Mastering Multimedia**

சர்வதேச தர வெளியீடான புத்தகங்களே இப் புலமைப்பரிசிலில் வழங்கப்படும் பாடத் திட்டத்திற்கும் பயிற்சிகளுக்கும் கொடுக்கப்படுகிறது.

**டிப்ளோமா சான்றிதழ்கள்**

100% செய்முறை (Practicles) பயிற்சிகளைக் கொண்ட படிப்புகளுக்கு பயிற்சி நெறி முடிவில் Project மூலமாக தேர்வுகள் நடத்தப்பட்டு சர்வதேச தர நிர்ணயக் கழகத்தால் (ISO 9001:2000) அங்கீகரிக்கப்பட்ட டிப்ளோமா சான்றிதழ்களே வழங்கப்படும். அத்துடன் ஏசியன் மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவில் கடந்த 16 வருடங்களாக பதிவுபெற்ற கல்வி நிலையமாகும் எனவும்,

இம்மாதம் 26, 27 சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெறும் மல்டிமீடியா அனிமேஷன் புலமைப் பரிசில் திட்டத்தில் இணைவதற்கான இலவச பரீட்சை அனுமதிகளை கொட்டாஞ்சேனை, வெள்ளவத்தை, மட்டக்குளி, வத்தளை, நீர்கொழும்பு யாழ்ப்பாணம், நெல்லியடி மற்றும் சாவகச்சேரி ஏசியன்-சி.எஸ்.சி. கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் ஏசியன் நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

CSC-ASIAN
COMPUTER EDUCATION

# அக்கராயன் மகாவித்தியாலய மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

(கொழும்பு)

அக்கராயன் மகாவித்தியாலய இடைநிலை மற்றும் உயர்தர வகுப்பு மாணவர்கள் தளபாடங்கள் இல்லாமல் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குவதாகவும் அந்தப் பிரதேச மக்களுக்கு நிவாரணத்தில் அரிசி வழங்கப்படவில்லை என்றும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வன்னியில் அக்கராயன் மற்றும் மணியங்குளம், ஸ்கந்தபுரம் முதலிய பிரதேசங்களுக்கு மக்களின் நிலவரத்தை பார்வையிட சென்ற பொழுது இந்த விடயங்கள் தொடர்பான கோரிக்கை சம்பந்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டதாக குறிப்பிடப்படுகிறது.

அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு முதலில் சென்ற பொழுது, அங்குள்ள மாணவர்கள் பல்வேறு இடர்களின் மத்தியில் இருந்து கல்வியை கற்கத் தொடங்கியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

முக்கியமாக, எதிர்வரும் உயர்தர மற்றும் சாதாரண தரப் பரீட்சைகளை எழுதும் 225 மாணவர்கள் இருப் பதற்கு கதிரையும் படிப்பதற்கு மேசையும் இல்லாமல் வெறுந்தரையில் இருந்தபடி படித்துக்கொண்டிருக்கிறார்கள் என பாடசாலை அதிபர் கண்ணபிரான் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெரிவித்தார்.

நிலைமைகளை வகுப்பு வகுப்பாகச் சென்று நேரில் பார்த்த சிவஞானம் சிறிதரன் இந்த விடயம் தொடர்பாக உரிய தரப்புகளுடன் பேசுவதாக வாக்களித்தார்.

மணியங்குளம், எட்டாங்கட்டை, அக்கராயன், ஸ்கந்தபுரம் முதலிய இடங்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடிய பொழுது தமக்கு வழங்கிய நிவாரணத்தில் அரிசி வழங்கப்படவில்லை என்று மக்கள் தெரிவித்தனர். மீள்குடியேறி சில நாட்களே ஆன நிலையில் தொழிலற்று இருக்கும் மக்கள் இதனால் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுப்பதாக அவர் தெரிவித்தார்.

போரின் பல்வேறு இழப்புக்களுக்கு முகம் கொடுத்த நிலையில் பல பிரச்சினைகளுடன் அக்கராயன் பிரதேச மக்கள் தங்கள் வாழ்க்கையை ஆரம்பித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

## பயிற்சிப் பட்டறை

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். மாவட்டக் கிளை, வெனிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்திவரும் அனர்த்த இடர்குறைப்பு செயற்திட்டத்தின் ஒரு செயற்பாடாக பங்காளர் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கான அனர்த்த இடர்குறைப்பு தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 25, 26, 27 ஆம் திகதிகளில் யாழ்.செஞ்சிலுவைச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையில் பிரதேச செயலகங்கள், வலயக்கல்விப் பணிமனைகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகள் ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர். (6-134)

## அபிவிருத்திக் கூட்டம்

(நல்லூர்)

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.மாவட்டக் கிளையின் நிறுவன அபிவிருத்திக் கூட்டம் இன்று காலை 11.30 மணிக்கு மாவட்ட கிளையின் தலைவர் பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் தலைமையில் மாவட்டகிளையின் அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட கிளையின் ஆளுநர் சபை உறுப்பினர்கள், பிரிவுக் கிளைகளின் தலைவர்கள், செயலாளர்கள் ஆகியோரை கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட கிளையின் செயலாளர் கு.பாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார். (6-134)

## உணவகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மருத்துவபரிசோதனை

(கொழும்பு)

வவுனியா பிரதேசத்தில் தொற்று நோயைக் கட்டுப்படுத்தும் முகமாகவும், சுகாதார முறையைப் பின்பற்றவும் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களில் ஒன்றாக மாவட்ட சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாக உணவகங்களில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மூன்று நாட்களாக இடம்பெற்ற இத்திட்டத்தில் பிரதேச உணவக உரிமையாளர்கள் கலந்து கொண்டு மருத்துவ பரிசோதனை மேற்கொண்டதுடன், நெருப்புக் காய்ச்சல் ஏற்படாமல் இருப்பதற்கான தடுப்பூசிகளும் வழங்கப்பட்டது.

அத்துடன் உணவகங்களில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார முறைகள் பற்றிய விழிப்புணர்வும் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

இந்நிகழச்சித் திட்டத்தை மாவட்ட வைத்திய அதிகாரியின் வழிநடத்தலில் பொதுசுகாதார பரிசோதகர்கள், சுகாதார திணைக்களத்தினர் செயற்படுத்தியிருந்தனர். (6)

## நிர்மாணப் பொருட்களுக்கான வரி குறைக்கப்படுமா?

(கொழும்பு)



நிர்மாணப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தேவைக்கு அதிகமான வரிகளைக் குறைப்பதன் அவசியத்தை நிர்மாணத் துறை, பொறியியல் சேவைகள் அமைச்சர் விமல் வீரவன்ச வலியுறுத்துகிறார்.

இலங்கை நிர்மாணக் கைத்தொழில் சபை ஏற்பாடு செய்திருந்த வைபமொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் கூறினார்.

நிர்மாணத்துறையில் புதிய பரிமாணத்தை ஏற்படுத்தும் தேவை உருவாகியுள்ளதால் மூலப் பொருட்களுக்கு விதிக்கப்படும் தேவையற்ற வரியைக் குறைக்க வேண்டுமென்ற கருத்தை அமைச்சர் என்ற வகையில் ஏற்றுக் கொள்வதாகவும் இந்த விடயங்களை ஜனாதிபதியிடமும், நிதி அமைச்சு அதிகாரிகளிடமும் தெரிவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் நிர்மாணத் துறை சார்ந்த கைத்தொழிலாளர்களை மட்டுமன்றி சாதாரண மக்களையும் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், இந்தவிடயம் தொடர்பாகக் கொள்கை ரீதியிலான தீர்மானமொன்று தேவையென்று தான் நம்புவதாகவும் அவர் கூறினார். (6)

## ஒபாமாவின் விசேட பிரதிநிதி எதிர்க்கட்சி தலைவருடன் பேச்சு

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதியின் விசேட பிரதிநிதியும் அமெரிக்காவின் பல்தரப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பான தேசிய பாதுகாப்பு பேரவையின் பணிப்பாளருமான சமந்த ாபவர் நேற்றுமுன்தினம் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துள்ளார்.

கொழும்பில் உள்ள அமெரிக்கப் பிரதித் தூதுவரின் இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது. இதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜயசூரிய மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க ஆகியோருடனும் அமெரிக்க பிரதிநிதி பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின் தகவல்களை ஊடகங்களுக்கு வெளியிடுவதில்லை என இரண்டு தரப்பினரும் தீர்மானித்திருந்தனர். எவ்வாறாயினும், இலங்கை அரசாங்கம் தொடர்பில் அமெரிக்கா எதிர்காலத்தில் முன்னெடுக்கும் கொள் கைகள் தொடர்பாக இதன் போது பேசப்பட்டதாக கூறப்படுகிறது. (6)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம்



## நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை

### இன்று ஒன்பதாம் திருவிழா

### நலம் நல்குவாள் நயினை நாகபூசணி

நயினையில் வாழும் நாகபூசணியே
நாகத்தை குடையாக கொண்டவளே
மங்களம் பொங்க மனை சிறக்க
மலை மகளே உன்னை மன்றாடுகின்றோம்
அலை கடலின் அருளாலே
அனைவரையும் ஆதரியுமம்மா !

நடராசா கௌரி, அச்சுவேலி

### அருள்புரிந்து காத்திடம்மா...

அலைகடல் மத்தியில் அன்பின் உருவமாய்
அழகுடன் அமர்ந்திருந்து அருளாட்சி புரியும்
அன்னையே! நயினை நாகபூசணியே!
அடியவர் வாழ்வுதனில் அலையலையாய் வரும்
அல்லல்தனைப் போக்கிடவே அலைகடல் மத்தியில்
அமர்ந்தாயோ? அம்மா, உன்னையே தஞ்சமென
அன்புடனே ஓடிவரும் அன்புள்ளங்களின் குறைகளைந்து
அருள்புரிந்து காத்திடம்மா ...

சைவப்புலவர் த.சக்திவேல், பருத்தித்துறை

### தாயே காத்தருள்வாய்

அன்புத்தாயே நாகபூசணியம்மா
இம் மாநிலத்தின் சக்தி நீயம்மா
இன்பத்தின் இருப்பிடம் நீயம்மா
ஏழை எளியவரைக் காப்பாயம்மா
எங்கும் நிறைந்தே இருப்பாயம்மா
கல்வியின் இருப்பிடம் நீயம்மா
கருணைக் கடலும் நீயம்மா
அனைவருக்கும் அருளைக் கொடுப்பாயம்மா

ஷோபா இராஜேந்திரம் ,சாவகச்சேரி

### நமக்கருள் தந்திடுவாய் என்றும் நீயே

மணிபல்லவம் என்னும் மாண்புறு பதியில்
மனம் விரும்பி உறைந்திடும் மகாதேவித்தாயே
அலைகடல் மத்தியில் அமர்ந்து உன் அடியார்
அல்லல்கள் தீர்த்திடும் கருணைக்கடலே
நாடிவரும் பக்தர்களைக் காக்கவென்றே
நயினை நல்பதியில் குடிகொண்டவளே
நாகம் பூசித்து நல்லருள் பெற்ற நாகபூசணித்தாயே
நமக்கருள் தந்திடுவாய் என்றும் நீயே

சொ.தர்மகுலசிங்கம் , நாயன்மார்க்கட்டு

எஸ்.பி.என். மோட்டோர்ஸ்
171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2833



# ராவணன்

புராண இராமாயணத்தில் மறைந்திருந்து வாலியை கொல்வான் இராமன். இதில் தன் மனைவியை வைத்து இராவணனை கொல்கிறான் இராமன். ஆனால் கொல்பவர் இராமனும் அல்ல கொல்லப்படுபவர் இராவணனும் அல்ல... என்பது தான் ராவணன் படத்தின் கதைக்கரு!

கதைப்படி அந்த அடர்ந்த காட்டிற்கும் அந்த காட்டைச் சார்ந்துள்ள ஊர் மக்களுக்கும் கடவுளாக வாழ்கிறார் வீரா அலைஸ் வீரையன் எனும் விக்ரம். சட்டத்தின் பார்வையில் தவறானவர்களாகத் தெரியும் விக்ரமையும் அவரது சகாக்களையும் போட்டுத்தள்ள வருகிறது தேவ் எனும் பிருத்விராஜ் தலைமையிலான பொலிஸ் படை.

விக்ரமை பிடிக்க அல்லது சாகடிக்க வந்த அவர்கள் திருமண கோலத்தில் இருக்கும் அவரது தங்கை பிரியாமணியை பிடித்துப் போய் கற்பழித்து கந்தல் துணியாக்குகிறது. அதனால் தற்கொலை செய்து கொள்ளும் பிரியாமணியை பார்த்து கதறும் விக்ரம் எடுக்கும் அவதாரம் தான் ராவணா அவதாரம்.

பிருத்விராஜின் ஆசை மனைவி ஐஸ்வர்யாராயை கடத்தி காட்டிற்குள் சிறை வைக்கும் விக்ரம், ஐஸ்வர்யாராயை தேடி வரும் பிருத்விராஜ் தலைமையிலான பொலிஸ் படைக்கு வேட்டு வைத்தாரா அல்லது ஊர்மக்கள் ஒத்துழைப்புடன் பொலிஸுக்கு சவால் விட்டு வாழும் விக்ரம் அண்ட் கோ வினரை பிருத்விராஜ் தீர்த்து கட்டினாரா? உள்ளிட்ட இன்னும் பல வினாக்களுக்கு வித்தியாசமாகவும் விறுவிறுப்பாகவும் விடையளிக்க முயற்சிக்கிறது ராவணனின் மீதிக்கதை! இராவணனின் கதையா? வீரப்பனின் கதையா என்று சாலமன் பாப்பையாவை வைத்து பட்டிமன்றம் நடத்தலாம்.

வீரா எனும் வீரையாவாக விக்ரம் இராவணனை ஞாபகப்படுத்துகிறாரோ இல்லையோ... சந்தனக் கட்டை வீரப்பனையும் அவரது கதையையும் ஞாபகப்படுத்தும் விதமாக வித்தியாசமாக நடித்திருக்கிறார் விகரம். அந்த அழுக்கான மேக் அப்பிலும் அழகாக தெரியும் விக்ரம் பக் பக் பக் என்றும் டர் புர் என்றும் அடிக்கடி விதவிதமாக ஒலிகள் எழுப்புவது ஐஸ்வர்யாராயை பயமுறுத்தியதோ இல்லையோ... ரசிகர்களுக்கு அவர் பாத்திரத்தின் மீது இருக்கும் மதிப்பு மரியாதையை குறைத்துவிடுகின்றது.

மணிரத்னம் படத்தில் ஹீரோக்கள் இப்படிப்பட்ட ஒலிகளை எழுப்புவார்களா என்ன? இதேமாதிரி குருவம்மா இங்கேயே தங்கிவிடு என ஐஸ்வர்யாராயை பார்த்து விக்ரம் அடிக்கடி சொல்வதும் அர்த்தம் சொல்லாமல் இருக்கிறது. கதாநாயகி ஐஸ்வர்யாராய், ராகினி எனும் அழக பதுமையாக காட்சியளிக்கிறார். கூடவே வீரதீர சாகசங்களிலும் ஈடுபடும் அம்மணி, பொலிஸ் புருஷன் பிருத்விராஜைக் காட்டிலும் தன்னை கடத்தி வைத்திருக்கும் விக்ரமிடம் அதிகம் முகபாவங்களில்





நெருக்கம் காட்டுவது ஏனோ தெரியவில்லை! ஏன் இந்த தடுமாற்றம் ஐஸ்?!

பொலிஸ் அதிகாரியாக பிருத்விராஜ், ஐஸ்வர்யாராயுடன் ஜோடி போட்டதற்காக பெருமைப்பட்டுக் கொள்ளலாம். காட்டு திணைக்கள அலுவலகர் கார்த்திக் போத்தலும் கையுமாக படுரகளை. விக்ரமின் அண்ணாக பிரபுபிரமாதும்! தம்பி முன்னா, டி.எஸ்.பி.ஜான்விஜய், வெண்ணிலாவாக பிரியாமணி, ரஞ்சிதா, வர்ஷா, பிரியாமணியன் காதலன் வேலனாக அஸ்வந்த் திலக் என ஏகப்பட்ட நட்சத்திரங்கள்...! எல்லோரையும் தூக்கி சாப்பிட்டு விடுகிறார் அரவாணியாக வரும் வையாபுரி.

ஆறு பாடல்கள் இருந்தும் உசுரே போகுதே..., கோடு போட்டா.. ஆகிய இரண்டு பாடல்கள்தான் வைரமுத்துவை ஞாபகப்படுத்துகின்றன. ஏ. ஆர். ரகுமானின் இசையும் சந்தோஷ் சிவன் - வி. மணிகண்டன் இருவரது ஒளிப்பதிவும் படத்திற்கு பெரிய பலம்!

தொழில்நுட்பத்திலும், பிரமாண்டத்திலும் இதுவரை பார்த்ததை விட நூறு மடங்கு அழகான... அதேசமயம் வழக்கமான மணிரத்னம் படம்! ஆனாலும் அடிக்கடி மணி எத்தனை? என பார்க்கத் தூண்டும் கதைக்களத்தை மட்டும் இன்னும் சற்றே கவனித்திருந்தால் ராவணன் மேலும் ரசனைக்குரியவன் ஆகி இருப்பான்.

மொத்தத்தில் ராவணன் - இராமன் ! இராமன் -இராவணன்!! ரசிகன் ?! கை




# பிரபுதேவாவுடன் ஆட முன்னணி நாயகிகள் மறுப்பு



"இச்" படத்தில் பிரபுதேவாவுடன் ஆட முன்னணி நாயகிகள் மறுத்துவிட்டனர். இது பற்றி பிரபுதேவா தரப்பு தெரிவித்துள்ளதாகவும், மூன்று நாயகிகளுடன் பிரபுதேவா ஆடுவது போல முதலில் யோசித்தோம். இதற்காக இரண்டு நாயகிகளிடம் பேசியிருந்தோம். கடைசி நேரத்தில் அந்த திட்டம் கைவிடப்பட்டது. இப்போது பிரபுதேவா மட்டும் ஆடுகிறார் என்கிறார்.

# அஜித்தின் துப்பறியும் ஆனந்த்! இழுபறி நிலையில்



அஜித் நடிக்கவிருக்கும் அடுத்த படமான 'துப்பறியும் ஆனந்த் இழுபறியில் இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தயாநிதி அழகிரி தயாரிப்பில், டைரக்டர் கவுதம் மேனன் இயக்கத்தில் உருவாகிருக்கும் புதிய படத்தில் நடிகர் அஜித் நடிக்கவுள்ளார்.

இப்படத்திற்கு துப்பறியும்ஆனந்த் என பெயர் சூட்டிய கவுதம்மேனன், இன்னமும் அடுத்த கட்ட வேலைகளில் இறங்கவில்லையாம்.

போட்டது போட்ட மாதிரியே கிடப்பதற்கு காரணம் என்னவென்று விசாரித்தால், அஜித்தின் அயல்நாட்டு பயணம் என்கிறது விவரமறிந்த வட்டாரத் தகவல். பார்மூலா கார் பந்தயங்களை அயல்நாடுகளில் முடித்துக்கொண்டுஅஜித் திரும்பிவர ஆறு மாதங்கள் ஆகலாம் என்பதால் நாயகி, தொழில்நுட்பக் கலைஞர்கள் உள்ளிட்ட இன்னும் பல விடயங்கள் முடிவாகாமலேயே இழுத்தடித்துக் கொண்டிருக்கிறதாம்.

அதேநேரம் கவுதம் மேனனும் தயாநிதி அழகிரியும் வெவ்வேறு பட வேலைகளில் பிஸியாகி விட்டனர்.

# இலங்கை பயணத்துக்கு 'ரெடி'... அச்சத்தில் அசின் !

சல்மான்கானுடன் நடிக்கும் 'ரெடி' (Ready) படத்தின் படப்பிடிப்புக்காக இலங்கைக்கு புறப்பட வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் நடிகை அசின், தமிழ் சினிமா அமைப்புகளிடம் இருந்து எதிர்ப்பு வருமோ என்ற அச்சத்தில் இருக்கிறார்.

தெலுங்கில் இருந்து இந்தியில் அதே பெயரில் ரீமேக் செய்யப்படும் படம். 'ரெடி'. அனிஸ் பாஸ்மீ இயக்கும் இப்படத்தின் நாயகன் சல்மான் கான்- நாயகி அசின். பாலிவுட்டில் தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கு இந்தப் படத்தையே நம்பியிருக்கிறார் , அசின்.



அண்மையில் ஐபா பட விழாவுக்காக கொழும்பு சென்ற சல்மான்கான, இலங்கை அரசின் விருந்தோம்பலில் திக்குமுக்காடியிருக்கிறார். இதன் பிரதிபலனாகவே, மொரீஷியஸில் நடைபெறவிருந்த 'ரெடி' படப்பிடிப்பை இலங்கைக்கு மாற்றியிருக்கிறார் சல்மான்.

ஏற்கனவே ஐபாவில் பங்கேற்ற பாலிவுட் நட்சத்திரங்களின் படங்களுக்கு தமிழ்த் திரைப்பட அமைப்புக்கள் தடை விதித்துள்ளன.

இந்தச் சூழலில் சல்மானுடன் இம்மாதம் 20 ஆம் திகதி இலங்கை செல்ல வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் அசின், இதைக் காரணம் காட்டி ,தனக்கும் தடை விதிக்கப்படுமோ என்ற அச்சத்தில் இருக்கிறார்.

பாலிவுட்டில் மார்க்கெட் இல்லாத நிலையில் மீண்டும் தமிழில் ஆதிக்கம் செலுத்த முனைந்துள்ள அசின், விஜய் ஜோடியாக காவல்காரனில் நடித்து வருகிறார். இப்போது இலங்கைக்கு ரெடிக்காக செல்ல வேண்டியிருப்பதால் தமிழில் பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கோலிவுட்டின் நெருக்கமானவர்களுடன் ஆலோசனை கேட்டு வருகிறாராம் அசின்.

# சிம்புவின் பார்வை இப்போ தமன்னா பக்கம் !

நயன்தாராவுடன் காதல் முறிவுக்குப் பின்னர் சற்றுச் சோர்ந்து இருந்த சிம்பு, அடுத்தடுத்து படங்களை ஆர்வமாகத் தொடங்கினாலும், ஏதோ சில காரணங்களால் தொய்வு ஏற்பட்டு வந்தது. இந்நிலையில்தான் கவுதம் வாசுதேவ் மேனன் இயக்கத்தில் சிம்பு நடித்த விண்ணைத்தாண்டி வருவாயா படம் எதிர்பர்த்ததை விட பலமடங்கு வெற்றி பெற்றது.

தனது அலட்டல் இல்லாத அசத்தலான நடிப்பால் ரசிகர்களை மட்டுமல்லாமல், திரையுலகை சேர்ந்த பலரையும் கவர்ந்திருக்கிறார் சிம்பு. இதனால் சிலபல இயக்குநர்கள் சிம்புவிடம் கதை சொல்ல காத்துக்கிடக்கும் சூழ்நிலையும் உருவாகிவிட்டது.

இதற்கிடையில் டைரக்டர் லிங்குசாமி இயக்க்வுள்ள புதிய படத்தில் சிம்பு நடிக்கவுள்ளார். பையா படம் எதிர்பார்த்த அளவுக்கு ஓடி வெற்றியடைந்துள்ளதால், லிங்குசாமியின் அடுத்த படைப்பும் பிரமாண்டமானதாக இருக்கும் என்று பேசிக்



கொள்கிறார்கள். படத்தில் சிம்பு தவிர இன்னொரு நாயகனாக தெலுங்கு நடிகர் மகேஷ் பாபு நடிக் கவுள்ளார்.

தமிழ், தெலுங்கு என ஒரே நேரத்தில் வெளியாகவிருக்கும் இந்தப் படத்தில் தனக்கு ஜோடியாக தமன்னாவை சிபாரிசு செய்திருக்கிறாராம் சிம்பு.

காற்றுள்ளபோதே தூற்றிக் கொள் என்ற கொள்கையுடைய தமன்னா, கேட்ட தொகை கொடுத்தால் சிம்புவுடன் ஜோடிசேரமறுப்பாரா என்ன?

# திருநெல்வேலியில் எச்.என்.பி வங்கிக் கிளை

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் 188 ஆவது வாடிக்கையாளர் சேவை நிலையம் நாளை திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் திறந்து வைக்கப்படுகின்றது.

இவ்வாடிக்கையாளர் சேவை நிலையத்தின் மூலம் திருநெல்வேலி அயல் நகர வாடிக்கையாளர்கள் சிறந்த வங்கிச் சேவையை பெற்றுக் கொள்ள முடியும் என ஹற்றன் நஷனல் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் தெரிவித்தார். (5)


## உடனடி வேலை வாய்ப்பு






இலங்கையில் மிகப் பெரிய
நிறுவனங்களில் ஒன்றான ஜோன்கீல்ஸ்
ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின்
முழுமையான பக்க பலத்துடன் இயங்கும்,
இலங்கையின் முன்னணி காப்புறுதி
நிறுவனங்களில் ஒன்றான,

**யூனியன் அஷ்யூரன்ஸ் PLC**

அதன் யாழ்.பிரதான கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு,
தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கப்படவுள்ளது.

**பதவி வெற்றிடங்கள்**






1) காப்புறுதி ஆலோசகர்
2) தனிப்பட்ட நிதி ஆலோசகர்
3) சிரேஷ்ட தனிப்பட்ட நிதி ஆலோசகர்
4) தனிப்பட்ட நிதி முகாமையாளர்
5) சிரேஷ்ட -தனிப்பட்ட நிதி முகாமையாளர்

**தகைமை :-** ▸க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தி.
▸காப்புறுதி துறையில் அல்லது சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது. (கட்டாயம் அல்ல)

**நன்மைகள் :-** கவர்ச்சிகரமான சம்பளத்துடன், மேலதிக கொடுப்பனவும் வழங்கப்படும்.

**தகைமையுடன் உங்களிடம் எதிர்பார்ப்பது?**

▸உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
▸உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கான ஆர்வம்
▸திடசித்தம்




தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு
சுயவிபரக் கோவையுடன்

**நேர்முகத் தேர்வு :-**
காலம் :- செவ்வாய்க்கிழமை (22.06.2010)
நேரம் :- முற்பகல் 9.30 மணி
இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ் 139 , ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக
நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்.

தொடர்புகளுக்கு: - தொ.பே.இல :- 021 222 3753
077 3689309
077 3769045




பொ.ஞானவேல், ந.பிரகாஷ்
காப்புறுதி அபிவிருத்தி
உத்தியோகத்தர்

union assurance
Trust in your tomorrow, today

(1731)



## வீடுகள் கட்டடங்கள் கட்ட விரும்புபவர்களுக்கு ஒரு வாய்ப்பு

*உங்கள் வீடு கட்டும் பொறுப்பை யாரிடம் ஒப்படைப்பது என்று யோசிக்கின்றீர்களா? எங்களிடம் ஒப்படையுங்கள். சிறந்த முறையில் நிறைவேற்றி தருகிறோம்.*



✓ இலவச வீடமைப்பு ஆலோசனை
✓ இலவச வீட்டுப்படம் (Plan) வரைதல்
✓ வீடு கட்டியபின் வீட்டுத்தோட்டம் (Land Scaping)அமைத்தல் இலவசம்
✓ நவீன தொழில்நுட்ப (Latest Technology) முறைகள் மூலம் குறைந்த செலவில் வீடுகள் அமைக்கமுடியும்.இதனால் எல்லோரும் ஒரு வீட்டிற்கு உரிமையாளர் ஆகலாம்.
✓ 100% நம்பிக்கை நாணயம்
✓ குறுகிய காலத்திற்குள் வீடு அமைக்கப்படும்
✓ சாத்திர முறைப்படி வீடுகள் அமைக்கப்படும்
✓ நவீன வீடுகள் (Modern House in Latest Fashion) அமைத்தல்
✓ பழைய வீடுகள் முன்முகப்பு உட்பட புதிய பசன் (Latest Fashion) இற்கு மாற்றி அமைத்தல்
✓ நிதி நிலைக்கேற்றவாறு சிறிய வீடுகள் அமைத்தல்
✓ நிதிபற்றாக்குறை ஆயின் வங்கிக் கடன் உதவி ஒழுங்கு செய்து தரப்படும்.
✓ இலங்கையின் எப்பகுதியிலும் (நிலம் வாங்குதல் உட்பட) வீடுகள் அமைக்கப்படும்.

குறிப்பு:-பழைய வீடொன்றை வாங்குவதை விட உங்கள் விருப்பப்படி புதிய வீடொன்றை அமைத்து புதிய வீட்டிற்கு உரிமையாளராகுங்கள்.

தொடர்பு கொள்ளுங்கள் எம்மிடம் வாருங்கள்
0786155929 , 0774163146, 021 3205939

**ANANDA HOUSING CONSTRUCTIONS**
email -ananda.housing@yahoo.com

Reg.No TN/UC/0011
பருத்தித்துறை வீதி, மடத்தடிச் சந்தி, சாவகச்சேரி.
(மகாவித்தியாலயம் அருகில்).

(1734)



## இணுவை கந்தனின் மஹோற்சவம்



### நான்காம் திருவிழா

### இணுவைக் கந்தனுக்கு நான் அடிமை

**பல்லவி**

இணுவைக் கந்தனுக்கு நான் அடிமை - என்
இன்பமெல்லாம் அவனின்றி வேறில்லை

**அனுபல்லவி**

வல்ல வினை தீர்த்திடும் வடிவழகன் - அவனை
வாயாரப்பாடி மனமாற நினைத்திடுவேன்

**சரணம் 1**

சொல்லெடுக்க முடியாமல் நான் தவிப்பேன் - அவன்
சொல்லாக வந்து என் நாவுதிப்பான்
கள்ளவிழிக் கந்தனென்று நினைத்திடுவேன் - என்னை
கடைக்கண் பார்வையினால் கவர்ந்திடுவான்

**சரணம் 2**

கோடானகோடி இன்பம் என் முருகன் - அவன்
கோலஎழில் காண இணுவிலுக்கு ஓடிவருவேன்
தினைப்புலம் காத்தவள்ளி கை பிடித்தவன்
நினைத்துவிட்டால் வந்துவிடும் இன்பநிலை

சுதுமலை தயாளன்

### முன்வினையைப் போக்கியருள்

முருகாவென்றுன்னைப் போற்றியே வழிபட்டோர்
முன்வினையைப் போக்கிவைத்த இணுவைக் கந்தனே
மால்மருகா வென்றுன்னையன்பர் பணிகின்றார் இன்றும்தான்
அவர் துயரைத் தீர்க்காத காரணத்தைக் கூறியருள்
அருகாத வினைப்பயனும் உன்னை வழிபட்டாலன்று
அலறுகின்றார் நின்னருளை வேண்டியே தினம் தினமும்
திருவாயுன் அருட்பார்வை உமையவனின் மைந்தாவுனைப்
பணிந்திடுவார் துயர்களைவாய் இணுபதி வேலோனே!

சங்குவேலி அஜித்தன்

### எமக்கருள் புரிந்திடுவாய்

ஆறுபடை வீடுதனில்
அமர்ந்திருக்கும் சுந்தரனே
நாடு எங்கும் நகரமெங்கும்
நன்மைகள் விளங்கிடவே
வீறுகொண்டு எழுந்து வந்து
எமக்கருள் புரிந்திடுவாய்

இணுவில் கிழக்கு மயூரன்

(1709)

அனுசரணை :- 4 ஆம் திருவிழா உபயகாரர்


# யுத்தத்தால் அழிவடைந்த குளத்தை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை

ஆனைவிழுந்தான் பகுதியில் போரின் போது அழிந்த குளத்தை புனரமைத்துத் தர வேண்டுமென்று அண்மையில் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பினரிடம் மக்கள் தமது கோரிக்கையை தெரிவித்துள்ளதாக கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் சிவஞானம் சிறிதரன் முதலியோர் அக்கராயன் பிரதேசத்திற்கு சென்று மக்களுடன் கலந்துரையாடியுள்ளார்கள்.

இந்த விஜயத்தின் போது ஸ்கந்தபுரம், அக்கராயன், ஆனைவிழுந்தான் போன்ற கிராமங்களுக்கு சென்று தற்பொழுது மீள்குடியேறி இருக்கும் மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன் அக்கராயன் பாடசாலைக்குச் சென்று பாடசாலை அதிபர் , ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடியுள்ளார்கள்.

ஆனைவிழுந்தான் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட கூட்டமைப்பினரிடம் போரில் அழிக்கப்பட்ட தமது குளத்தை புனரமைத்து தர நடவடிக்கை எடுக்கவேண்டுமென மக்கள் கோரிக்கை ஒன்றை முன்வைத்தனர்.

விவசாயத்தை நம்பி வாழும் அந்த மக்கள் போரின் பின்னர் எந்த ஜீவனோபாய தொழிலும் ஆதாரமும் இன்றி இருப்பதாக கூறும் சிவஞானம் சிறிதரன் குறித்த மக்கள் குளத்தை புனரமைத்து தரவேண்டுமென்று கடுமையாக வலியுறுத்தியதாக தெரிவித்தார். இந்த விடயம் குறித்து உரிய தரப்பிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார். (6)

# தமது வாழ்வைத் திட்டமிடுவதற்கான அனைத்து உரிமைகளும் அகதிகளுக்கு வழங்கப்படவேண்டும்

## இன்று உலக அகதிகள் தினம்

உலகளாவிய ரீதியாக உலக அகதிகள் தினம் யூன் மாதம் 20 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. உலக அகதிகள் தினமாக அறிவிக்கப்பட்டதற்கேற்ப உலகளாவிய ரீதியில் அகதிகள் உள்ள நாடுகளிலும் அகதிகள் சார்பாக செயற்படுகின்ற நாடுகளிலும் அன்றைய தினம் அனுஸ்டிக்கப்பட்டு வருகிறது. 2000ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் 2001 ஆம் ஆண்டிலிருந்து இந்நாள் முக்கிய நாளாக கருதப்படுகிறது.

2000ஆம் ஆண்டிற்கு முன்னரே ஆபிரிக்காவில் அகதிகள் தினம் பல நாடுகளில் கடைப் பிடிக்கப்பட்டது. ஆனால் உலக அகதிகள் தினமாக இது கொண்டாடப்படுவது 2001 ஆம் ஆண்டிலிருந்து என்பதை யாவரும் அறிவர்.

உலகில் 42 மில்லியன் மக்கள் அகதிகளாக வாழ்கின்றனர். அவர்களுக்கு அத்தியாவசியமான வாழ்வாதார அடிப்படை வசதிகள் போதுமான அளவு கிடைப்பதில்லை. நல்ல தண்ணீர், உணவு , சுகாதார வசதிகள் , இருப்பிட வசதிகள் , வைத்திய வசதிகள் போன்றவை இவற்றுள் அடங்கும். இவர்களை முன்னேற்றுவதற்கு எந்த அரசும் முன்வரவில்லை.

நாடுகளில் ஏற்படும் இக் குழப்பங்கள் அரசியல் கிளர்ச்சிகள், அரசியல் பிரச்சனைகள் போன்றவற்றால் தாம் பிறந்த நாட்டிலிருந்தே புலம்பெயர வேண்டிய சூழ்நிலையால் அகதிகளாக்கப்பட்ட மக்கள் இன்னும் வெளிநாடுகளில் வாழ்கின்றனர். இவ்வாறு அகதிகளாக்கப்பட்டதற்கு யார் காரணம்? இவ்வாறு அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு மனிதாபிமான முறையில் உலகில் இவர்களும் வாழப் பிறந்தவர்களே என்ற தயாள சிந்தையுடன் அவர்களைப் பற்றி எல்லா மட்டத்தினரும் சிந்திக்க வேண்டும் என்பதை ஞாபகமூட்டுவதாகவே யூன் 20 ஆம் திகதி அகதிகள் உலக தினமாக கொண்டாடப்படுகிறது. அவர்களுக்கான தேவை உண்மையானதே என்பதை எல்லோரும் சிந்திக்க வேண்டும்.

இலங்கையின் இனக் கலவரங்களின் போதும் அரசியல் கிளர்ச்சிகளின் போதும் உள்நாட்டு யுத்தத்தின் போதும் மக்கள் தாம் நீண்ட காலம் வாழ்ந்த பிரதேசங்களை விட்டு இடம் பெயர்ந்து வெளிநாடுகளில் அகதிகளாக போய்ச் சேர்ந்தவர்களும் உண்டு. உள்நாட்டிலேயே வேறு பிரதேசங்களில், முகாம்களில் நண்பர்களின் வீடுகளிலும் உறவினர்களின் வீடுகளிலும் அகதிகள் என்ற அந்தஸ்தோடு பலர் வாழ்ந்து வருகின்றனர்.

அவர்களின் அடிப்படைத் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்தால் போதும் என்றும் சிந்திப்பது தவறானது. அவர்களின் குடும்பத்திற்கும் அவர்களின் எதிர்கால வாரிசுகளுக்கும் தம் வாழ்வை திட்டமிடுவதற்கான சகல உரிமைகளும் உண்டு.

அவர்கள் அகதிகளே என்பதால் எல் லோருக்கும் வழங்கப்பட்ட உரிமை மறுக்கப்படுதல் என்பது என்றும் எக் காலத்திலும் நியாயமாகாது. யாழ்ப்பாணத்தில் 1990ஆம் ஆண்டில் இடம் பெயர்ந்தவர்கள் இன்றும் தம் சொந்த வீட்டிற்கு செல்ல முடியாமல் அகதி முகாம்களிலும் நிரந்தரமற்ற குடியிருப்புக்களிலும் முடங்கி வாழ்வதை நாம் காண்கிறோம். உள்ளூரிலேயே பல தடவைகள் இவர்கள் அகதிகளாக்கப்படுகின்றனர்.

உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களை நாடு விட்டு நாடு புலம்பெயரும் அகதிகளுக்கு ஒத்தவர்களாக கருத வேண்டாம்.

அவர் தம் சொந்த நாட்டிலேயே வாழ்கின்றனர் என்ற வாதங்களும் நடைபெறுவதுண்டு. எவ்வாறாயினும் அவர்கள் சொந்த நிலத்தில் வாழ முடியாமலும் தனது இருப்பிட சூழலையே வாழ்வாதாரமாக பெற முடியாது போய் விட்டதையும் தனது பிறப்பிடத்தையே தனக்குரியது என்ற நம்பிக்கையையும் இழந்து போய் எதுவுமற்ற ஏதிலிகளாக்கப்பட்டவர்களை உள்ளூர் அகதிகள் என்று குறிப்பிடுவது பொருத்தமானதே. இந்த வகையில் உள்ளூரில் இடம் பெயர்ந்தோரும் உலக அகதிகளை இன்று நினைவு கூருதல் பொருத்தமானதே.

அகதிகளே தம்மை தாம் பார்த்து எல்லா வாழ்வுரிமையையும் இழந்து அகதிகளாக வாழ்கிறோம். அதனால் இந்த நாளை ஞாபகப்படுத்துவோம் என்று நினைப்பதை விட

**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்**

வாழ்க்கையில் மேல் இடத்தில் உள்ளோர் இந்த அகதிகளுக்காக ஒரு நாள் அல்ல வருடம் முழுவதும் நாம் மனமுவந்து வந்து செயலாற்ற வேண்டுமென்று திட சங்கற்பம் பூணுவதே இந்த அகதிகள் தினத்தின் நோக்கமாகுமென கருதப்படுகிறது.


மல்டிமீடியா ஸ்கொலர்ஷிப்
MULTIMEDIA SCHOLARSHIP
CSC Softview Visual Communication
ISO 9001 : 2000 CERTIFIED TRAINING CENTRE
Join the India's No.1 Animation Academy


WIN 60 % SCHOLARSHIP
- Digital Pre-Press
- Video Editing
- Web Animation
- Audio & Film Editing
- Graphic Design
- 2D & 3D Animation
- Visual Effects
- Cartoon Animation
- CBT Technology
- Mastering Multimedia

மல்டிமீடியா புலமைப்பரிசில்
- பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
- மும்மொழிகளிலும் பரீட்சை
- அடிப்படைத் தகைமை G.C.E. (O/L)
- வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
- கலை, இலக்கியம், திரைப்படத்துறை பற்றிய வினாக்கள்
- 60% வரையான ஸ்கொலர்ஷிப் (கட்டணக்கழிவு)
- இலவச பாடநூல்கள் (இந்தியா)
- தவணைமுறை கட்டண வசதி
- சர்வதேச அங்கீகாரம் பெற்ற இந்திய சான்றிதழ்கள்

பரீட்சை June 26th & 27th சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமை

ASIAN COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-3734088
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி (பிரதேச செயலகத்திற்கு முன்பாக) T.P : 021-3213390
(1729)



உங்களை உணருங்கள் 'ஜெய் குருதேவ்' அன்பில் மலருங்கள்

ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் அவர்களின்
THE ART OF LIVING
வாழும் கலை பயிற்சி
உலகில் 182 நாடுகளுக்கு மேல் வெற்றிகரமாக பயிற்றப்படும் வாழும் கலைப் பயிற்சி மீண்டும் நமது இடத்தில் ஆரம்பமாகிறது.
சுதர்சனக்கிரியா, மூச்சுப்பயிற்சி, தியானம், எளிய யோகா
ஆகியவை உள்ளடக்கிய அற்புதமான பயிற்சி
- ஞாபகசக்தி அதிகரிக்க
- நிகழ்காலத்தில் வாழ
- மனதை ஒரு நிலைப்படுத்த
- வேலைகளில் முழுக்கவனம் செலுத்த
- ஆஸ்மா, இரத்தக் கொதிப்பு, நீரிழிவு நோய்களில் இருந்து விடுபட

இதில் கலந்து கொண்டு பயன்பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
அறிமுக உரை
இடம்:கம்பன் கோட்டம் -நல்லூர்
காலம்: 21.06.2010 (திங்கட்கிழமை)
நேரம்: மாலை 5.00 மணிக்கு
பயிற்சி நாட்கள்: 22.06.2010 (செவ்வாய்க்கிழமை) முதல் 27.06.2010 (ஞாயிற்றுக்கிழமை) வரை
மேலதிக விபரங்களுக்கு :
வாழும் கலை அற நிறுவனம்–யாழ். மையம்.
T.P.: 0777740593, 077 0474757
(க/478)


# சிரஞ்சீவி மாஸ்ரர் கைது...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி..)

இன்னும் சில பொலிஸார், இலங்கையில் போர் தொடங்கிய போது புலிகள் பலரும் தமிழகத்திற்குள் ஊடுருவினார்கள். சென்னை மடிப்பாக்கம் அருகே ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்து பரமேஸ்வரன் என்பவரும் போராளிகளும் தங்கியிருந்தது தெரிந்து அவர்களை வளைத்தோம். அப்போது சிரஞ்சிவி மாஸ்டர் குறித்து பரமேஸ்வரன் சொன்ன தகவல்கள் படுபயங்கரமானவை. அப்போதே,

சிரஞ்சீவி குறித்துத் தீவிர விசாரணையைத் தொடங்கி விட்டது எங்கள் துறை. போர்க் காலத்தில் அவர் ஈழத்தில் இருந்தார் என்ற தகவல் உறுதியானதாகத் தெரிகிறது. தற்பொது சிக்கி இருக்கும் அவரிடம் பொட்டு அம்மான் குறித்து எங்கள் துறை அதிகாரிகள் கேட்ட கேள்விகளுக்கு இலேசான புன்னகையை மட்டுமே சிரஞ்சீவி மாஸ்டர் பதிலாக்கியதாகவும் தெரிகிறது. ஈழத்தின் கடைசிக் கட்டப் போர்க் கொடூரங்களை மட்டும் மனம் விட்டுச் சொன்னவர் புலித்தலைவர்களின் நிலை குறித்த கேள்விக்கு எந்த பதிலையும் சொல்லவில்லை! என்கிறார்கள்.

தமிழக உளவுத்துறை ஐ.ஜி-யான ஜாஃபர் சேட்டிடம் சிரஞ்சீவி கைது குறித்துக் கேட்டோம். "விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவில் சிரஞ்சீவி மிக முக்கியமான ஆள். தீவிரமாக தேடப்பட்ட இவர் இலங்கைப் போருக்குப் பிறகு சந்திரகுமார் என்ற பெயரில் தமிழகத்துக்கு வந்திருந்தார். 2007 ஆம் ஆண்டு வெடி மருந்து கடத்தல் விவகாரத்தில் சிவா என்கிற சிவகரனுடன் சிரஞ்சீவி சம்பந்தப்பட்டிருப்பதாக வழக்கு இருக்கிறது. மற்றப்படி இலங்கைப் போருக்குப் பிறகு தமிழகம் வந்த சிரஞ்சீவி தவறான நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை.

அவர் மீது புதிதாக வழக்குகள் ஏதும்இல்லை. மற்றப்படி மேற்கொண்டும் விசாரித்து வருகிறோம்!" என்றவரிடம்,

விழுப்புரம் தண்டவாளத் தகர்ப்பில் சிரஞ்சீவியைச் சிக்க வைக்க முயற்சிகள் நடப்பதாகச் சொல்லப்படுகிறதே? எனக் கேட்டோம். கிடையவே கிடையாது. விழுப்புரம் தண்டவாளத் தகர்ப்பு விவகாரத்தில் சிரஞ்சீவிக்கு எவ்வித சம்பந்தமும் கிடையாது. தண்டவாளத் தகர்ப்பு வழக்கில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைப் பிடிக்கத் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறோம்.! என்றார்.

கை மற்றும் கால்களில் காயங்களோடு பொலிஸ் விசாரணையில் இருக்கும் சிரஞ்சீவி புலிகள் குறித்தும்... குறிப்பாக பொட்டு அம்மான் குறித்தும் என்ன சொல்லப் போகிறார் என்பது மில்லியன் டொலர் பெறுமதியான கேள்வி!

பிரபாகரன் இருக்கிறாரா? என்ற உலகளாவிய கேள்விக்கும் அவரிடம்... உறுதியான பதில் இருக்கலாம்.

### பாவம் பார்வதி அம்மாள்!

பார்வதி அம்மாளின் உடல்நலம் மோசமாகிறது. கடந்த ஒரு வாரமாக அவரால் உணவு சாப்பிட முடியவில்லை என்று அவசர தகவல் வரவும்...அந்த நேரத்தில், கண் அறுவை சிகிச்சைக்காக கண்டி சென்றிருந்த டாக்டர் மயிலேறும் பெருமாள், அடித்துப் பிடித்து வல்வெட்டித்துறை மருத்துவமனைக்குப் போய்ச் சேர்ந்தார். பார்வதி அம்மாளைப் பரிசோதித்த போது, அவருக்கு இரண்டு சிறுநீரகங்களும் வீங்கியிருந்ததுடன் , வயிற்றில் புண்களும் உண்டாகியிருப்பது தெரிந்ததாம். மேலும் பரிசோதனைகள் மற்றும் சிகிச்சைக்காக யாழ்ப்பாண போதனாவைத்தியசாலைக்கு பிரபாகரனின் தாயாரை அனுப்பியுள்ளனர்.

இரா.தமிழ்க்கனல்

ஒரு நாட்டில்-அந்நியர் புகுவதைப் போன்ற தீமை வேறெதுவும் இல்லை.
~ ருமேனியா

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## சீனாவின் ஊடுருவலைத் தடுக்க இந்தியா ஆவேசம் கொள்ளுமா?

சீனாவில் சிறைக் கைதிகளான இருபத்தையாயிரம் சீனர்கள் இலங்கையின் வடபுலத்தில் நடைபெற்று வரும் புகையிரதப் பாதை அமைப்பு வேலையில் ஈடுபட்டுள்ளதாக, தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் அ.தி.மு.கவின் பொதுச் செயலாளருமான செல்வி ஜெயலலிதா எச்சரிக்கை செய்துள்ளார்.

சிறைக் கைதிகளான இருபத்தையாயிரம் சீனர்கள் வட புலத்தில் பணியாற்றுவது ஈழத் தமிழர்களுக்குப் பேராபத்தாக அமையும் என்றும் அவர் தனது எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

செல்வி ஜெயலலிதா விடுத்த இந்த எச்சரிக்கையைத் தமிழ் நாட்டின் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதி திரும்பிப் பார்க்கா விட்டாலும், இந்திய மத்திய அரசு நிச்சயம் அதனைத்திரும்பிப் பார்த்தேயாக வேண்டும்.

ஏனெனில், இலங்கையில் தொழில் புரியும் இருபத்தையாயிரம் சீனர்களும் இந்தியாவுக்கு எதிராக-ஒற்றர்களாகச் செயற்படுகின்றனர் என செல்வி ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார்.

எனவே இந்திய மத்திய அரசு இலங்கை விவகாரத்தில் தலையிட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. விடுதலைப்புலிகளை ஒழித்துக் கட்ட வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக இருந்தது.

இந்தியாவின் இந்த நிலைப்பாடே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் வெற்றிக்குப் பேருதவியாயிற்று. விடுதலைப்புலிகளை இல்லாதொழிப்பதன் மூலம் தனது பழியைத் தீர்த்துக் கொள்வதுடன் இலங்கை அரசைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியும் என்றும் இந்தியா நினைத்திருந்தது.

ஆனால், இலங்கை அரசு இந்தியாவின் இந்த நிலைப்பாட்டிற்கு அகப்படாமலும், விடுதலைப்புலிகளைப் போரில் வெற்றி காண்பதற்கு இந்திய ஆதரவைப் பெறுவதிலும் இரு வகை யுத்தியைக் கையாண்டது.

இந்த இரு வகை யுத்தியிலும் இலங்கை அரசு வெற்றி கொண்டது. விடுதலைப்புலிகளுக்கு எதிரானபோரின் போது இந்திய மத்திய அரசின் முழு அளவிலான ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்ட இலங்கை அரசு,

சம நேரத்தில் சீனாவிடமும் ஆயுத உதவியைப் பெற்றுக் கொண்டது.

இந்தியாவின் ஆயுத உதவி போதுமானதாக இருந்தாலும், விடுதலைப்புலிகளை வெற்றிகொள்வதில் இந்தியாவுக்கு முழுப் பங்கும் கிடைத்து விடக் கூடாது என்பதற்காக, சீனாவின் உதவியையும் இலங்கை அரசு பெற்றிருந்தது.

ஆக, இப்போது புலிகளை முழுமையாக வெற்றி கொள்வதில் சீனாவின் பங்கும் உண்டு என்பதை முன்னிறுத்தி இந்திய மத்திய அரசு எங்களுக்கு அழுத்தம் தர முடியாதென்பதை இலங்கை அரசு நிரூபித்து விட்டது.

சிறிய நாடான இலங்கையிடம் தோற்றுப் போனோம் என்ற வேதனை இந்திய மத்திய அரசை வாட்டுவதாக இருந்தாலும்,

செல்வி ஜெயலலிதாவின் அறிக்கையின் ஊடாக இலங்கை மீது அழுத்தம் கொடுக்கும் வாய்ப்பு இந்தியாவுக்குக் கிடைத்துள்ளது.

எனவே சீனாவின் தலையீட்டைத் தவிர்ப்பதற்காகவேனும் இலங்கைக்குள் இந்தியா நுழைய வேண்டிய தேவையுள்ளது.

அந்த நுழைவு எப்போது என்பதை காலம் தான் தீர்மானிக்க முடியும்.

# இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வளிக்க ஜெயலலிதா முன்வைத்துள்ள 18திட்டங்கள்



(சென்னை)

இலங்கை வடபகுதி முகாம்களில் இருக்கும் ஒரு இலட்சம் பேருக்கு மறுவாழ்வு அளிக்கப்படவேண்டும். மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் ஆகியவை உள்ளிட்ட 18 திட்டங்களை நிறை வேற்றிய பின்னர் தமிழகத்தில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் அழைத்துப் பேசி மாநாடு நடத்தப்படவேண்டும் என தமிழ் உலகமே எதிர்பார்க்கின்றது என்று ஜெயலலிதா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் போர் முடிந்து ஓராண்டுக்கு மேலாகியும் அங்குள்ள இலட்சக்கணக்கான தமிழர்கள் எந்தவித வசதியும் இல்லாமல் அகதிகளாக, அனாதைகளாக, அடிமைகளாக முகாம்களில் கட்டாயமாக அடைக்கப்பட்டு அவல நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

சென்ற ஆண்டு இலங்கையில் போர் முடிந்தவுடன் கனிமொழி உட்பட தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்குச் சென்று இலங்கை அதிபரை சந்தித்து இலங்கைத் தமிழர்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்து விட்டு வந்தனர்.

இலங்கை அதிபரும் 2009 ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கைத் தமிழர்கள் முன்பு வாழ்ந்த இடங்களுக்கு அனுப்பப்படுவர், அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படும் என்று அவர்களிடம் உறுதி அளித்தார். ஆனால் இன்னமும் அதே நிலைமைதான் அங்கு நீடிக்கிறது.

அண்மையில் இலங்கை அதிபர் பாரதப் பிரதமரை சந்திக்க இந்தியாவிற்கு வருகை தந்தார். இலங்கை அதிபர் வருகிறார் என்ற உடனேயே இலங்கை முகாம்களில் அடைக்கப்பட்டுள்ள 80 ஆயிரம் இலங்கைத் தமிழர்களை அவர்களது சொந்த இடங்களில் திருப்பி அனுப்ப இலங்கை அதிபரை மத்திய அரசு வலியுறுத்த வேண்டும் என பாரதப் பிரதமருக்கு வழக்கம் போல கருணாநிதி கடிதம் ஒன்றை வரைந்துள்ளார்.

உடனே பாரதப் பிரதமரும் இந்த ஆண்டு இறுதிக்குள் 47 ஆயிரம் தமிழர்கள் குடியமர்த்தப்படுவார்கள் என்று இலங்கை அதிபர் தன்னிடம் உறுதி அளித்ததாக கருணாநிதிக்கு கடிதம் எழுதியுள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்தன.

உண்மை நிலையோ மாறாக உள்ளது. வட இலங்கையில் தமிழர்களின் அடையாளங்களை அழிக்கும் நடவடிக்கையில் அந்நாட்டு இராணுவம் ஈடுபட்டு வருவதாகவும் தமிழர்களின் பண்பாடு, சமயம் ஆகியவற்றின் மீது தாக்குதல் நடத்தப்படுவதாகவும் தமிழ்ப்பெயரில் இருந்த வீதிகளுக்கு சிங்களப் பெயர்கள் சூட்டப்படுவதாகவும் தமிழ் ஊர்களுக்கு சிங்கள பெயர்கள் இடப்படுவதாகவும் இதன் மூலம் அங்குள்ள நிலங்கள் எல்லாம் சிங்கள நிலங்கள் என்று திரித்துக்கூற முயற்சி நடப்பதாகவும் போரின்போது சிதைந்து போன தமிழர்களின் கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் ஆகியவற்றை கட்டித் தர நடவடிக்கை எடுக்காமல் புத்த விகாரைகள் புதிது புதிதாக கட்டப்படுவதாகவும் தகவல்கள் வருகின்றன.

மொத்தத்தில் தமிழ்ப் பகுதிகள் சிங்கள மயமாக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இலங்கைத் தமிழர்களை அவர்களின் சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்புவது என்பது எப்படி சாத்தியமாகும் என்று புரியவில்லை. ஆயிரம் கோடி ரூபா மதிப்பில் 50 ஆயிரம் வீடுகள் கட்டித்தர இருப்பதாக மத்திய அரசு அறிவித்திருக்கிறது. ஏற்கனவே மத்திய அரசின் சார்பில் 500 கோடி ரூபா நிதி அளிக்கப்பட்டதே? அந்த நிதி இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்விற்காக எந்த அளவிற்கு உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை மத்திய அரசு கேட்டறிந்ததா? 2009ஆம் ஆண்டு தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இலங்கைக்குச் சென்று தமிழர்களின் மறுவாழ்வு குறித்து கேட்டபோது அந்த ஆண்டு இறுதியில் நிறைவேற்றப்படும் என்று உறுதி அளித்தார் இலங்கை அதிபர். தற்போது பாரதப் பிரதமரிடம் இந்த ஆண்டு இறுதிக்குள் 47ஆயிரம் தமிழர்கள் குடியமர்த்தப்படுவதாக உறுதியளித்திருக்கிறார்.

இந்த உறுதிமொழிகள் எல்லாம் வாயளவில் தான் இருக்கிறதே தவிர செயற்பாட்டில் இருப்பதாகத் தெரியவில்லை. இலங்கை வட பகுதி முகாம்களில் இன்னும் ஒரு இலட்சம் பேர் ஆதரவற்றவர்களாய் உள்ளனர். அவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்படவேண்டும். மீள் குடியேற்றப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

அழிக்கப்பட்ட விவசாய நிலங்கள் சீரமைக்கப்பட வேண்டும். அழிக்கப்பட்ட நீர் ஆதாரங்கள் சரி செய்யப்படவேண்டும். மக்களுக்கு கல்வி வசதிகள் செய்து கொடுக்கப்படவேண்டும். கல்வி நிறுவனங்கள் அமைக்கப்படவேண்டும். புதிய பாடசாலைகள் கட்டப்படவேண்டும். பழைய பாடசாலைகள் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும். போரினால் கணவனை இழந்த விதவைகளுக்கு மறுவாழ்வு அளிக்கப்படவேண்டும் என்றும் போரினால் கற்பழிக்கப்பட்ட சிறுமிகளுக்கும் பெண்களுக்கும் ஆற்றுப்படுத்தல் செய்ய வேண்டும் எனவும் கோயில்கள், தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் புனர்நிர்மாணம் செய்யப்படவேண்டும் என்பதுடன் கோயில்கள், தேவாலயங்கள் புத்த ஆலயங்களாக உருவாகுவதை நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

போரில் ஊனமுற்றவர்களுக்கு சிகிச்சையும் மறுவாழ்வும் அளிக்கப்படவேண்டும் என்றும் ஆண்கள் குறைந்துவிட்டதால் பெண்களுக்கு ஏற்பட்டுள்ள மன ரீதியான அழுத்தம் நீங்க வேண்டும். பெண்களே நடத்தும் தொழில்கூடங்கள் உருவாக்கப்படவேண்டும். கிடைக்கின்ற அனைத்து நிவாரண உதவிகளும் தமிழ் மக்களுக்கு சரியான முறையில் சென்றடைய வேண்டும். தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் பணியாற்ற அனுமதிக்கப்படவேண்டும்.

பத்திரிகையாளர்கள் தமிழர்களைச் சந்திக்க அனுமதிக்கப்படவேண்டும். இவற்றையெல்லாம் நிறைவேற்றிய பின்னர் தமிழகத்தில் உள்ள அனைத்துக்கட்சிகளையும் அழைத்துப் பேசி மாநாடு நடத் தப்படவேண்டும் என தமிழ் உலகமே எதிர்பார்க்கிறது என்று ஜெயலலிதா தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

(6)

# மெசியா +பாடுகள் = சீடன்



உலகில் பிறக்கின்ற ஒவ்வொருவனும் தான் யார் என்பதை அறிய ஆவலாக இருக்கின்றான். அப்படி தன்னை அறிகின்ற பட்சத்தில் தான் உயர்ந்தவன் என்பதாக நினைக்கின்றான். அதே வேளையில் தான் யார் என்பதை அறியாமல் வாழ்கின்றவன் பல துன்பங்களில் சிக்குண்டு அடைபட்ட கூண்டுக்கிளியாக சிறகடித்துக் கொண்டிருக்கிறான்.

எனவே தான் தன்னை அறிந்தவன் ஞானி; தன்னை அறியாதவன் மூடன், சாக்ரடீஸ் அழகாகச் சொன்னார். மனிதா உன்னையே நீ அறிந்துகொள் பாடல் ஒன்று அழகாக சொல்லுகின்றது.

உன்னை அறிந்தால் – நீ
உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்

ஆம், தாயை அறிந்தவன்; கலையை அறிந்தவன் கலைஞன். அதுபோல கிறிஸ்துவை அறிந்தவன் கிறிஸ்தவன்.

## பரமபிதா காட்டிய பாதை

இன்றைய நற்செய்தியின் முதல் பகுதி இதைத்தான் சொல்கின்றது. இயேசுவும் தான் அன்பு செய்த திருத்தூதர்களிடம் தான் யார் என்பதை அறிய, மக்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கின்றார்கள்? என்று கேட்டார். பலர் பலவிதமாகப் பதில் சொன்னாலும் பேதுரு, *நீர் கடவுளின் மெசியா* என்று கூறினார். இயேசுவுக்கு அப்போதுதான் மனமகிழ்ச்சியாக இருந்தது.

ஆம், பாடுகளின்றி மெசியா இல்லை; மெசியா இன்றி பாடுகளும் இல்லை. இதைத்தான் இன்றைய நற்செய்தியின் இரண்டாவது பகுதி எடுத்துச் சொல்கின்றது.


ஞானியைப் பின்பற்றுகிறவன் தவத்தை மேற்கொள்ள வேண்டும். ஆசானைப் பின்பற்றுகிறவன் புத்தகத்தைச் சுமக்க வேண்டும்; சிற்பியைப் பின்பற்றுகிறவன் உளியைச் சுமக்க வேண்டும்; ஓவியனைப் பின் பற்றுகிறவன் தூரிகையைச் சுமக்க வேண்டும். அதுபோல கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் சிலுவையைச் சுமக்க வேண்டும். இதுதான் இன்றைய நற்செய்தியின் இரண்டாவது பகுதி வலியுறுத்துகின்றது.

மெசியாவும் சிலுவையும் ஒன்றே. சிலுவையைப் பிரித்து மெசியாவைக் காண முடியாது; மெசியா இல்லையேல் சிலுவைக்கு பொருளில்லை. அதுபோல கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவன் மெசியாவையும் சிலுவையையும் ஒன்றாகக் கருதி பின்பற்றவேண்டும். அப்படிப் பின்பற்றும்போது இறுதியில் வெற்றி, மகிழ்ச்சி, மகிமை. மெசியாவைக் கண்டவனுக்கு துன்பம் இல்லை.

ஆம், இயேசுவின் வழியில் தன் சிலுவையைச் சுமக்கின்றவர்களுக்கு துன்பம் இல்லை; இயேசுவைப் பின்பற்றுகிறவனுக்கு சிலுவைதான் இன்பம் ; சிலுவைதான் மகிமை. இயேசு இன்றி சிலுவை இல்லை ; சிலுவையின்றி சீடன் இல்லை.

ஜோன் ரேபேர்ட்

# சென்னையில் உண்ணாவிரதமிருந்த வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டனர்



உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்க வலியுறுத்தி சென்னையில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட 7 வழக்கறிஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் ஜுலை 2 ஆம் திகதி வரை நீதி மன்ற காவலில் சிறையில் அடைக்கப்பட்டுள் ளனர்.

சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாக்கக் கோரி மதுரை உயர் நீதிமன்ற கிளையில் வழக்கறிஞர்கள் சிலர் கடந்த 9 ஆம் திகதி முதல் தொடர் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தலைமை நீதிபதியின் அறிவுரையின் பேரில் உண்ணாவிரதம் இருப்பவர்களுடன் மூத்த நீதிபதிகள் ஆலோசனை நடத்தி அறிவுரை கூறிய பின்னரும் அதைப் பொருட்படுத்தா மல் தொடர்ந்து உண்ணாவிரதப் போராட்டத் தைத் தொடர்ந்தனர்.

இந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை சென்னையிலும் சில வழக்கறிஞர்கள் அதே கோரிக்கையை வலியுறுத்தி·போராட்டத்தை ஆரம்பித்தனர். உடனடியாக உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி தலைமையில் நிர்வாகக் குழு கூட்டம் கூட்டப்பட்டது. இதில் பல்வேறு வழக்கறிஞர்கள் சங்கங்களின் தலைவர்கள் பங்கேற்றனர்.

வழக்கறிஞர்கள் போராட்டம் நடத்துவது முறையற்றது. உடனடியாக அவர்கள் போராட் டத்தைக் கைவிட வேண்டும் என ஒருமனதாக கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. இருந்த போதும் அவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் இறங்கினர்.

இதனால் மதியமே மீண்டும் நிர்வாகக் குழு கூட்டம் கூடியது. இதில் உயர் நீதிமன்ற வளாகத்தில் உண்ணாவிரதம் இருக்கும் வழக்கறிஞர்கள் அப்புறப்படுத்தப்பட வேண்டு மென்றும் இதற்கு பதிவாளர் உரிய நடவ டிக்கை எடுக்க வேண்டும் எனவும் உத்தரவி டப்பட்டது.

நீதிமன்ற உத்தரவுப்படி சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர்கள் சேசுபாலன், காசிநாத பாரதி, ராஜு, பார்த்தசாரதி, எருசலேம், அங்கயர்க் கண்ணி, சக்திராணி ஆகிய 7 பேரை இரவு 10 மணி அளவில் பொலிஸார் கைது செய்து எஸ்பிளனேடு பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.


கைது செய்யப்படுவதற்கு முன்பு தங் களை எந்த அடிப்படையில் கைது செய்கி றீர்கள் என வழக்கறிஞர்கள் அவர்களுடன் வாதம் செய்தனர். உயர் நீதிமன்ற பதிவாளர் அளித்த புகாரைக்காட்டி பொலிஸார் அவர் களை கைது செய்தனர்.

வழக்கறிஞர்கள் மீது சட்ட விரோதமாக கூடுதல், அரசு உத்தரவை மீறுதல், தற்கொலை முயற்சி ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. கைது செய்யப் பட்ட வழக்கறிஞர்கள் சைதாப்பேட்டையில் உள்ள 7 ஆவது பெரு நகர மாஜிஸ்திரேட் சாந்தினியின் வீட்டில் அவர் முன் நிறுத்தப் பட்டனர்.

அவர்களை ஜுலை 2 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் அடைக்க நீதிபதி உத் தரவிட்டார்.இதைத் தொடர்ந்து வழக்கறிஞர் கள் புழல் மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். இதுபோல் மதுரையில் 5 வழக்கறிஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

திருநெல்வேலியில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர்கள் காலையில் கைது செய்யப்பட்டு மாலையில் சொந்த பிணையால் விடுவிக்கப்பட்டனர்.(6)

# "பிருத்வி-2" ஏவுகணை சோதனை வெற்றி



முற்றிலும் உள்நாட்டு தயாரிப்பான பிருத்வி - 2 ஏவுகணை ஒன்று ஒரிசா மாநிலம் சந்திப்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ஏவுதளத்தில் வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

350 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள இலக்கை தாக்கி அழிக்கும் சக்தி கொண்ட இந்த நடுத்தர ரக ஏவுகணையானது 500 கிலோ எடையுள்ள அணு ஆயுதங்களை தாங்கிச்செல்லும் திறன் கொண்டதாகும். தேவைப்பட்டால் அணு ஆயுதங்களின் எடை யை 1000 கிலோ வரை அதிகரித்துக் கொள்ள முடியும்.

இந்த ஏவுகணையை வடிவமைத்து தயாரித்த இந்திய இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழக விஞ்ஞானிகள் மற்றும் உயர் அதிகாரிகள் பரிசோதனை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (6)

# முதல்வர் கருணாநிதியின் வீட்டுக்குமுன் உண்ணாவிரதமிருக்க முயன்ற 100 பேர் கைது

திருக்குவளையில் உள்ள முதல்வர் கரு ணாநிதி வீட்டிற்கு முன்பு உண்ணா விரதம் இருக்க முயன்ற 100 பேரை தமிழக பொலி ஸார் கைது செய்துள்ளனர்.தமிழ் நாடு சிறு பான்மை தனியார் பள்ளி ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்யக் கோரி நேற்று காலை 10 மணிக்கு திருக்குவளையில் உள்ள முதல்வர் கருணாநிதியின் வீட்டு வாசலின் முன்பு உண்ணாவிரதம் இருக்கப்போவதாக சிவகா சியை சேர்ந்த அச்சங்கத்தின் தலைவர் பெஸ்கி அறிவித்திருந்தார்.

இதன்படி உண்ணாவிரதம் இருப்பதற் காக மாநிலம் முழுவதும் இருந்து சிறுபான் மை ஆசிரியர்க்ள் திருக்குவளை அருகே வந் தடைந்தனர். அவ்வூரைச் சுற்றி நாலாபு றமும் நின்ற பொலிஸார் அவர்களை திருக்கு வளைக்குள் விடாமல் தடுத்ததுடன் சுமார் 100 பேரை கைது செய்தனர். (6)

# மராட்டியத்தில் நிலச்சரிவு; 10 பேர் மண்ணில் புதைந்து பலி

(மும்பை)

மராட்டிய மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை கடுமையாக பெய்து வருகிறது. மராட்டியத்தின் கடற்கரையோர மாவட்டமான ரத்னகிரியில் மழை கொட்டியது. தபோலி தெசில் என்ற இடத்தில் ஹார்னி கிராமத்தில் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டதில் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த 10 பேர் மண்ணில் புதைந்து பலியானார்கள். தகவல் கிடைத் ததும் சம்பவ இடத்துக்கு மீட்பு குழுவினர் விரைந்தனர். 4 உடல்கள் மீட்கப்பட்டதுடன் மற்ற உடல்களை மீட்கும் பணி நடந்து வரு கிறது.

தொடர்ந்து மழை பெய்வதால் மீட்பு பணியில் தாமதம் ஏற்பட்டு உள்ளதாகவும் இந்த சம்பவத்தை தொடர்ந்து அருகில் வசிக் கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6)

# காஸாவுக்கு நிவாரணப் பொருட்கள் கொண்டு செல்ல இஸ்ரேல் அனுமதி

பாலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் இயக்கத்தினர் மற்றும் இஸ்ரேல் இடையே கடந்த ஆண்டு முதல் போர் ஆரம்பித்ததால் காஸா பகுதிக்கு பொருட்களை கொண்டு செல்வதற்கு இஸ்ரேல் தடை விதித்தது.

பிற நாடுகளில் இருந்து நிவாரணப் பொருட்களை கொண்டு செல்லும் கப்பல்கள் மீது விமானப்படை தாக்குதல் நடத்தியது. மேலும் சில கப்பல்களை கைப்பற்றி தங்கள் நாட்டு துறைமுகத்துக்கும் கொண்டு சென்றது.

இஸ்ரேலின் இந்த செயல்களுக்கு சர்வ தேச அளவில் கடும் கண்டனம் எழுந்தது. இந்த சூழ்நிலையில் காஸா பகுதியில் உள்ள மக் களுக்கு தேவையான பொருட்களை கொண்டு செல்வதற்கான தடையை இஸ்ரேல் தளர்த்தி உள்ளது. இஸ்ரேல் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான மந்திரிசபை கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டது. எனினும் எந்தெந்த பொருட்க ளுக்கு தடை நீக்கப்பட்டுள்ளது என்பது பற்றிய பட்டியல் வெளியிடப்படவில்லை. (6)

# குவைத் இளவரசர் சுட்டுக்கொலை



(டுபாய்)

குவைத் நாட்டு இளவரசர் ஷேக் பாசல் வயது (52). கடந்த சில நாட்களுக்கு முன்பு டுபாயில் இவர் தனது உறவினருடன் காரில் சென்று கொண்டிருந்தார். அப்போது அவருக்கும் உறவினர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் கடைசியில் பெரிய தகராறு மாறியது. இதனால் ஆத்திரம் அடைந்த உறவினர் ஒருவர் அவரை துப்பாக்கியால் சுட்டார்.

இதனால் உயிருக்கு போராடிய அவரை டுபாயில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர். அங்கு சிகிச்சை பலன் இன்றி அவர் பரிதாபமாக இறந்தார்.

அவரது இறுதிச் சடங்கு நேற்று நடை பெற்றது. இந்த தகவலை குவைத் அரசு தெரிவித்துள்ளது. இதற்கிடையே அவரை சுட்ட உறவினரை பிடித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஏற்கனவே, இவர்களுக்கு இடையே முன்பு அடிக்கடி தகராறு இருந்து வந்துள் ளது. பல முறை துப்பாக்கியால் சுட்டும் இவர் தப்பிவிட்டார். தற்போது துப்பாக்கி குண்டுக்கு பலியாகி விட்டார் என்ற தகவல் விசார ணையில் தெரிய வந்துள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட இளவரசர் ஷேக் பாசல் குவைத்தின் 12 ஆவது அரசரான ஷேக் ஷாப் அல்சலீம் அல்சபாவின் பேரன் ஆவார்.

இளவரசர் ஷேக் பாசலின் கொலைக் கான காரணம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (6)



தென்கொரியாவுக்கு விஜயம் மேற்கொண்ட இந்திய வெளி யுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணாவை , அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் யூ மையோங் ஹுவான் தலைநகர் சியோலில் வர வேற்றார்.

# சுவீடனில் 30 ஆண்டுகளுக்கு பின் அணு உலைகள் அமைக்க அனுமதி

சுவீடன் நாட்டில் புதிதாக அணு உலைகள் மற்றும் அணுமின் நிலையங்கள் அமைக்க தடை இருந்து வருகிறது. கடந்த 30 ஆண்டு காலமாக இந்த தடை நீடிக்கிறது. இந்த சூழ்நிலையில் புதிய அணு உலைகள் அமைக்க அனுமதி அளிக்கும் சட்ட மூலம் மீது சுவீடன் பாராளுமன்றத்தில் விவாதம் நடந் தது. காற்றில் கரியமில வாயுவின் அளவை கட்டுப்படுத்துவதை அடிப்படையாக கொண்டு அந்த விவாதம் அமைந்தது.

இறுதியாக 174 வாக்குகள் பெற்றதன் மூலம் நிறைவேறியது. எதிராக 172 வாக் குகள் கிடைத்தன சட்ட மூலம் வெற்றி பெற் றதால் சுவீடனில் புதிய அணு உலைகள் அமைக்க தடை நீங்கியது. தற்போது செயற் பட்டு வரும் அணுமின் நிலையங்களில் புதிய அணு உலைகளை நிர்மாணிக்கவும் பழைய அணு உலைகளை அகற்றி விட்டு புதியதாக அமைக்கவும் புதிய சட்டம் வழி வகுக்கும். சுவீ டனில் 40 சதவீத மின்சாரத் தேவையை அணு மின் நிலையங்களே பூர்த்தி செய்கின்றன என்று தெரிவிக்கப்படுகிறது. (6)

# ஜேர்மனி அணியை வீழ்த்தி செர்பியா வரலாறு படைத்தது



(போர்ட்எலிசபெத்)

10 வீரர்களுடன் விளையாடிய ஜேர்மனி, செர்பிய அணியிடம் 1–0 என்ற கோல் கணக்கில் படுதோல்வியடைந்தது. குளோசுக்கு சிவப்பு அட்டை கிடைத்ததும் கிடைத்த பெனால்டி வாய்ப்பை கோலாக்க தவறியதும் ஜேர்மனியின் தோல்விக்கு வித்திட்டது.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கால்பந்தாட்டத் தொடரில் போர்ட்எலிசபெத் நகரில் டி பிரிவில் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ஜேர்மனி, செர்பியாவை எதிர் கொண்டது.

முதல் போட்டியில் ஜேர்மனி, அவுஸ்திரேலியாவை 4–0 என்ற கோல் கணக்கில் துவம்சம் செய்திருந்தது. செர்பியா, கானா அணியிடம் 1–0 என்ற கோல்கணக்கில் தோல்வியடைந்திருந்தது.

வலுவான ஜேர்மனி, செர்வியாவை எளிதாக வீழ்த்தும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர் பார்த்தது போலவே ஜேர்மனி வீரர்கள் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்தினர். ஜேர்மனியின் இந்த ஆதிக்கம் 37ஆவது நிமிடத்தில் முடிவுக்கு வந்தது.

பலத்த அதிர்ச்சியுடன் கோலை நோக்கி பந்தை கடத்தி வந்த செர்பிய வீரர் ஸ்ரேன் கோவின் காலை இடறி கீழே விழவைத்தார் குளோஸ். இதையடுத்து அவருக்கு மஞ்சல் அட்டை காட்டினார் நடுவர்.

ஏற்கனவே இதே ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்திலும் குளோஸ் மஞ்சல் அட்டை பெற்றிருந்தார். இரு மஞ்சல் அட்டைகளைப் பெற்ற குளோஸ் களத்தை விட்டு வெளியேற்றப்பட்டார்.

இதனால் ஜேர்மனி வீரர்கள் பலத்த அதிர்ச்சிக்குள்ளானார்கள். இந்த அதிர்ச்சியிலிருந்து ஜேர்மனி மீள்வதற்குள் அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. குளோஸ் வெளியேற்றப்பட்ட அடுத்த நிமிடமே செர்பியா, ஜேர்மனி கோலை நோக்கி படையெடுத்தது.

செர்பிய பின்கள ஆட்டக்காரர் கிராசிக் தனி ஆளாக பந்தை கடத்திவந்து ஸிஜிக்குக்கு பாஸ் செய்தார். ஸிஜிக் அதனை தலையால் முட்டி மிலான் ஜோவோனோவிக்கிடம் கொடுக்க அவர் அதனை கோலாக மாற்றினார். செர்பியா 1–0 என்று முன்னிலை பெற்றது. முதல் பாதி ஆட்டம் ஜேர்மனிக்கு அதிர்ச்சியுடன் முடிபடைந்தது.

பிற்பாதியில் 10 வீரர்களுடன் ஆடிய ஜேர்மனி செர்பிய வீரர்களை சமாளிக்க திணறியது. குளோஸ் இல்லாத நிலையில் புடோஸ்கி, ஸ்வர்ஸ்னெட்ஜிகர் ஆகியோர் முன்னேறிச் சென்று தாக்குதல் ஆட்டத்தை நடத்தினர்.

இதன் பயனாக பிற்பாதியில் 60ஆவது நிமிடத்தில் ஜேர்மனிக்கு ஒரு பெனால்டி கிடைத்தது. செர்பியா வீரர் நிர்மான் விடிக் பெனால்டி ஏரியாவுக்கு வந்தபந்தை கையால் தொட்டதால் ஜேர்மனிக்கு சாதகமாக பொனல்டி வழங்கப்பட்டது.

பெனால்டியை கோலாக்கும் பொறுப்பை புடோஸ்கிக்கு ஏற்றார். செர்பியா கோல்காப்பாளர் ஸ்டோஜ் கோவிக், புடோஸ்கியின் பொனால்டியை அபாரமாக தடுத்துவிட ஜேர்மனி நொந்துபோனது.

இந்த உலகக் கோப்பையில் தடுக்கப்பட்ட முதல் பொனர்டி இது. தொடர்ந்து இரு அணி வீரர்களுக்கும் பல வாய்ப்புக்ள் கிடைத்தன. ஆனால் கோலாக வில்லை.

இறுதியில் செர்பியா 1–0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. வெற்றி பெற்ற செர்பியா 3 புள்ளிகளுடன் டி பிரிவில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

1986ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகக் கோப்பையில் செர்பியா ஜேர்மனி அணியை வீழ்த்தியுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. செர்பியா வெற்றிபெற்றதையடுத்து ஜேர்மனி பயிற்சியாளர் ஜக்ஹீம் லோவ் மீது மைதானத்தில் போத்தல் வீசி தாக்குதல் நடத்தப்பட்டது. தாக்குதலில் இருந்து அவர் மயிரிழையில் தப்பித்தார்.

# அல்ஜீரியா தடுப்பாட்டம்; இங்கிலாந்து ஏமாற்றம்

(கேப்டவுன்)

அல்ஜீரியா அணிக்கு எதிரான லீக் போட்டியை சமனிலை செய்து இங்கிலாந்து அணி ஏமாற்றியது.

தென்னாபிரிக்காவில் நடைபெறும் உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் நேற்று முன்தினம் கேப்டவுனில் நடந்த சி பிரிவு லீக் போட்டியில் உலகத் தரவரிசையில் 8ஆவது இடத்திலுள்ள இங்கிலாந்து அணி 30ஆவது இடத்திலுள்ள அல்ஜீரியா அணியை சந்தித்தது.

இப் போட்டியில் முன்னாள் சம்பியன் இங்கிலாந்து அணி எளிதாக வெற்றிபெறுமென எதிர்பார்க்கப்பட்டது. எனினும் அல்ஜீரியா வீரர்கள் கடும் சவால் கொடுத்தனர். ஆட்டத்தின் 12ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் ஹைஸ்கி அடித்த பந்து இலக்கு தவறி பறந்தது.

அடுத்த நிமிடத்தில் அல்ஜீரியாவின் பவுகிரா நடத்திய தாக்குதலும் வீணானது.

தொடர்ந்து நைஜீரியாவின் எப்டா, மாட்போர் மேற்கொண்ட முயற்சிகளும் பலன் அளிக்க வில்லை. இங்கிலாந்து அணிசார்பில் நட்சத்திர வீரர்களான வெய்ன் ரூனே, ஸ்டீவன் ஜெரார்ட் டொரி உள்ளிட்டோர் கோல் அடிக்கும் வாய்ப் புக்களை கோட்டை விட்டனர். இரு அணிகளும் கோல் அடிக்காத நிலையில் முதல் பாதி ஆட்டம் மந்தமாக முடிந்தது.


### வெக்கம் ஏமாற்றம்

இரண்டாவது பாதியில் இங்கிலாந்து வீரர்கள் துடிப்பாக ஆடிய போதும் பினிசிங் இல்லாதால் கோல் அடிக்க இயலவில்லை. ஆட்டத்தின் 72ஆவது நிமிடத்தில் ஜெரால்ட் தலையில் முட்டி அடித்த பந்தை அல்ஜீரிய கோல் காப்பாளர் எமபோல்ஹி கடுமை யாகத்தடுத்தார்.

பின் 75ஆவது நிமிடத்தில் ரூனே அடித்த பந்தையும் அழகாக தடுத்தார் எமபோல்ஹி. இவ்வாறு கைக்கு எட்டிய வாய்ப்புக்கள் எல்லாம் வீணாக களத்திற்கு வெளியே இருந்து இங்கிலாந்து அணிக்கு உற்சாகமளித்த பெக்கம் வெறுப்படைந்தார்.

அல்ஜீரியா தற்காப்பு பகுதி வீரர்கள் கடைசி வரை உறுதியாகப் போராட, போட்டி கோல் எதுவும் அடிக்கப்படாமல் 0–0 என்ற நிறைவில் சமனிலையானது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன.

# சுலோவேனியா–அமெரிக்கா ஆட்டம் சமனிலையில் முடிவு



(ஜோகனஸ்பேர்க்)

உலகக் கிண்ண கால்பந்தாட்ட தொடரில் அமெரிக்கா–சுலோவேனியா மோதிய லீக் போட்டி 2–2 என்ற கோல் கணக்கில் சமனிலையில் முடிந்தது.

தென்னாபிரிக்காவில் 19ஆவது உலகக் கோப்பை கால்பந்தாட்டத் தொடர் நடக்கிறது.

நேற்று முன்தினம் ஜோகனஸ்பேர்க்கில் நடந்த சி பிரிவு லீக் போட்டியில் அமெரிக்கா, சுலோவேனியா அணிகள் மோதின.

### சுலோவேனியா ஆதிக்கம்

முதல் பாதியில் சுலோவேனியா அணி ஆதிக்கம் செலுத்தியது. ஆட்டத்தின் 13ஆவது நிமிடத்தில் நட்சத்திரவீரர் பிர்சா சுமார் 30 மீற்றர் தூரத்திலிருந்து பந்தை கோல் கம்பத்திற்குள் சிறப்பாக அடிக்க, சுலோவேனியா முதல் கோல் அடித்தது.

பின் 42ஆவது நிமிடத்தில் லுஜுபிஜான்கிக் ஒரு கோல் அடிக்க முதல் பாதி முடிபில் சுலோவேனியா 2.0 என வலுவான முன்னிலை பெற்றது.

### அமெரிக்கா எழுச்சி

இரண்டாவது பாதியில் அமெரிக்க அணி எழுச்சி கண்டது. 48ஆவது நிமிடத்தில் இந்த அணியின் டொனோவன் ஒரு அருமையான கோல் அடித்தார். 62 ஆவது நிமிடத்தில் சுலோவேனியா வீரர் பிர்சா பிரீகிக் வாய்ப்பை வீணாக்கினார். 82ஆவது நிமிடத்தில் அமெரிக்காவின் மைக்கல் பிராட்லீ ஒரு கோல் அடிக்க போட்டி 2–2 என சமனிலையானது. இரு அணிகளும் தலா ஒரு புள்ளி பெற்றன.




# ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடர்

# இந்திய அணி திரில் வெற்றி வெளியேறியது பாகிஸ்தான்

(தம்புள்ள)

சகல துறையிலும் ஜொலித்த இந்திய அணி 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் பாகிஸ்தான் அணியை வீழ்த்தியது.

இதன் மூலம் ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு இலங்கை, இந்தியா அணிகள் தகுதி பெற்றன.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகள் மோதும் ஆசியக் கிண்ணக் கிரிக்கெட் தொடர் இலங்கையில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று தம்புள்ளையில் நடைபெற்ற 4ஆவது போட்டியில் பரம எதிரிகளான இந்திய, பாகிஸ்தான் அணிகள் மோதின.

இப் போட்டியில் வெற்றி பெற்றால் மட்டுமே இறுதிப் போட்டி வாய்ப்பை பெறலாம் என்ற நிலையில் பாகிஸ்தான் அணி களமிறங்கியது.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49.3 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 267 ஓட்டங்களை எடுத்தது.

துடுப்பாட்டத்தில் சல்மான் பட் 85 பந்துகளில் (9 பவுண்டரிகள் உட்பட) 74 ஓட்டங்களையும் காம்ரன் அக்மல் 41 பந்துகளில் (2 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் உட்பட) 51 ஓட்டங்களையும் சொகைப் மலிக் 39, அப்ரிடி 32, பர்காத் 25 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் பிரவீன் குமார் 3 விக்கெட்டுக்களையும் சகீர்கான், ஹர்பஜன் சிங் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 268 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 49.5 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களையிழந்து 271 ஓட்டங்களைக் குவித்து 3 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

கடைசி ஓவரில் 7 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலையில் அமீர் வீசிய முதலாவது பந்தில் ரெய்னா ஒரு ஓட்டத்தை எடுத்தார். இரண்டாவது பந்துவீச்சை ஹர்பஜன் எதிர் கொண்டார். இதில் ரெய்னா ரண்அவுட் முறையில் ஆட்டமிழக்க போட்டி பரபரப்பானது.

இந்நிலையில் களமிறங்கிய பிரவீன் குமார் 3ஆவது பந்தில் 2 ஓட்டங்களையும் 4 ஆவது பந்தில் ஒரு ஓட்டத்தையும் எடுத்தார்.

இதன் மூலம் 2 பந்துகளில் 3 ஓட்டங்கள் என்ற நிலையில் 5ஆவது பந்துவீச்சை எதிர் கொண்ட ஹர்பஜன் சிங் சிக்ஸர் ஒன்றை விளாசி இந்திய அணியின் வெற்றியை உறுதிசெய்தார்.

துடுப்பாட்டத்தில் கௌதம் காம்பீர் 97 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 83 ஓட்டங்களையும் அணித்தலைவர் மகேந்திர சிங் தோனி 71 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 56 ஓட்டங்களையும் சுரோஸ் ரெய்னா 27 பந்துகளில் (2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் உட்பட) 34 ஓட்டங்களையும் ரோகித் சர்மா 22, ஹோலி 18, ஹர்பஜன் சிங் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சயிட் அஜ்மல் 3 விக்கெட்டுக்களையும் ரசாக், அப்ரிடி, மலிக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் இந்திய அணி தொடரில் 9 புள்ளிகள் பெற்று இறுதி போட்டிக்கு தெரிவானது.

இத் தொடரில் ஏற்கனவே பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளை வீழ்த்தி 9 புள்ளிகளைப்பெற்றுள்ள இலங்கை அணி இறுதி போட்டியில் இந்திய அணியை சந்திக்கிறது.



நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்ட அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த யாழ்.பெற்றோலிய கூட்டுத்தாபன அலுவலகத்தில் அதிகாரிகளை சந்திப்பதை படத்தில் காணலாம்.

## வடக்கை அபிவிருத்தி செய்யா...

நேரம் போதாது. எனவே இதனை விரைவாக ஆரம்பிக்க வேண்டும். சிரோனியன் பகுதியில் 11 வருடங்களாக நடைபெற்ற போரில் ஏற்பட்ட அழிவுகளை விரைவாக அபிவிருத்தி செய்தது.

போரின் பின்னரான நிலைமையை அங்கு விரைவாக வழமைக்குக் கொண்டு வந்திருந்தது. போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வட பகுதி மக்களின் வருமானம் அதிகரிக்கப்பட வேண்டும்.

அதனை அரசும் கொடையாளி நாடுகளும் மேற்கொள்ள வேண்டும். வடக்குக் கிழக்குப் பகுதிகளின் அபிவிருத்திப் பணிகளை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம். அதற்காக யப்பான் நிதியுதவி வழங்கியிருந்தது.

கணவரையிழந்த 40 ஆயிரம் பெண்களுக்குத் தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும் திட்டத்தை நாம் விரைவில் ஆரம்பிக்கவுள்ளோம்.

தனியாரின் முதலீடுகளைக் கவரும் பிரதேசமாக வடக்குப் பகுதியை மாற்ற வேண்டும். எதிர்வரும் இரு வருடங்களும் முக்கியமானவை.

போர் நடைபெற்ற பகுதிகளின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யாது விட்டால் அது அந்தப் பிரதேச மக்களிடம் வெறுப்பையும் விரக்தியையும் ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட யுகலா, பிரதமர் டி.எம். ஜயரட்ண உட்பட்ட பல முக்கியஸ்தர்களைச் சந்தித்திருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-5)

## அரசமைப்...

பான்மை நாடாளுமன்றத்தில் தேவைப் பட்டால் அதனையும் வழங்கத் தயார் என்றும் ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது. (ந-5)

## புதிய...

கூறினார்.

இக் கூட்டத்திற்குப் பின் கருத்துத் தெரிவித்த அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, யாழ்ப்பாணத்தில் புதிய பெற்றோலிய களஞ்சியசாலை ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

இக் களஞ்சியசாலை நாவற்குழியில் அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளோம். யாழ். மாவட்டத்தில் எரிபொருள்கள் விநியோகம் சீராக நடைபெறுகின்றது.

அத்துடன் மன்னார், மாங்குளம், கிளிநொச்சி மற்றும் பளை ஆகிய பகுதிகளில் 8 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் இரு வாரங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-5)

## பால்மா...

லேயே விற்பனை செய்யப்பட வேண்டும் எனவும் இன்றுமுதல் பொதியிடப்படும் பால்மா பைக்கெற்றுக்களுக்குப்புதிய விலையில் விற்பனை செய்ய அனுமதிக்கப்படும் எனவும் கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்சன் பெர்னாண்டோ தெரிவித்தார். (ந-5)

## இலங்கையை...

துள்ளார்.

இந்த அச்சுறுத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டியது இந்தியாவின் பொறுப்பு என அவர் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக இந்திய நிலப்பரப்பில் சீனர்களின் ஆதிக்கம் தொடர்பாக அந் நாட்டு அதிகாரிகள் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந-5)

## இனப்பிரச்சினைக்கான தீர்வை...

இலங்கைக்கு 20-வது தடவையாக விஜயம் செய்த யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாசி நேற்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் றொமேஸ் ஜெயசிங்க ஆகியோர் அரச தரப்பில் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பில் யசூசி அகாசியுடன் இலங்கைக்கான யப்பானியத் தூதுவரும் பங்கேற்றார். இச் சந்திப்பின் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தன்னிடம் கூறிய விடயங்களை முன்வைத்த அகாசி,

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ காலதாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அத்துடன் வன்னியில் போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் நலனில் அக்கறை செலுத்துமாறும் அவர்களை மீள்குடியேற்றுவதை விரைவுபடுத்த வேண்டும் எனவும் வலியுறுத்திய அகாசி,

இலங்கையின் அபிவிருத்திப் பணிக்கு யப்பான் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும் எனவும் உறுதியளித்தார்.

ஜனாதிபதியுடனான சந்திப்பை அடுத்து அகாசி நேற்றுத் தாயகம் திரும்பினார். (ந-5)

## சீபா...

றிருந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அந்த நாட்டுப் பிரதமர் உள்ளிட்ட முன்னணித் தலைவர்களுடன் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்த அனைத்து விடயங்களையும் கருத் தில் கொண்ட அரசாங்கம் சீபா உடன்படிக்கைக்கு இணங்க முடியாது எனத் தீர்மானித்துள்ளதுடன் இந்தத் தகவல்களை இந்திய அரசாங்கத்திற்கும் தெரியப்படுத்தியுள்ளது.

சீபா உடன்படிக்கைக்குப் பதிலாக இரு நாடுகளின் பொருளாதார ஒத்துழைப்புக்களை முன்னெடுத்துச் செல்வதற்குப் புதிய நடைமுறை ஒன்றை உருவாக்குவது குறித்து இரு நாட்டு அதிகாரிகள் அடங்கிய இரண்டு குழுக்களை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ந-5)


### வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம் K.K.S. வீதியில் சம்பியன் லேனுக்கும் தாவடிச் சந்திக்கும் நடுப் பகுதியில் (நந்தாவில்) 10 1/4 பரப்பு காணி 2 மாடிக் கட்டடத்துடன் (கீழ்த் தளம் 2 கடை, மேல்தளம் வீடு விற்பனைக்குண்டு. முகப்பு K.K.S. வீதிப் பக்கமாக சுமார் 130 அடி அகலம் கொண்டது.

தொடர்பு:- 077 7789739 (1726)

### சிங்கள வகுப்புகள்

அதி விரைவில் சரளமாக உரையாடுவதற்குப் பேச்சுச் சிங்களமும், பரீட்சைகளில் சித்திபெற இலக்கணச் சிங்களமும் கற்பிக்கப்படுகின்றது.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி — திருமதி ம.ஜெயஸ்ரீ
48, ராஜவீதி, நல்லூர்.
(கல்வியங்காடு சந்தை அருகாமை)
(C-481)

### உங்களுக்காய் படைக்கிறோம் நேசப்பூச்சரம்!

யாழ்ப்பாணத்தில்

### மக்கள்களரி நாடக விழா

செம்மணி வீதி, நல்லூர்
C.C.T.M பாடசாலை மைதானத்தில்
அமைக்கப்பட்டுள்ள மக்கள்களரி நகரும் நாடக அரங்கில்

ஜுன் 21ஆம் திகதி முதல்
ஜுலை 02 ஆம் திகதி வரை தினமும்

பாடசாலை மாணவர்களுக்காக மு.ப 9.00 மணிக்கு
ஏனையவர்களுக்கு பி.ப 6.00 மணிக்கு
மக்கள்களரி நாடகக் குழு அரங்கேற்றும்
விருதுகள் வென்ற பல்வேறு தமிழ் நாடகப்படைப்புகள்

சரண்தாஸ்
செக்கு
மாயப்பட்டாடை மற்றும் எருக்கலம் பூ
திருடன் வந்தான் மற்றும் தேவலோகப்பயணம்
மிருச்சக்கட்டிகம்
நெறியாள்கை - பராக்கிரம நிரியெல்ல

அபிஞ்ஞான சுகுந்தலம்
நெறியாள்கை — நவதர்ஷினி கருணாகரன்

தாள தாளம்
ரவிபந்து வித்யாபதி மற்றும் கோபாலகிருஷ்ணன் சத்தியன்
வடக்கு — தெற்கு தாளவாத்திய சிம்பனி

யாழ்ப்பாண வித்துவான்களின் கலை நிகழ்வுகளும்
திருமறைக் கலா மன்றம் வழங்கும்
அற்றைத் திங்கள்
கூத்து உருவ நாடகம்

(1667)

தொடர்புகளுக்கு - 0726111145

### நீதிக் கணக்கீடு

(புதிய பாடத் திட்டத்திற்கு அமைவானது)
வெளிவந்துவிட்டது

விலை ரூ. 2000/=

By. S.சிவதாஸ் [BBA(HRM.Spl)]

பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்

- பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு, யாழ்ப்பாணம்.
- ஸ்ரீலங்கா புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
- அன்னை புத்தகசாலை - யாழ்ப்பாணம்.
- Happy Book Centre - திருகோணமலை
- வாணி புத்தக நிலையம் - வவுனியா

(1735)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.06.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.